பிறந்தது எப்படியோ?

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பாரி நிலையம்

கண்ணன்

பிறந்தது எப்படியோ ?

பேராசிரியர்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1

முதற்பதிப்பு : ஜனவரி - 1951
இரண்டாம் பதிப்பு : மே - 1952

விலை ரூபா 2

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

மு ன் னு ரை

"பிறந்தது எப்படியோ?" என்ற கேள்வியோடு எழுகின்றது இந்தக் கட்டுரைத் தொகுதி. அந்தக் கேள்வியே முதல் கட்டுரையின் தலைப்பு. "இந்தக் கட்டுரைத் தொகுதி பிறந்தது எப்படியோ?" என்று யானே வியக்கின்றேன்.

இதிலுள்ள கட்டுரைகளிற் சில, வானொலியில் சிலம்பியவை; சில, கலைக்கதிரில் ஒளிர்ந்தவை; சில, தமிழ்முரசில் முழங்கியவை; சில, ஈழகேசரியில் எழுந்தவை; ஒன்று, கலைமகளைக் கவின் செய்தது; ஒன்று, கம்பர் மலரில் ஒரிதழ்; மற்றொன்று, பண்டிதமணி அவர்களின் மணிவிழாக் காணிக்கை மலர். இவை பிறந்த வகை இப்படித்தான்.

என்னுடைய பதினைந்தாம் ஆண்டிற்கு முன்னிருந்தே தமிழ் இதழ்களில் எழுதி வருகின்றேன்; ஆனால், எழுதியவற்றைத் திரட்டி வைக்கவேண்டும் என்று இதுவரையில் எண்ணவேயில்லை. திரட்டித் தந்தால் ஏதோ பயன் உண்டாகும் என்று நண்பர்களும், கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். அவ்வகையில் ஏனோ எண்ணம் செல்லவேயில்லை. கைம்மாறு கருதாத சில ஆசிரியர்களும் மாணவர்களும் வலிந்து தாமாகத் திரட்டிய சில கட்டுரைகளே இதுபொழுது முதல் தொகுதியாக வெளிவருகின்றன. இத் தொகுப்பால் உலகிற்கு ஏதோ பயன் உண்டாகுமென்றால், அப் பயனெலாம் அறம் அவர்களுக்கே உரியது. அவர்கள் முயற்சிக்கு என் நன்றி.

இத்தொகுப்பை அழகாக அச்சிட்டு வெளியிடப் பாரி நிலையம் பரிவுடன் முன்வந்தது. இதிலுள்ள கட்டுரைகளை முதலில் வெளியிட்ட நிலையங்களும் இவ்வாறு தொகுத்து அச்சிட இசைவு தந்தன. இவைகளுக்கும் என் உளமார்ந்த நன்றி.

எடுப்பார் கைப் பிள்ளையாய்ப் பிறந்தேன்; அவ்வாறே இது வரையில் வளர்ந்துவந்தது கண்டு வியக்கின்றேன். இத்தனையிலும் என்னுடையது என எதைக் கண்டு யான் களிப்பேன்? இத்தொகுப்பில் பிழையிருப்பின் அதுவாதல் என்னுடையது என்று களிக்கலாமென எண்ணுகின்றேன்; ஓங்கிய நன்மைகளெல்லாம் பிறருடையன! பிறருடையனவே!

இக் கட்டுரைத் தொகுதி தமிழுலகிற்குப் பயன்படும் என்று கருதிய அன்பர்கள் எண்ணம் அவன் அருளால் நிறைவேறுவதாக!

தெ. பொ. மீனாட்சிசுந்தரம்

பொருளடக்கம்

குறிப்பு :—1, 7, 9, 10 கட்டுரைகள் கலைக் கதிரிலும், 3, 4, 14 தமிழ் முரசிலும், 8 ஈழகேசரியிலும், 2 மணிமலர்த் திரட்டிலும், 5 கம்பர் மலரிலும், 6 கலைமகளிலும், 11 நற்றிணைச் சொற்பொழிவுகள் என்ற சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டிலும் வெளிவந்தவை; 12, 13 சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்.

1. பிறந்தது எப்படியோ?

“நீலக்கடலுடன் போட்டி இடுகிறது நீலப் பெருவானம். தளராது கருங்கடல் போட்டி இடுவது கண்டு கருவானத்திற்கு மனம் எரிகிறது போலும்! அதற்கு உடலெல்லாம் எரிகிறது. செம்பொன்னை உருக்கி வார்த்தாற்போல அது செக்கச்சிவந்து சினந்து நிற்கின்றது:” இப்படி ஒரு புலவர் மாலையில் வளர்கின்ற செவ்வானத்தைப் பற்றி எண்ணிக்கொண்டே போகிறார். அவருடன் செல்கிற கிழவர் ஒருவர், செவ்வானத்திடையே, மேகம் ஒன்று, பிள்ளையார்போலத் துதிக்கையும் தொந்தியுமாய்த் தோற்ற மளிப்பதனைக் கண்டு, பளபள எனத் தாடையில் அறைந்து கொள்கிறார்.

பச்சைப்பசேர் என விளங்கும் வயல்களுக்கு அருகே ஒரு தெரு வந்து முடிகிறது. ஓர் அரசமரமும் ஒரு வேப்ப மரமும் ஒன்றாக இணைந்து வளர்ந்துள்ளன. இந்த மரத்தின் கீழே கற்பிள்ளையார் காட்சி அளிக்கின்றார். வருகின்றவர்கள் போகின்றவர்கள் தங்கள் தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுகின்றனர் பிள்ளையார்முன்.

இளங்குழந்தைகள் கோயிலைச் சுற்றி மணலில் ஓடி ஆடி விளையாடுகின்றன. ஒரு மூலையில் தாய் ஒருத்தி தன் பெண் குழந்தைகளை உட்காரவைத்துக்கொண்டு அன்பு கனியத் தமிழ்ப்பாடல் பாடித் தமிழை ஊட்டுகின்றாள். மாலைத்தென்றலில் மெல்ல அசைந்து பச்சிளங் கொடியோடு சாய்ந்தாடுகிறது நாடோடித் தமிழ்ப்பாட்டு:

“பிள்ளையார் பிள்ளையார்—அவர்
எங்கோயோ பிள்ளையார்!

கத்தரித் தோட்டத்திலே—களை
கொத்துகிறார் பிள்ளையார் ;
அங்கேயும் போய்ப்பார்த்தேன்—அவர்
எங்கேயோ பிள்ளையார் !—(பிள்ளையார்) ''

என்றெல்லாம் பாடுகின்ற பாடலை அறியாத தமிழன் உண்டோ ?

" பிள்ளையாருக்கு உண்டை சுட்டு, சுண்டல் படைப்பது என்றைக்கு ?" என்று வாயில் நீரூரக் கேட்கின்றது ஒரு குழந்தை. " நாளைக்கு ஆவணி பிறக்கிறது. வருகிற வெள்ளியன்று பிள்ளையார் சதுர்த்தி; அன்றைக்கு உண்டை கொழுக்கட்டை சுண்டல் பழம் எல்லாம் படைத்து உண்ணலாம் '' என்று அந்தக் குழந்தையை அணைத்துக்கொண்டு தாயானவள் தழுதழுத்துப் பேசுகின்றாள். " எருக்கம்பூ மாலையல்லவா போடவேண்டும் ?" என்கிறாள் மூத்த மகள். " அறுகம்புல் மாலையும் கட்டவேண்டும் '' என்கிறாள் அடுத்த மகள்.

இதற்குள் நன்றாகப் பொழுது சாய்ந்துவிடுகிறது. அந்தப் பொழுதுக்கு ஏற்ற இசை நாட்டையாம். கோயிலில் நாகசுரம் முழங்குகிறது. இசைப்பாட்டு அறிந்த அன்பர் ஒருவர் அந்த நாகசுரப் பாட்டைச் சொல்சொல்லாகப் பிரித்துப் பாடுகிறார் :

" பிடியதன் உரு உமை கொள..."

சிறிது தொலைவு சென்றதும் ஓர் இசை அரங்கு சிறப்புடன் நடக்கிறது. இசைப்புலவர்—

" வாதாபி கண பதிம் பஜே......"

என்ற தீக்ஷிதர் கீர்த்தனையை ஹம்சத்தொனி இராகத்தில் தம்மையும் மறந்து நீட்டிநீட்டிப் பாடுகின்றார்.

அடுத்ததொரு தமிழ் இசை அரங்கில்,

" கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி..."

என்று வாயினிக்கக் காது இனிக்கக் கருத்து இனிக்கப் பாடுகின்ருர் தமிழ் இசைப்பாவாணர் ஒருவர். அந்தத் தெருக்காட்சி கண்டு மற்ருெரு தெருவுக்குள் புகுகின்ருேம். இராப்பள்ளிக்கூடம் தொடங்குகிறது. "வேழ முகத்து விநாயகன்" என வரும் பாடலைப் பாடிப் பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை நடைபெறுகிறது. அந்த ஊரில், ஒரு யோகச் சாமியார் குழந்தைபோல் விளையாடி வருகிருர் :

> "சீதக் களபச் செந்தா மரைப்பூம்
> பாதச் சிலம்பும் பலவிசை பாட"

என்று தொடங்கி வரும் அகவலைப் பாடி ஆருதாரம் முதலிய யோகநிலைகளை விளக்குகின்ருர் ; ஓங்கார வடிவாய்ப் பிள்ளையார் உள்ளுக்குள்ளே ஒளிர்கின்ற நிலையையும் தெளிவுறுத்துகின்ருர்.

பிள்ளையார் பேச்சு இதோடு நிற்கவில்லை. சிவன் கோயில் திருவிழா நடந்தாலும் கதவை அடைத்துக்கொள்ளும் வீரவைணவர்கள்-மறந்தும் புறம் தொழா மாந்தர்கள்-அந்த ஊரிலுள்ள பெருமாள் கோயிலில் கூடி இருக்கின்றனர். முதலில் அவர்கள் ஒரு வடிவத்தின் எதிரே நிற்பதைக் காண்கின்ருேம். அங்கே ஒரு திகைப்பு ஏற்படுகின்றது. தொந்தியும் துதிக்கையுமாய்ப் பிள்ளையாரின் வடிவே தோன்றுகிறது.

"வைணவர்கள் பிள்ளையாரை வழிபடலாமா ?" என்று சிவக்கிறுக்கர் ஒருவர் கேட்கின்ருர்.

"பிள்ளையாராவது தொள்ளையாராவது ? இவர்தாம் சேனை முதலிகள்" என்று வீருப்புடன் பேசுகின்ருர் ஒரு வீரவைணவர். அதனேடு அவர் உள்ளே நுழைந்து விடுகின்ருர்.

எதிரே காட்டேறி கும்பிடுகிருர்கள் ; கரிய கோழியின் கழுத்தை முறுக்குவதற்குமுன்,[1] சாணிப்பிள்ளையார் அங்கு ஒன்று வைத்துத்தான் வழிபடுகின்ருர்கள்.

சந்தியில் ஒரு பாற்பொங்கல், அடுத்த வீட்டில் நவக்கிரக சாந்தி, மேல்வீட்டில் சீமந்தம், பக்கத்து வீட்டில் தலைக்கட்டு - இவற்றிலெல்லாம் மஞ்சள் பிள்ளையார் இன்றி ஒன்றும் தொடங்குவது காணேம். நலத்திற்கும் நல்லாப் பிள்ளையார் ! பொலத்திற்கும் பொல்லாப் பிள்ளையார் !

புலவர்களையும் பிள்ளையார் விட்டபாடில்லை. "செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்" சிவஞான யோகிகளின் திறமை எல்லாம் காட்டும் ஒரு நூல். அவருடைய மாணவர் கச்சியப்பர் தம் கல்விச் செருக்கில் களித்த களிப்பில் எழுந்த இறுமாப்பெல்லாம் விநாயக புராணமாகச் சென்னையில் வெளிவந்தது. சிலர் பழந்தமிழிலும் கபிலர் பாடியுள்ளார் என்பர். மூத்தபிள்ளையார் இரட்டைமணிமாலை, கபிலர் பாடியது எனப் பதிஞேராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. பெரிய நூலோ, சிறிய நூலோ பெருங் காப்பியமோ சிறு காப்பியமோ எல்லாவற்றிற்கும் முதலில் காப்புப்பாடலாக வருவது பிள்ளையார் வாழ்த்தே. இக்கட்டுத் தீர்க்கும் பிள்ளையார் இல்லாத இடமே இல்லை. எங்கும் பிள்ளையார் ! எல்லாம் பிள்ளையார் !

இதைஎல்லாம் எண்ணிக்கொண்டே ஆற்றங்கரையில் உட்காருகின்றேன். கோடைவெயிலில் குழம்பிய மூளை, குளிர்ந்த காற்று வீசவீச, அந்த ஆற்றுநீர் ஓடைபோலச் சிறிது தெளிவடைகிறது. "வந்தவா றெங்ஙனே போமாறேதோ !" என்ற அடி நினைவிற்கு வருகிறது. "இந்தப் பிள்ளையார் வந்தவாறு யாது ?" என்று ஒரு கேள்வி பிறக்கிறது — ஏதோ ஒரு மூலையில் — என் மூளையில். கல்லூரியில் யான் கற்ற வரலாற்று நூல் உண்மைகள் எல்லாம் என் கருத்தெதிரே கூத்தாடுகின்றன. வரலாற்று உணர்ச்சி மிக நுட்பமாக வளர்ந்திருப்பதன்றே இந்நாளைய நாகரிகத்தின் அறிகுறி ? தொல்காப்பியத்தை நினைத்துப் பார்க்கின்றேன். மாயோன், சேயோன், வருணன், வேந்தன்,

கொற்றவை—இந்தக் கடவுளர் தோன்றுகின்றனரே அன்றி, வேழமுகனைக் காணோம். சங்க நூற்களை எண்ணிப் பார்க்கின்றேன். கதிரவன், காளி, கூளி, காற்று, காடுகிழாள், நப்பின்னை, பலராமன்—இவர் அல்லாமல் தும்பிக்கை ஆழ்வாரெனப் படுவார் அங்கே தோற்றம் அளிக்கவில்லை. மணிமேகலை, சிலப்பதிகாரம், பதினெண் கீழ்க்கணக்கு எனப் படிப்படியாக இறங்கிவருகிறேன். பழங்காலத்திலிருந்து புதுக்காலத்திற்கு வருகிறேன். இன்று எங்கும் பேசப்படும் பிள்ளையார் பேச்சு அங்குக் காணவே காணோம். பிள்ளையார் என்றால் முருகப்பெருமான் என்ற பொருளிலேயே நச்சினார்க்கினியரும் உரை எழுதிப் போகின்றார்.

ஆனால், ' கபிலர், மூத்தபிள்ளையார் இரட்டை மணிமாலை பாடி இருக்கவில்லையா ?' என்று கேட்கலாம். இது வரையும் கூறிவந்ததிலிருந்தே மூத்த பிள்ளையாரைப் பாடியவர் சங்க காலத்துக் கபிலர் அல்லர் என்பது தெளிவாம். கபில தேவ நாயனார் என்பவரே அந்நூலைப் பாடியவர். அந்த நூலின் நடையே அது சங்க காலத்திற்குப்பின் எழுந்தது என்று கோள் சொல்லிவிடுகிறது.

முதன்முதல் கணபதி என்ற பெயர் கேட்கப்படுவது " கணபதீச்சுரம் " என்ற தொடரில்தான். இந்தக் கணபதீச்சுரம் என்ற கோயிலைக் கட்டியவர் சிறுத்தொண்ட நாயனாரே யாவர்.

> " பொடிநுகருஞ் சிறுதொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
> கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சுரத்தானே "

என்று திருஞான சம்பந்தர் இந்த உண்மையை வெளிப்படுத்துகிறார். இச் சிறுத்தொண்டர் ஞானசம்பந்தரோடு உடன்வாழ்ந்தவர். கணபதீச்சுரம் என்பது திருச் செங்-காட்டங்குடியில் உள்ளதொரு கோயில். இக் கோயிலைக் கட்டிய சிறுத்தொண்டரே ஞானசம்பந்தரைப் பாடுமாறு

கேட்டுக்கொண்டாராம். இதனை ஞானசம்பந்தரே நமக்குத் தெரிவிக்கின்றார் :

" செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பின் சிறுத்தோண்டன் அவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்காரே. "

இச் சிறுத்தொன்டரைக் கன்னவில் தோள் சிறுத்தொண்டர், செரு அடி தோள் சிறுத்தொண்டர் என்று சம்பந்தர் பாராட்டுவதால் அவர் சிறந்த தோள்வலி சான்ற வீரர் என்பது தெளிவாகின்றது.

சோழ சாம்ராஜ்யத்தின் அமைச்சராக இருந்த சேக்கிழார், தமக்கு ஏற்பட்டிருந்த வாய்ப்பினைப் பயன்படுத்திச் செய்த ஆராய்ச்சியின் பயனாகச் சிறுத்தொண்டர் தமிழ்ப் படையின் தலைவராய் வடக்கே சென்று வாதாபியைக் கைக்கொண்ட வரலாற்றைப் பெரியபுராணத்திற் பாடுகின்றார்.

தமிழர் வாதாபியை வீழ்த்தியது கி. பி. 641—42 என வடநாட்டு வரலாற்றுச் சான்றுகள் முழங்குகின்றன. வீழ்த்தியவன் பல்லவ அரசனான நரசிங்கவர்மன். தோற்றவன் புலிகேசி என்னும் மாபெருவீரன். இந்த வீரன் இந்தியப் பேரரசனான ஹர்ஷரையே புறங்கண்டவன். ஹர்ஷரைப் பற்றி நம்முடைய பள்ளி மாணவர்கள் பல ஆண்டுகளாகப் படித்துவருகின்றனர். அவனை வென்ற புலிகேசியையும் மராட்டியர் அறிவர். இவர்களை எல்லாம்விடத் தலை சிறந்த வீரனாக விளங்கிய மகாபலிபுரத்து மாமல்லனும் நரசிங்கவர்மனைத் தமிழ் மாணவர் பேரளவிலேனும் அறிவார்களா என்பது ஐயத்திற்கு இடமாம். இமயத்தில் தமிழ்க்கொடியைப் பொறித்த காலம் சங்ககாலம். வடநாட்டு அரசரை எல்லாம் அதற்குப்பின் தலைவணக்கிய பெருமை நரசிங்கவர்மனுக்கேயாம். இந்த நரசிங்கன்

தகப்பனே மகேந்திரவர்மன். அவனை அன்ஞே திருநாவுக்கரையர் சைவனுக்கினுர் ! அவன் தென்னுட்டில் நிலையான கற்கோயில்களைக் கட்டி இன்றுவரையில் சைவத்தை நிலை நாட்டியுள்ளான்.

இந்த நரசிங்கவர்மனது படைத்தலைவராக இருந்தவரே சிறுத்தொண்டர். அவரது வாதாபி வெற்றியைக்கொண்டே சம்பந்தர் காலத்தை வரையறுக்கமுடிகின்றது. தொந்திக் கணபதியும் வாதாபியிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தவரே யாவர். அதனுலேயே பல இடங்களிலும் கணபதிக்கு வாதாபி கொண்ட கணபதி என்று பெயர் வழங்குகிறது. வாதாபியில் வெற்றிதந்த நன்றியைப் பாராட்டியே கண பதீச்சுரம் என்றகோயில் ஒன்று எடுத்தார் சிறுத்தொண்டர். அன்று முதலே தமிழ் நாட்டில் கணபதியின் திருவிளை யாடல் செழித்து வளரத்தொடங்கியது.

“ கரியின் மாமுகம் உடைய கணபதி தாதை ” என்றும், “ தந்த மதத்தவன் தாதை ” என்றும் சம்பந்தர் பாடினுர். விநாயக புராணத்தையே, “ பிடியதன் உரு ” எனச் சம்பந்தர் பாடியதை இன்றும் காப்புப் பாடலாகத் தேவாரம் பாடுவோர் நாட்டை இசையில் பாடி வருகின்றனர். திருநாவுக்கரையரும், “ பலபல காமத்த ராகிப் பதைத் தெழு வார்மனத் துள்ளே, கலமல கிட்டுத் திரியுங் கணபதி என்னும் களிறும்........................உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை ” என்று பெரு மிதத்தோடும் பாடுகின்ருர். கணபதி, வாதாபி நாட்டுக் கடவுள். மஹாராஷ்டிரருடைய தனிப்பெருந் தெய்வம் விநாயகரேயாம். விநாயக சதுர்த்தி தேசியத் திருவிழாவாகப் பேராரவாரத்துடன் இன்றுங் கொண்டாடப்படுவது மராட்டிய நாட்டில்தான். பீஷ்வாக்களது அரண்மனையில், கணேஷ் மஹால் என்ற கணபதி மண்டபந்தான் மிகப் பெரிய மண்டபம். பம்பாய்ச் சேட்டுக்கள் வருவதற்கு முன்னரே அவர்கள் நாட்டுக் கணபதியார் தமிழ் நாட்டிற்

புகுந்து தெருக்கோடிகளை எல்லாம் கைப்பற்றிக்கொண்டு ஆற்றோரத்திலும் குளக்கரையிலும், வேம்படி விநாயகராகவும் அரசமரத்துப் பிள்ளையாராகவும் வீற்றிருப்பதோடு ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் பூசைப்பெட்டிக்குள் நுழைந்துகொண்டு நாள்தோறும் பொழுது விடிந்ததும் வழிபாட்டினைத் தவறாது பெற்றுவருகின்றார்.

இஃது ஒரு வியப்பு! தோற்றவரின் கடவுள் வென்றவரின் கடவுளாய் விளையாடுகின்ற காட்சியை வேறு எங்குக் காண முடியும்? இதுதான் தமிழ்ப் பண்பாடு! "தோற்றோருடைய கடவுள், வென்றோரைப் பின் பழிக்குப் பழி வாங்குவார்" என்று அஞ்சினார்கள் தமிழர்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. அச்சத்தைவிட அன்பே சிறந்து விளங்குகிறது. தோற்றவர்களுடைய மனம் நோவாதபடி அவர்களது கடவுளையே தம் கடவுளாகக் கொண்டு ஓர் இனமாகச் சேர்ந்து வழிபடும் ஒப்புரவு நிலையே தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெருஞ் சிறப்பாம். 'ஓண்டவந்த பிள்ளையார் ஊர்ப்பிள்ளையாரை ஓட்டிவிட்டார்.' சங்க காலத் தெய்வங்களில் எத்தனையோ தெரியாமல் மறைந்து போயின. வேற்றூரில் இருந்து வந்த பிள்ளையார் எனக் கனவிலும் கருத முடியாதபடி தமிழ்ப் பிள்ளையாராகக் கணபதி ஆகிவிட்டார். என்றும் வழங்கும் கதைகளை எல்லாம் அவர்மேல் ஏற்றி விநாயகபுராணம் பாடிக் களிக்கின்றனர் எல்லோரும். பிரம்மசாரிப் பிள்ளையார், சித்தி புத்தியோடு விளங்கும் பிள்ளையார், கையாறுக் காதலில் திளைக்கும் பிள்ளையார், ஒரு முகப் பிள்ளையார், ஐந்து முகப் பிள்ளையார், ஆயிரமுகப் பிள்ளையார், ஆயிரங்கைப் பிள்ளையார், எச்சில் பிள்ளையார், ஓங்காரப் பிள்ளையார், முக்குறுணிப் பிள்ளையார், அச்சிறுத்த பிள்ளையார், விகட சக்கரப் பிள்ளையார், பாரதம் எழுதிய பிள்ளையார், ஔவை கிழவிப் பிள்ளையார், யோகப் பிள்ளையார், ஆதாரப் பிள்ளையார் என்று எத்தனையோ பேர்களுடன் பிள்ளையார் தமிழர்

மனத்தை நீராயுருக்கி மகிழ்வித்துவருகின்றூர். “மலமே பெருச்சாளியாம் ; அதனை அடக்கி ஆளும் ஓங்கார ஒளியே பிள்ளையாராம்”—இப்படித் தத்துவார்த்தமும் கூறுகின் றனர். வாழ்க பிள்ளையார் ! வந்தவரை எல்லாம் நம்மவ ராக்கும் தமிழ்ப் பண்பாடு வாழ்க !

---

2. முத்தமிழ்

முத்தமிழ் என்ற வழக்கு நம் தமிழ் மரபாகும். ‘தெரி மான் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்’ என்பது பரிபாடல். முத்தமிழ்க்கும் இலக்கணம் கூறும் மூவுறுப்பு அடங்கிய பிண்டமே அகத்தியம் எனப் பண்டைத் தமிழ் உரையாசிரியர்கள் எழுதிவைத்துள்ளனர். சிலப்பதிகாரம் முத்தமிழ் இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குகிறது என அடியார்க்குநல்லார் உரைவழியே அறிகின்றோம். திருக்கச்சூர்க் கல்வெட்டு ஒன்று (M. E. R., 377 of 1906) முத்தமிழாசிரியர் பெருநம்பி என்பவரைப்பற்றிப் பேசு கின்றது. இன்றும் நம் பள்ளிச் சிறுவர்கள், ஔவையார் வாயால், “சங்கத்தமிழ் மூன்றும் தா” எனக் கடவுளை வேண்டிநிற்கின்றனர்.

முத்தமிழாவன இயல், இசை, கூத்து என யாவரும் அறிவர். கூத்து என்பது ‘நாடகக் காப்பியம்’ அன்று; பரதநாட்டியம் என்றும், ‘Dance’ என்றும் வழங்குவன-வற்றோடு ஒத்ததொன்று : இவை ஆங்கிலத்தில் ‘Fine arts’ என வழங்கும் இன்னியற் கல்வித் துறைகளோ என ஐயுறலாம். ஆனால், ஓவியம் முதலியன முத் தமிழில் பிரித் தெண்ணப்படவில்லை. வடமொழியாளர் 64 கலைகள் எனக் கல்வித்துறைகளை வகுத்த முறையும் இதற்குப் பொருந்துவ தில்லை. ஆகவே, இவ்வாறு மூன்று எனத் தமிழர் வகுத்த-தன் உண்மை நோக்கம் யாது என்ற கேள்வி பிறக்கிறது.

இயற்றமிழானது சொற்களால் ஆயது. சொல்லோ ஒலிவடிவம். இசையும் ஒலிவடிவே. இவ் விரண்டற்கும் வேற்றுமை என்னை? சொல்லோ நம் எண்ணத்தைச் சுட்டும் அறிகுறி; அஃது ஒலியாகவும் எழலாம்; எழுதும் எழுத்தாகவும் அமையலாம்; ஓவியமாகவும் முடியலாம். ஆனால், இவற்றால் குறிக்கப்படுவது மனத்தெழும் கருத்துக்களேயாம். நம் எண்ணம் எல்லாம் சொல்வடிவே என்பர் சிவஞான போதப் பேருரையாளர் ; பேசும்போது எழும் ஒலி, வானிற் பிறக்கும் அசுத்த மாயா காரியமாயினும், அது குறிப்பது எண்ணமேயாதலின், சொற்கள் அவ் வகையில் சுத்த மாயா காரியமே என்பர். பெனிடெட்டோ க்ரோசே (Benedetto Groce) என்ற இத்தாலியப் பேராசிரியரும் சொல்லில்லையேல் எண்ணமில்லை என்பர். ஆனால், இசையோ, நம் உணர்ச்சிக்குப் போக்குவீடாக எழும் இயற்கை ஒலியாகும். அஃது அறிகுறியன்று. அஃதே பொருள். இன்பஒலியும் துன்பஒலியுமாக இசை வெளி வருகின்றது. நோதிறம் எனத் தமிழர் ஓர் இசைக்குப் பெயரிட்டனர் அன்றோ ? ஆகவே, மனக்கருத்தின் அமைதியே இயற்றமிழ். இயற்கை வாய்ஒலியின் அமைதியே இசைத்தமிழ். மெய்யின் இயக்க விளக்கமே கூத்துத்தமிழ். இவ்வாறு, உயிர், முத் திறத்தாலும் தன்னியல்பை வெளிப்படுத்து நிலையில், சிறப்பாக விளங்குவன முத்தமிழாம்.

மேல்நாட்டு உள்ளத்தியற்கை நூலாசிரியர்கள், மனமானது அறிவுநிலை, உணர்ச்சிநிலை, செயல்நிலை என முத் திறப்பட்டது எனக் கூறிவந்தனர் ; இவை வெவ்வேறு நிலைகளாகா ; நெருப்பில் கூடும் ஒளியும் வடிவும் ஒன்றாய் விளங்குதல்போல் ஒற்றித்து நிற்பன என இதுபோது கூறுகின்றனர். நம் நாட்டு அறிஞர்களும் விருப்பாற்றல், அறிவாற்றல், செயலாற்றல் என்றும், இச்சாஞானக்கிரியா சக்திகள் என்றும் பேசிவந்தனர். இசை, இன்பஒலியும் துன்பஒலியுமாக எழக் காண்கின்றோமாதலின் உணர்ச்சி

நிலை அல்லது விருப்பாற்றலின் இயக்கம் அஃது எனலாம். மனக்கருத்தை விளக்கும் இயற்றமிழ், அறிவுநிலை அல்லது அறிவாற்றலின் இயக்கம் எனலாம். செயல்நிலை அல்லது செயலாற்றலின் இயக்கமே கூத்துத்தமிழாம். எனவே, மனத்தின் இயக்கமாக எழுகின்றவை அனைத்தும் இவற்றி லடங்கவே வேண்டும். இப் பாகுபாடு இவ் வகையில் இயற் கைக்கும் இலக்கணத்திற்கும் பொருத்தமாகும்.

வீட்டுநெறியெனும் மெய்யுணர்வே அறத்துப்பாலின் முடிபாதலின், அறம், அறிவு நிலையின் பயன் எனலாம். உலகில், மக்கள், அரசும் குடிகளுமாய் வாழும் வாழ்க்கை-யைக் கூறும் பொருட்பால், செயல் நிலையின் பயன் எனலாம். முடிந்த முடிபாம் இன்பத்துப்பால், உணர்ச்சி நிலையின் பயன் எனலாம். "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை" எனத் தொல் காப்பியனார் தமிழ் ஒழுக்கம் கூறினார். எனவே, முப்பாலும் முத்தமிழாக முடிகின்றன. காதலை வீணைச் செல்வம் எனச் சிந்தாமணி கூறுவதினின்றும் இசையும் இன்பமும் ஒன்று தல் விளங்கும்; எனவே இயற்றமிழ் அறமாம்; கூத்துத் தமிழ் பொருளாம்.

உலகப் பொருள்களின் இயல்பாகச் சத்துவ இராசத தாமத குணங்களையும், காத்தல் படைத்தல் அழித்தல் என்ற செயல்களையும் கூறுவர் அல்லரோ? இவை கீழ் நிலையிற்றோன்றும் அறிவுநிலை விளக்கமாகவும் செயல்நிலை விளக்கமாகவும் விருப்புநிலை விளக்கமாகவும் முறையே கொள்ளத்தக்கன என்பர், திரு. பகவான்தாசர். அவர் தாம் எழுதிய 'அமைதி நூல்' என்பதனுள், வீடுபெற்று நின்ற மேனிலையில் இறைவனியல்பாக விளங்கும் உண்மையும் அறிவும் இன்பமும் [சச்சிதானந்தம்] மேனிலையிற்றோன் றும் செயல்நிலையும் அறிவுநிலையும் விருப்புநிலையுமாக முறையே அமைகின்றன என்றும், இயங்காதிருக்கும்போது ஒரு பொருளுண்மையினை உற்று நோக்கியறியாத நாம்

அஃது இயங்கும்போது எளிதின் அறிதலின் உண்மைத் தன்மையைச் செயனிலை விளக்கமாகக் கொள்வது பொருத்தமே என்றும், அறிவு, அறிவுநிலையின் விளக்கமாதலினும் இன்பம், விருப்புநிலை விளக்கமாதலினும் ஐயம் ஒன்றும் எழுதற் கிடமில்லை என்றும் கூறுகின்ருர். அறியும் ஆன்ம அறிவு குறைநீங்கி, நிறைவாம் வீட்டுநிலையில் மெய்யறிவு நிலையாக விளங்க, எங்கும் நிறைந்த இறைவன் அடிப்படையான உண்மைநிலையாக விளங்க, மயக்கி நின்ற இருளுலகம் முற்றும் மாறி இன்பநிலையாக விளங்க இவ்வாறு இவை மூன்றும் ஒற்றித்து முதிர்ந்து பழுத்து முற்றிநிற்கும் முத்திநிலையும் முத்தமிழ் நிலைதானே !

" முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
இன்பங் கொடுத்தலிறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொளப் பா "

என்பது காண்க.

இவ்வாறு உயரப் பறப்பதைவிட்டு மண்ணிற்றவழ்ந்து வரும்போதும் முத்தமிழ்க் கொள்கையின் பெருமை விளங்குகிறது. இக்காலத்துக் கல்வி, அறிவுநிலை ஒன்றையே வளர்க்கின்றது. இதன் பயனுகத் தலைகொழுத்து உள்ளம் வற்றி உடல்வாடி நிற்கின்ற மக்களையே காண்கின்ருேம். போரும் மூண்டெரிகின்றது. முத்தமிழ் நெறியே கல்வி கற்றிருந்தால் முழுமன மலர்ச்சி பெற்ற சான்ருேர்களாய்த் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கியிருப்பர் அல்லரோ ? ' சங்கத் தமிழ் மூன்றுந்தா ' என எல்லோரும் வேண்டுதல் இன்றியமையாததன்ருே ?

மற்றுமொரு வகையால் முத்தமிழ்க் கொள்கையை ஆராயலாம். நமக்கு அமைந்தன மூன்று கருவிகள். அவை மனம் மொழி மெய் என்பன. இவை பண்பட்ட நிலையைத் ' திரிகரண சுத்தி ' என்பர் வடமொழியாளர். தமிழர் இதனைத் தம் மொழியில் மிக அழகாக விளக்கி வைத்துள்ளனர். உள்ளத்தின் இயற்கைநிலையே அதன் தூய நிலை-

யாகும். ஓர்த்து உள்ளது உணர்வதே அந் நிலையாம். அதனை உண்மை-உள்மெய்-என்றனர்.(மை என்பது மெய்என்பதன் திரிபாக விளங்குவதை மொழி நூலாராய்ச்சியாளர் எடுத்துரைப்பர். ஆகவே உண்மை என்பது உள்ளத்தின் இயல்பு அல்லது வடிவம் எனப் பொருள்படும் ; மெய்ம்மை என்பது அங்ஙனமே உடலின் இயற்கை என்றும், வாய்மை என்பது வாயின் இயற்கை என்றும் பொருள்படுமாறு காண்க.) வாயின் இயல்பு தீதின்றி நன்று பயக்கும் வாய்மையேயாம். மெய்யின் இயல்பு பொய்படாதொழுகும் ஒழுக்கமாம் மெய்ம்மையேயாம். உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற தனித்தமிழ்ச் சிறப்புச் சொற்கள் முத்தமிழின் இயல்பை விளக்க எழுந்தனபோன்று அமைந்துள்ளன. இன்பமாய்ப் பொங்கி அறிவாய் விளங்கும் உள்பொருளை, உள்ளத்தாலும் வாயாலும் மெய்யாலும் வழிபட்டு, அதுவாய் நிற்கும் முறை இதுவேயாகும். தூய மனத்தில் பொங்கி எழுந்தது இயற்றமிழ். தூய வாயின் முழக்கமே இசைத்தமிழ். தூய மெய்யின் இயக்கமே கூத்துத்தமிழ். இவை மூன்றும் உண்மைக்கு மாறாக இருத்தலாகாது என்பது தமிழர் கண்ட முடிபு. இவற்றின் ஒற்றித்த வடிவமே முருகு எனும் அழகாம். உணர்ச்சிநிலையின் அழகை யாவரும் அறிவர். ‘கல்வி யழகே யழகு’ என அறிவு நிலையையும் அழகாகக் கண்டனர் நாலடி பாடிய தமிழர். ‘ஒழுக்கத் தழகு’ எனச் செயல்நிலை அழகினையும் அழகாகக் கண்டார் தமிழ் வில்லியர். கிரேக்கர்கள் உண்மை, அழகு, நன்மை என்பவற்றைப் பொன்னுலான முக்கோணமாகப் பாராட்டிவந்தனர். உண்மை என்பது அறிவையும், அழகு உணர்ச்சியையும், நன்மை ஒழுக்கத்தையும் குறிப்பனவாகலின் அவையும் முத்தமிழ்க் கொள்கையை விளக்குதல் காண்க. ஆனால், கிரேக்கர்க்கு அவை குறிக்கோளாக விளங்கத் தமிழர்க்கு இவை கல்வி முறையாகி அன்றாட வாழ்க்கையாய் விளங்கின. முத்தமிழ் எனக் கொண்டதால் எல்லாவற்றையும் அழகு என

முடிப்பது தமிழர்க்கு எளிதாயிற்று. பரத நாட்டியத்திலும் பாவம் எனும் மனக்குறிப்பும், ராகம் எனும் இசையும், தாளம் என்பதும் ஒத்தியைதல்வேண்டும் என்றனர் வட மொழியாளர். முத்தமிழை வெவ்வேருகப் பிரித்துப் பேசினுலும் பிரிக்க முடியாதபடி ஒன்ருய் மனக்கருத்தாய் அரும்பி, இசையாய்ப் பூத்துக் கூத்தாய்ப் பழுத்து முற்றிய போதுதான் உயரிய வாழ்க்கையாய் இனிக்கக் காண்கிருேம். கண்ணன் மறைமுடிபு ஓதிப் புல்லாங்குழலூதிக் குடக் கூத்தாடுகின்ருன். சிவபெருமான் ஆலின்கீழ் அற முரைத் துச் சாமகீதனுய் மிக நல்ல வீணை தடவி இன்பக் கூத்தாடிக் கூத்தரெனச் சிறப்படைகின்ருன். பேரறிவு நிலைபெற்ற பெரியோர்களும், 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என்றபடி உண்மை நிலை மறவாத அறிவாற்றலும், அன்பாய் விளங்கும் விருப்பாற்றலும், அரன் கழல் செலும் செயலாற்றலும் பெற்று விளங்குகின்றனர். அவர்கள் இயலும் இசையும் கூத்தும் இருந்தபடி அஃது. 'ஆடுகின் றிலை கூத்துடையான் கழற் கன்பிலை என்புருகிப் பாடுகின் றிலை' என்பது திருவாசகம். கடவுளை யடையும் வழிகள் அன்புநெறி, செயல்நெறி, செறிவுநெறி என்றெல்லாம் பெயர் பெற்றுள்ளமை அறிவோம். முத்தமிழ் வழியே கடவுளை யடைதலும் கூடும் எனக் கண்ட நற்றமிழ் ஞான சம்பந்தர் 'ஆடல்நெறி,' 'பாடல்நெறி' எனப் புதியவாகக் கூறியுள்ளார். பாடல்நெறி இயல் இசை என்ற இரண்டை யும் குறிப்பதால், முத்தமிழும் இங்கே குறிக்கப்பட்டமை காண்க. திருமூலர் "தமிழ் மண்டலம் ஐந்தும் பரவிய ஞானம்" எனக் கூறுவது ஈதேயாம். இவற்றை எல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டன்ருே,

"முத்தமிழே கற்று முழங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி !—குதம்பாய்,
சத்தங்கள் ஏதுக்கடி !"

எனக் குதம்பைச்சித்தர் பாடுகின்ருர் !

3. மணிமேகலை—I

நாட்டிற் சிறந்தது தமிழ்நாடு. பாட்டிற் கனிந்தது தமிழ் நாடு. தமிழன்னை, தான் தோன்றியநாள் தொடங்கி இன்று வரையும் இளமையும் கட்டழகும் மாறாது இனிதே பாடிவரும் வளம் மிக்கதொரு வானம்பாடியாக இருந்து வருகிறாள். சிலப்பதிகாரம் பாடிய குயிலாள் இவளே. மணிமேகலை பாடிய பூவையாள் (மைனா) இவளே; ஆனால், இன்றோ, மழையின்றி வறண்டு, உணவின்றி ஒடுங்கி, இறகொடிந்து வீழ்ந்து, நெஞ்சுடைந்து நைந்து, குற்றுயிரும் குறையுயிருமாய்க் கிடக்கின்றாள். “உணவு தேடுவதா? பாட்டுப் பாடுவதா?” என்று பலர் கேட்கின்றனர். உணவு தேடுவதும் பாடுவதாக முடிவதனை அவர்கள் அறியவில்லை. அவள் வாடி வதங்கிப் புலம்புவதும் பாரதிப் பாட்டாகவே எழுகிறது. தமிழின் உயிரே பாட்டானால் அவள் இயக்கமெல்லாம் பாட்டாவதில் வியப்பு யாது? “பாட்டு வேண்டா” என்பவர் தமிழ் வேண்டா என்பவரே. மணிமேகலைப் பாட்டு வேண்டா என்பாரும் அவரே ஆவர்.

பட்டினி என்ற எரிமலை ஏழைத் தமிழன் அடிவயிற்றில் புகைந்தெழுந்து புரட்சிக் கனலைக் கக்குகிறது. ஆம்! சோற்றுக்குக் காற்றாய் அலையும் பாட்டே இந் நாட்டில் கேட்கிறது. இது புதிய பாட்டன்று. மணிமேகலையிலும் பட்டினிப் பாட்டு உண்டு. காலத்திற்கேற்ப எழும் தலைசிறந்த பாட்டுக்கள், அந்தக் காலத்தோடு நின்றுவிடாது காலத்தையும் கடந்து எக்காலத்தவர் நெஞ்சினையும் அள்ளும் இயல்பு வாய்ந்தவையாகும். காலனைக் கடந்த கடவுள், காப்பியமே ஆகும். மணிமேகலையும் அத்தகையதொரு தலைசிறந்த காப்பியமானால் நம் காலத்தை அஃது எட்டிப் பாராது இருக்குமா?

நாகரிகம் அலைபோல மாறிமாறி மேலெழுந்தும் கீழ் அழுந்தியும் வரக் காண்கிறோம். கரிகாலனது நாளில்

அவனுடைய நாடு அறமுறையிற் சிறந்தோங்கியது. "அறம் துஞ்சும் உறந்தை" என்று அவனுடைய தலை நகரைப் புகழ்ந்து புலவர் பாடினர். அந்தச் சோணாட்டிலே உதயகுமரன் தோன்றி, அறம் திறம்பி, உயிர் இழக்கும் காட்சியை மணிமேகலைப் பாடலிலே இன்றும் காண்கின் றோம். அறம் பிறழும்போதெல்லாம் மழையின்றிப் பட்டினி நோய் பரவி வருவது இயல்பு. பட்டினியைத் தீர்க்கும் அமுத சுரபியின் திருவிளையாடலைக் கூறும் நூலே மணிமேகலை என்று சொல்வதற்கும் இடமுண்டு. இந்தப் பட்டினிப் புராணத்திற்கு இன்று இடம் இல்லையா ?

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் (மழையும்) வளனும் சுரக்க !"

என்பது பழைய தமிழ் வாழ்த்து. ஆதலின், தமிழ், அமுத சுரபியைப் பற்றிப் பாட வந்தது வியப்பன்று. பசி நீக்குவதே, விண்ணோர்க்காயினும் மண்ணோர்க்காயினும் சிறந்த அறம் எனத் தமிழர் கண்டதும் மணிமேகலை வழியே விளங்குகிறது.

பசியால் வரும் கொடுமையைப் பசியிடை அலைவாரும் ஆழம் காண்பது அருமை. "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற ஔவையாரின் பாட்டைப் பல முறை பாடிப் பழகியதால் இதில் புதியதாக நமக்கொன்றும் தோன்றுவதில்லை. பசிவாய்ப் பட்டு வாடுபவன் விலங்கெனக் கீழ்ப்படுகின்றான். அவனுக்கு மக்கள் வாழ்க்கையின் சிறப்புத் தோன்றுவது எங்கே? கலை தோன்றுவது எங்கே? அருள் தோன்றுவது எங்கே? ஆண்டவன் தோன்றுவது எங்கே ? மணிமேகலை பாடிய சாத்தனார் தீவதிலகை வழியாகக் கூறுவதனை யாவரும் கேட்டல் வேண்டும் :

"குடிப்பிறப் பழிக்கும் ; விழுப்பம் கொல்லும் ;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம் ;

நாணணி களையும் ; மாணெழில் சிதைக்கும் ;
பூணணில் மாதரொடு புறங்கடை நிறுத்தும் ;
பசிப்பிணி என்னும் பாவி ; அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்னா நிமிராது "

என்பதோடு நிற்கவில்லை.

" ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகில் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே "

என்று அனைத்துயர்விற்கும் அடிப்படையாவது வயிறு வளர்க்கும் பேரறமே எனப் பேசுவது காண்க. " அன்னம் பிரம்மம் " என உபநிடதம் கூறிய உண்மையை அறிந்த பின்னரே பேரின்பக் கடவுளும் விளங்கி வருமாம். வறுமைப் பேயினின்றும் இந்த மண்ணுலகினை விடுவிக்கவே பெரும் போரில் வல்லரசுகள் வாள் எடுத்தன என ரூஸ்வெல்ட் முழங்கிய உரிமை முழக்கம் நம் காதில் இன்றும் முழங்குகிறது.

அமுதசுரபி வந்தால் பசிப்பிணி தீரும். அதனியல்பினைப் புலவர்கள் மிக அழகாகப் புனைந்துள்ளார்கள். கதை மினுக்கில் கண் மயங்கிக் கருத்தினை மறத்தலாகாது. எங்கே தோன்றும் இந்த அமுத சுரபி ? வயிற்றுப் பசி ஒரு பொதுவுடைமை. அங்கே எல்லோரும் ஓர் நிறை ; எல்லோரும் ஓர் இனம். இந்தப் பொதுவுரிமையே வாழ்விற்கு அடிப்படை. பொதுமை நாட்டத்தில் எழுந்தோங்கும் உண்மையே அமுத சுரபியாகும். ஆபுத்திரன் சாதிச் செருக்குடையோரால் இகழப்படுகின்றான். கபிலர் அகவலுக்கு வித்து மணிமேகலையில்தான் கிடக்கிறது. அவர்கள் அவனை ஊர்விட்டு ஓட்டுகின்றார்கள்.

" ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணுர் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்ருேர்
யாவரும் வருகஎன்று இசைத்து உடனூட்டி
உண்டொழி மிச்சில்உண்டு ஓடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் "

ஆகின்ருன் அவன். பொதுமையுள்ளத்தில் புதுமையறிவு எழுகின்றது. பசியால் வாடுவார் பலராயபோது என் செய்வான்? சிந்தா தேவியை நாடுகின்ருன். சிந்தாதேவியே நாமகள். அவள் கோயிலே கலைக்கோயில் அல்லது கலை நியமம். அருள் வடிவாம் பொதுமையுணர்வு மட்டும் போதாது. அதிலிருந்து அறிவாராய்ச்சி-சிந்தனை-இவ்வாறு பிறத்தல் வேண்டும். " புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான—வித்தகம் பிடித்த செங்கை விமலை " யைக் கம்பன் பாடுவது அறிவோம். கலைமகள் கையில் உள்ள குண்டிகையின் நுட்பத்தை மணிமேகலைப் பாட்டே "அமுதசுரபி" என விளக்கிவைக்கின்றது. அறிவாராய்ச்சி யால் பட்டினி போக்கும் இறையே அமுத சுரபியாம் அக் குண்டிகை. " கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்—நற்ருள் தொழாஅர் எனின் " என்று பாடு கிருர் வள்ளுவர். வாலறிவன் நற்ருள் தொழுதலாவது தரித் திர நாராயணர் வழிபாடே " என்பர் காந்தியடிகளார். நடமாடுங் கோயில் வழிபாடு என இதனைத் திருமூலர் புகழ்வர்.

அறிவாராய்ச்சி ஹிட்லர் நாட்டில் எழுந்தது போலப் பிறரை அடக்கியாளும் சுரண்டல் வெறியால் எழுந்தால் தீமையே பற்றி எரிந்து பரவும். ஆபுத்திரனிடத்திற் போல அருளில் எழுந்தால் மட்டுமே தண்ணிலவு பொழி யும். அதுவே உலகம் உய்யும் வழி. அமுத சுரபி ஏந்தி

நிற்போள் அருளே வடிவாம் பெண் கடவுளாதலின் தாய்மையின் இன்றியமையாமை நன்கு விளங்கும். அது மணிமேகலையின் கையிற் புகுவதிலும் அந்த உண்மை வலியுறுகிறது. இந்த அமுதசுரபியில் முதல் முதல் சோறிட்டு வற்றாத வளத்தைவளர்த்தவள் ஆதிரை என்னும் கற்பரசியே ஆம். கற்புடைய பெண்கள் வளர்க்கும் வளமே நாட்டின் பெருஞ்செல்வ மாகும் என்பதே கதையின் நோக்கம். "பெண்ணிற் பெருந்தக்கதில்" என்ற வள்ளுவர் வாய்மொழியை மறந்தால், உலகம் பிழைக்கும் வழி யறியாது பலபல பித்தேறி அலையவே வேண்டும்.

அமுத சுரபி நீரிடை இருந்து எழுந்து மணிமேகலையின் கையில் புகுகின்றது. புத்தர் பெருமான் அறிவு விளக்கம் பெற்ற திருநாளில் இந்தக் காட்சி தோன்றுகிறது. நீரினைக் காத்து அதன் ஆற்றலைப் பல வகையாலும் பயன்படுத்தும் உண்மையினை இந்தக் காட்சி சுட்டுகின்றது. வான்சிறப்புப் பாடிய வள்ளுவர் வழி வந்ததன்றோ மணிமேகலை! "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" எனக் கடவுளைக் காணும் நாடன்றோ தமிழ் நாடு? வீணே கடலிற் புகும் வெள்ளத்தினை அடக்கி ஆண்டு அணைகோலித் தேக்கித் தெள்ளமுத ஓடைகளாகவும் மின்சார அருவிகளாகவும் வழியவிட்டு, நெற்கடலும் பாற்கடலும் சோற்று மலையும் பருப்பு மலையும் படைத்து, இயற்கையன்னையின் வியத்தகு திறமைகளைத் தமதெனக் கொண்டு குழவிகளும் இன்ப அன்பிற் பழகி விளையாடும் அறிவு நிலையை உண்டாக்கவேண்டும். இடுகாடாய்க் கூத்தாடிய டென்னெஸ் பள்ளத்தாக்கு அமெரிக்காவில் இன்று வானுலகாய் வற்றாத வளங் கொழிக்கிறது. நீபர் அணையோ உருசியாரின் (ரஷ்யர்) புத்தூக்கப் பொலிவு. நம் நாடு கங்கையும் காவிரியும் கலந்தோட அதன் வழியே இயற்கை வளம் எங்கும் பொலிய இன்பம் தேக்கும் பொன்னுடாதல் வேண்டும். இதற்குக் கலையறிவும் கலையழகும் பயன்படுதல் வேண்டும்.

இதுவே நாம் செய்யத்தக்க நாமகள் வழிபாடு. இத்தனையும் இந்தக் காட்சியில் தோன்றுகிறது காண்க.

" மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதிள வேனில் எரிகதிர் இடபத்
தொருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை யமுத சுரபி. "

இந்த அமுதசுரபி சிந்தாதேவியின் திருக் கையில் விளங்குவது போலப் போதித் தலைவனும் புத்தர் பெருமானோடு பொருந்தித் தோன்றும் நுட்பத்தினையும் கருதித் தெளிதல் வேண்டும். பசியாற வேண்டுவது இன்றியமையாததே ஆம். ஆனால் " அன்னம் பிரம்மம் " என்பது முடிந்த முடிபன்று. சோற்றுச் செருக்கில் நெய்யில் மூழ்கியவர் பன்றிபோலத் திண்ணையில் படுத்து உருளுவது அன்றி, அறிவு உலகிற் புகுவதில்லை. கலை வாழ்வாம் அருள் வாழ்வு வாழ எண்ணாது, விலங்கு வாழ்வாம் பொருள் வாழ்விற் புகுந்தலைவார் வெறி மீறி உலகினைப் போரிடையே தீவைத் தெரிப்பதனைக் கண்டோம். கலைவாழ்வின் பொதுமை நிலையே புத்தர் முதலிய வள்ளல்கள் கண்ட அருள் வாழ்வாம். அதுதான் செம்மை வாழ்வு ; நல்வாழ்வு ; செந்நெறி ; நன்னெறி. அதனை மறந்த சோற்றுலகம் பன்றிக் கொட்டிலேயாம். உண்பதும் தின்பதும் உருண்டுறங்கிக் கொழுகொழுப்பதும், புற்றீசல் போலப் பொல பொல என மக்களைப் பெறுவதும் வாழ்வாவதில்லை ; சாவதற்கு ஆளைத் தேடி வளர்ப்பதே ஆம். ஆபுத்திரனை வாழ்த்த வருகின்றான் இந்திரன். அருள் வாழ்வு வாழும் வீட்டுலகினும் பொருள் வாழ்வு வாழும் வானுலகம் வேறு. அதனை எள்ளி நகையாடுகின்றான் ஆபுத்திரன். அமுதசுரபி

பயனற்றுப் போகும்படி மழை சுரந்து வளம் பூத்து உலகம் பொலியுமாறு செய்து தன் வஞ்சத்தைத் தீர்க்கின்றான் இந்திரன். ஆனால், இந்தச் சோற்றுலக வாழ்வால் யாது பயன்?

"விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்
நடவை மாக்களும் நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியும்
முட்டா வாழ்க்கை முறைமைய தாக"

உலகம் மாறும் கதையை இன்றும் செல்வம் கொழிக்கும் நாடுகளில் நாளும் காண்கிறோம்; கேட்கிறோம்.

அடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாத நாட்டில் அருள் வாழ்விற்கு இடம் இல்லை. ஆதலால், வானோரைவிட வன்கணாளர் இல்லை என்கிறார் வள்ளுவர். அங்ஙனமாயின் இரவலாளர் இருந்தே தீரவேண்டுமா? "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்" எனப் பொதுஉடைமை பேசும் வள்ளுவர் இரவலாளர் இருக்கும் உலகினையோ எண்ணுவார்? ஒருவரோடு ஒருவர் அன்போடு பிணைந்து அன்பினை நாடாது புலிபோலத் தனித் தனி வாழும் கொள்ளை வாழ்வு வாழ்கின்றாரையே வள்ளுவர் வெறுக்கின்றார். பொதுவாழ்வு வாழும்போதுதான் அடுத்தும் கொடுத்தும் அன்பை ஒப்புரவு வழியே வளர்த்துப் பாத்துண்டு மகிழ்ந்து அருள் வாழ்வு வாழ்தல் கூடும். அந்த அருள் வாழ்விற் பழகியதாலேயே மணிமேகலை வீட்டுலகிற் புகுகின்றாள். தனி வாழ்வாம் கொள்ளை வாழ்வின் தன்னலத்தினைத் துறப்பதே மணிமேகலைத் துறவின் நுட்பமாகும். அமுதசுரபி வழியே அதுவும் வெளியாகிறது.

பட்டினியுலகில் அறம் வளர இடம் இல்லை; சிறைச் சாலையே ஓங்கி வளரும். குற்றவாளிகளை ஆராய்ந்த இந் நாளைய அறிஞர் கண்ட இந்த உண்மை மணிமேகலையிலும்

நின்று விளங்கக் காண்கின்றோம். சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை எழுந்து எத்தனையோ நூற்றுண்டுகளாகியும் ஏன் இத்தனைச் சிறைச்சாலைகள் இங்கும் எங்கும் உள்ளன ? மணிமேகலை பாடிய உண்மையினை உணர்ந்து நல்வழிப்படுவது எந்நாளோ ?

அமுதசுரபிக்கு இத்தகையதோர் உயிர் நிலையைச் சாத்தனார் தந்துள்ளாரா ? எமது கனவுதானோ ! அறிஞர் ஆராய்க. சிலப்பதிகாரம் கண்ணகியின் சிலம்பு வழியே தமிழ் உலகின் மூன்று நாடுகளையும் ஒன்றாக்கிப் பாடியது. மணிமேகலையோ அமுதசுரபியின் வழியே தமிழ்நாட்டை ஒன்றாக்கி, "அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" எனக் கும்பிடு வழங்குகிறது. பாண்டிய நாட்டுச் சங்கம் தவழ்ந்த மதுரையில் விளங்கிய சிந்தாதேவியின் கையில் ஒளிர்ந்த அமுதசுரபி ஆபுத்திரன் கையில் வந்து அந்த நாட்டுப் பட்டினிப் பேயை ஓட்டியது ; மணிமேகலையின் கையிற் புகுந்து சோழநாட்டுப் புகாரிலும் சேரநாட்டு வஞ்சியிலும் தொண்டை நாட்டுக் காஞ்சியிலும் புகுந்து பட்டினி நோயைத் தீர்த்தது ; ஆபுத்திரன் வழியே கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று திரும்பியது. தமிழ் நாட்டையும் கீழ்நாட்டையும் இவ்வாறு ஒன்றாக்கி வளர்க்கக் கூடியது அமுதசுரபி ஒன்றே எனச் சாத்தனார் கண்ட காட்சியின் பெருமை இன்னமும் நமக்கு நன்கு விளங்கவில்லை. கலைவாணரும் சிற்பிகளும் அமுதசுரபியைத் தமிழ் நாட்டுத் தண்ணீரிடையே கண்டு கண்டு எடுத்து நிலை நாட்டவேண்டும். அது தமிழரது முதற்கடமை.

"பட்டினியால் வாடும்போது பாட்டா ?" என்று கேட்பதற்கு இடம் இல்லை. உழைத்து ஓய்ந்தவனுக்கு உலகத் துன்பத்தினை மறக்கக் கள்ளும் பிறவும் வழியாவது போலப் பாட்டும் ஒரு கட்குடியே என்பார் சிலர். கள்ளோ கருத்தினை மயக்கும் ; பாட்டோ தெளிந்திடச் செய்யும் ; உலகிடையே உண்மையைக் காணும்.

4. மணிமேகலை—II

"மணிமேகலை" என்ற அறவடிவமான இலக்கியத் தலைவி, மணிமேகலா தெய்வத்தின் பெயராலேயே விளங்குகின்றாள். கோவலன் மாதவியின் வீட்டிலே காமத்தில் கண் மூடிய கீழ்மகனாகக் கிடந்தானோ எனப் பலர் கருதலாம் எனச் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகட்குத் தோன்றுகிறது. தம்முடைய காப்பியத் தலைமகனது சிறப்பியல்புகளை நம் கண்ணெதிரே காட்ட அவர் விரைகின்றார். கோவலனுடைய செல்வம் காமக் களியாட்டத்தில் செலவாகவில்லை ; உற்றாரின் நீங்கி வருந்தும் மக்கட்கும், கல்வியின் நுட்பத்தைத் துய்ப்பதற்கும், அறக்கொடியோரை நல்வழிப்படுத்த முந்தி அவர்களுக்காகத் தன் உயிரையும் கொடுத்துத் தாயின் கண்ணீரைத் துடைக்கத் துடித்து எல்லோரையும் இன்ப வழியில் உய்ப்பதற்குமே செலவாகிறது. அங்கொரு காட்சி நம் கண்ணெதிரே தோன்றுகிறது. "மாதவியின் வளம் மிகுந்த கலைக்கோயில் !" அங்கொரு திருவிழா! ஆம்! மாதவிக்கு ஒரு செல்வக் குழவியாம் பெண்மகள் பிறந்துள்ளாள். பரத்தையர் இல்லம் என்றே தோன்றவில்லை. அறத்திலும் கல்வியிலும் ஆண்டிலும் பெரியோர் வருகின்றனர். யானையின் அடியில் இடறி விழக் கிடப்போரை யானைமேற் பாய்ந்து அடக்கி, யானைக்கும் இடையூறின்றிக் கிழவர்க்கும் இடையூறின்றிக் காக்கின்-றான் கோவலன். கருணை மறவன் குல முறையை மறக்கின்றானோ? இல்லை. தன் குல முதல்வன் ஒருவன் கடலில் கப்பலில் போனபோது புயற்காற்றால் சிக்கிக் கப்பல் சிதைய நின்றதைக் காப்பாற்றிய தெய்வத்தின் நினைவு அவனுக்கு வருகின்றது. அந்தத் தெய்வத்தின் பெயரையே தன் இளங் குழவிக்குச் சூட்டி அவன் மனமகிழ்கின்றான். குலமரபினை மறவாது போற்றும் அறக்கிழவோனாகவே கோவலன் விளங்குகின்றான். இதனை உலகம் அறியும் என

மாடலன் என்ற மறையவன் வழியாக இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். கோவலனது நினைவிற்கு வந்த தெய்வமே மணிமேகலா தெய்வம். காலஞ்சென்ற திரு. வே. சாமிநாத ஐயர் இத்தெய்வத்தினைப் பற்றி அறியலாவனவற்றை ஒரு சிறு குறிப்பில் தந்துள்ளார் :

" சில தீவிலுள்ளவரை, அரக்கர் வாதை பண்ணுதபடி இந்திரனேவலால் பாதுகாத்துக் கொண்டிருத்தலையுடையது ஒரு தெய்வம். கோவலன்தன் குலத்தா னொருவனை இத்தெய்வம் கடலிற் பாதுகாத்த நன்றி பாராட்டியே தன்புதல்விக்கு மணிமேகலை என்று பெயரிட்டான். மணிமேகலையை நல்வழிப்படுத்தற்கு எண்ணி, அவளை உவவனத்திலிருந்து மணிபல்லவம் கொண்டுசென்று புத்த பீடிகைக் காட்சியிற் பழம் பிறப்பு உணர்வித்துப் பூர்வஜன்ம நாயகன் இன்னான் என்பதைத் தெரிவித்ததையன்றி, சிறந்த மூன்று மந்திரங்களைப் பின்பு அவளுக்கு உபதேசித்தது அத்தெய்வம்" —இவ்வளவே அந்தக் குறிப்பு. புத்த சாதகக் கதைகள், இந்தத் தெய்வம் இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கடலில் காவலாக அமைந்தது என விளக்குகின்றன.

நம் நாட்டிற்குக் கிழக்கேயுள்ள தீவுகளோடு நம்மவர் தொடர்புகொண்டிருந்தனர். " திரைகடலோடியும் திரவியம் தேடு " என்பது நெடுங்கணக்கினை ஓதும்போதே தமிழ்க் குழவி உருப்போடும் மந்திரம். கப்பலோட்டியவன் தமிழன். மேலை நாட்டில் கப்பலோட்டிய போனீஷயர் தமிழரோடு உறவுகொண்டவர் எனப் பலர் கருதுகின்றனர். எகிப்து நாட்டுப் பட்டைக் கோபுரங்களினுள்ளே மலையாள நாட்டுத் தேக்குமரம் விளங்குகிற தென்றால் தமிழன் அங்குச் சென்றது தெளிவாகவில்லையா ?

அவ்வாறே கிழக்கிந்தியத்தீவுகளுக்கும் கப்பலில் போய் வந்தவன் தமிழன். கப்பற்படையிற் சிறந்து விளங்கியது தமிழ் நாடு. பல்லவர்களின் கப்பற்படை கிழக்கிந்தியத்

தீவுகளை வென்றது. "கடல்சூழ்ந்த உலக மெல்லாம் காக்கின்ற பெருமான், கழற்சிங்கன் அடியார்தம் அடியார்க்கும் அடியேன்" எனக் கழற்சிங்கன் என்ற பல்லவன் காலத்திருந்த சுந்தர மூர்த்திகள் பாடுகின்ருர் அல்லரோ? சோழரது கப்பற்படை இந்தக் கடலைத் தனதாக்கிக் கடாரமும் பல தீவும் ஆண்ட வரலாறு இப்போதுதான் விளங்கிவருகிறது. தமிழ்க் கல்வெட்டுக்கள் அங்கிருந்து கிடைக்கின்றன. பின்னர் விஜயநகரத்தரசர்கள் அக் கப்பலாட்சியைச் செலுத்தினர். மேற்குக் கடலில் அரபியர் வந்து மலையாள நாட்டிலும் கீழைக் கரையிலும் தங்கித் தமிழரொடு தமிழராய்ப் பின் சிறந்த மாலுமிகளாய் ஓங்கிப் போர்த்துக்கேசியரை அலைக்கழித்த வரலாற்றை நம்மவர் இன்றும் நன்கு அறியவில்லை. இன்று மறுமுறையும் கப்பற் படைகளும் நம் எதிரே எழுகின்ற காட்சியைக் காண்கின்ருேம்.

கிழக்கிந்தியத் தீவுகளும் இப்போது நம்முடன் பேருறவு கொள்கின்றன ; தங்கள் அரிசியை நமக்கு அனுப்ப முந்துகின்றன. அவை உரிமை பெற நாமும் உழைக்க முந்துகின்ருேம். பழமை அடியோடு அழியாதன்ருே ? இந்தியா முன்னே கிழக்கே தோன்றிய செங்கதிரோனுக விளங்கியது. புத்தர்பெருமானது அன்பு இங்கிருந்துதான் சுடர் விட்டு எங்கும் பரவியது. சீனரும் பிற கீழை நாட்டவரும் இந்தியாவைத் தமது அறிவுக் கோயிலாகப் பாராட்டினர். அறிஞர்கள் பலர், இங்கு வந்து போவது வழக்கமாய் இருந்தது. இன்றும் கிழக்கிந்தியக் கலைக் கோயில் ஒன்று தோன்றிவருகிறது. ஆசிய மக்களனைவரும் ஒருங்கு திரண்டு ஒருகுடும்பமாக வாழப்போகின்றனர். அதனை மணிமேகலைக் கோயில் எனவும் வழங்கலாம் அன்ருே ?

கிழக்கிந்தியத் தீவுகளின் இன்றைய நிலை வருத்தத்திற்கே வினைநிலமாகி உள்ளது. ஆனல், உலக

வளத்திற்கே அவை விளைநிலம் என்ற உண்மையை மேலை நாட்டு வல்லரசுகள் உணர்ந்துள்ளமையாலேயே, இந்த இக்கட்டெல்லாம் வந்துள்ளன. இயற்கைப் புதையலாக இருப்பதனாலேயே போராட்டக் களமாகவும் அவை மாறக் காண்கின்றோம். உலகிற்கு இன்றியமையாதுள்ள மண் ணெண்ணெய், மரப்பால் (ரப்பர்), வெள்ளைச்செம்பு (நிக்கல்) முதலிய பல பொருள்களின் தாயகம் கிழக்கிந்தியத் தீவுகளேயாம். ஆதலின், ஆங்கிலேயரும் உலாந்தியரும் அமெரிக்கரும் ஜப்பானியரும் அவற்றைத் தத்தம் கைக்குள் சிக்க வைக்க முயலுவது புதுமையன்று. இந்த ஆசியப் புதையல் ஆசியரின் முன்னேற்றத்திற்கே இனிப் பயன்படும். அப்போதுதான் பிறரை அடிமையாக்கும் வெறி ஒழியும்.

தமிழ் மக்களுக்கும் கிழக்கிந்தியத் தீவினருக்கும் உள்ள தொடர்பு, மிக மிகப் பழைய தொடர்பு. ஹங்கேரி நாட்டி லிருப்பவர்க்கும், நம் நாட்டில் வாழும் கோலருக்கும், கிழக் கிந்தியத் தீவில் வாழ்வோருக்கும் தொடர்புண்டு. அவர்கள் ஒரே மரபினராம்; ஒரே வகையான மொழிகளைப் பேசு கின்றனராம். தமிழ் மொழியிலும், அவர்கள் வழக்குப் பழங்காலந் தொடங்கிப் புகுந்துள்ளது. அவர்கள் மொழி யின் சிறப்பியல்பு முந்து நிலைகளை (Prefixes) வழங்கு வதேயாம். அதாவது, அவர்கள் சொல்லின் முத லெழுத்தை மாற்றுவதாலேயே பொருள் மாறுபடும். தமிழிலேயோ பிந்து நிலைகளாகப் பகுதிக்குப் பின்னே வரும் இடைநிலை, விகுதி முதலியவற்றை மாற்றினால்தான் பொருள் மாறும். "வருகின்றான்" என்பதில், பின் வரும் இடைநிலையை மாற்றினால் "வருவான்" எனப் பொருள் மாறும்; விகுதியை மாற்றினால் "வருகின்றார் வருகின்றாள்" எனப் பொருள் மாறும். ஆனால், கிழக்கிந்தியத் தீவினர் வழக்கும் நம் பழந் தமிழ் வழக்கில் காணக் கிடக்கின்றது. "ஆய்" என்றால் தாய் என்று பொருள். சங்ககாலத்தில் ஓர் அரிய வழக்கிருந்ததெனக் குறுந்தொகைப் பாட்டொன்று

சொல்லுகிறது. " யாய் " என யகரத்தை முந்து நிலையாகச் சேர்த்தால் " என்னுடைய தாய் " என்று பொருளாம். " ஞாய் " என ஞகரத்தை முந்து நிலையாகச் சேர்த்தால் " உன் தாய் ' என்று பொருளாம் ; " தாய் " எனத் தகரத்தை முந்து நிலையாகச் சேர்த்தால் " அவனுடைய தாய் " என்று பொருளாம். இதுதான் கோலர் மொழியின் வழக்கு. " நான் " " நீ " என்பவற்றைக் குறிக்கும் சொற்கள் மிகமிகப் பழையனவாகும். அப்படிப்பட்ட பழைய சொற்களிலும் கோலர் வழக்குப் புகுந்துள்ளது என்றால் கிழக்கிந்தியத் தீவினரோடு நமக்குள்ள தொடர்புஎவ்வளவு பழையது என்று எண்ண முடியுமா ? கோலர் நம்மோடு உடன் வாழ்ந்து அங்குப் போயினர் போலும் ! நாமும் அங்குப் போய் வாழ்ந்து வந்தோம் போலும் ! நிற்க. மற்றொரு வழக்கும் இன்றுவரை வழங்குகிறது. ' வீடு கீடு,' ' தலை கிலை,' 'வயல் கியல்'—இந்த வழக்கானது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும் வழங்கக் காண்கிறோம். முதலெழுத்துக்குப் பதிலாக " கி " என்பதனை முந்து நிலையாக அமைப்பது கோலர் மொழி வழக்கை நினைப்பூட்டவில்லையா ? தவளை, வழுதுணைமுதலிய சொற்கள் அவர்கள் மொழியிலிருந்து நம் மொழியில் குடியேறினவையாம். " இளநீர் " என்றால் பொருள் என்னை ? "நீர் " என்றால் அம்மொழியில் தேங்காய் என்பது பொருள் ; இதற்கு 'இளமை' என்ற அடை கொடுப்பது பொருத்தந்தானே ! தமிழுடையும், கிழக்கிந்தியப் பெயரும் ஒரு சொற்றொடராக இயைந்த இயைபே இந்த இரு நாகரிகத்தின் ஒற்றுமையை விளக்குகிறது.

தமிழர் கோலர் மொழியைத் தமதாக்கிக் கொண்டது பெரிய வியப்போ ? இன்றும் பிற மொழிகளைத் தமிழர் போலப் பேசுவோர் உண்டோ ? காலம் சென்ற சீநிவாச சாத்திரியார் பேசிய ஆங்கிலத்தினைக் கண்டு ஆங்கிலேயரும் வியந்தனர். இவ்வாறு பிறர் மொழியைத் தமிழர் கற்று

வந்த வரலாற்றை மணிமேகலை என்ற பாட்டும் பாடுகிறது. ஆதிரை பிச்சையிட்ட காதை இலக்கியச் சுவை நிரம்பியது; தமிழன் கீழ்நிலையில் உள்ள மக்களை உயர்த்திய மரபினை விளக்குவது. சாதுவன் கிழக்கிந்தியத் தீவுகளில் வழங்கும் மொழிகளை நன்கு அறிந்தவன். அவன் ஏறிச்சென்ற கப்பல் உடைந்தது. அவன் ஒரு தீவின் கரையில் ஒதுக்கப் பெற்ருன். மக்களுடம்பினையே விருந்தாக உண்ணும் அத் தீவினர் அவனைக் கண்டதும் நாவில் நீரூற நின்றனர். ஆனல், அவனே அவர்களுடைய மொழியிற் பேசினுன். அவர்களுடைய மனம் மாறிவிட்டது; பகைத்தெழுந்தவர்கள் தொழுது உரையாடினுர்கள். சாத்தனுர், இவ்வாறு மொழி வழியே எழும் வியத்தகு தொடர்பினைவிளக்கிவைக்கின்ருர். இந்த நுட்பம் தமிழனுக்கன்ருே தெரியும்! அவனை அவர்கள் அரசனிடம் கொண்டு செல்கின்ருர்கள். கள்ளுப் பானையும் புழுத்த புலாலும் சுற்றி இருக்கத் தன் மனையாளோடு கிடந்தான் அவர்கள் தலைவன். இதற்கு என்ன உவமை கூறலாம்? இலக்கிய நயம் சொட்டச் சொட்டச் சாத்தனுர் பாடுவதனைக் கேட்கலாம் :

“ கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென்பு உணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி ”

(குழிசி - பானை; கழி - மிக்க; முடை - புலால்; உணங்கல் - வற்றல்; எண்கு - கரடி; பிணவு - பெண் கரடி)

இத்தகைய கொடியோன் மனத்தையும் அன்புருவாகச் செய்தது, அவனுடைய தாய்மொழியைக் கேட்கும் இன்பம். ‘பாடையிற் பிணித்து’ என்கிருர் சாத்தனுர். அவ்வாறு இருந்த நாகர்களுடைய குருமகன், வந்த சாதுவன் தங்கள் மொழியைப் பேசுவது கண்டு மகிழ்ந்து, “ அருந்துதல் இன்றி அலை கடலுழந்தோன், வருந்தினன் அளியன்

வம்மின் மாக்காள்! நம்பிக்கு இளையள் ஓர் நங்கையைக் கொடுத்து, வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்!" என்று கட்டளை இட்டான். புத்தர் கொள்கையிற் பழகிய சாதுவன் நடுங்கினான்; வெவ்வுரை கேட்டேன் வேண்டேன்" என்றான். நாகர் குருமகனுக்கு ஈதொன்றும் விளங்கவில்லை. அவன் சினந்து, "பெண்டிரும் உண்டியும் இன்று எனின் மாக்கட்கு உண்டோ ஞாலத்து உறுபயன்? உண்டு எனில் காண்குவம் யாங்களும்; காட்டுவாயாக" என்று உறுமினான். "கள்ளும் ஊனும் நரகத்திற்கு வழி" என்றது கேட்டுப் பெருஞ் சிரிப்புச் சிரித்து, "உடம்பு விட்டு ஓடுமா உயிர்? அஃது உருக்கொண்டு வேறோர் இடம் புகுமா?" என்று உறுத்துக்கேட்டான் நாக குருமகன்.

"உயிருண்டு" என்பதனை நிலைநாட்டத் தொடங்கினான் சாதுவன்; ஆனால், தான் கற்றனவற்றை ஒப்புவித்-திருப்பானானால் ஒரு பயனும் விளைந்திராது. நாகர் குருமகனது நிலைமைக்கேற்பப் பேசுவதுதான் இங்குள்ள அருமையும் பெருமையும். "உயிரோடு இருக்கும்போது சிறிது கிள்ளினாலும் உடலம் துள்ளுகிறது. உயிர்போன பிண உடலை நெருப்பிற் சுட்டாலும் உணராது கிடக்கவில்லையா? முன் இருந்த ஒன்று இப்போது இல்லை என விளங்கவில்லையா? அதுதான் உயிர். ஒரு வீட்டிலிருந்து போனால் இன்னொரு வீட்டிற்குத்தானே போகவேண்டும்? உயிர் இவ்வளவுதூரம் போகமுடியுமா என்று நீ கேட்கலாம். நீ கனவு காணும்போது உன் உயிர் எவ்வளவு தூரம் போயிருக்கிறது என எண்ணிப்பார்" எனக் கூறியது அவன் மனத்திற்குப் பிடித்தது. "புலால் உண்ணாது இருக்க முடியாதே" எனக் குரு வருந்தினான். "செத்தொழியும் விலங்குகளைத் தின்று தொலை. உயிர்களுக்கு ஊறு செய்யாதே" எனச் சாதுவன் ஒரு வழி கூறினான்.

பிறர் மொழியையும் உணர்ந்து, அவர்களுக்கு ஏற்ப அறவுரை வழங்கி அவர்களை உயர்த்துகின்ற தமிழர் முறை

சங்கத்தொடர்பு - நெடு[illegible]லிவளை திருமணம்

இஃது. இப்படிப் பலபல தீவுகளை நாகரிக வாழ்விற்குக் கொண்டுவந்துவிட்ட பெருமை தமிழர்களுக்கு உண்டு. தமிழர் இவர்களோடு மணந்து வாழ்ந்தனர். சோழன் நெடுமுடிக்கிள்ளி பீலிவளை என்பவளோடு கூடி வாழ்ந்த வரலாற்றை மணிமேகலைக் காவியமே கூறுகின்றது :

> " நாக நாடு நடுக்கின்று ஆள்பவன்
> வாகை வேலோன் வளைவணன் தேவி
> வாச மயிலை வயிற்றுள் தோன்றிய, பீலிவளை "

என்பதனால் அந்தப் பீலிவளை நாக குலப் பெண் என்பது தெளிவாம்.

இந்தக் கூட்டுறவால் நன்மை பெற்றோர் கிழக்கிந்தியத் தீவினர் மட்டுமே என எண்ணவேண்டா ; தமிழரும் பெருஞ்சிறப்புப் பெற்றனர். சாதுவன் பெருஞ்செல்வம் பெற்றான் என மணிமேகலை கூறும். அதியமானது முன்னோர், கரும்பினைக் கிழக்கிந்தியத் தீவிலிருந்துதான் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தனர் எனப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. கிழக்கிந்தியத் தீவின் விளைபொருள்களின் நன்மையைத் தமிழரும் நுகர்ந்தனர் என்பதே இதன் கருத்தாகும். ஜாவாச் சருக்கரை இன்றும் நமக்கு இனிக்கவில்லையா ? சாதுவனுடைய அறவுரை கிழக்கிந்தியத் தீவுக்குப் போவதும், அங்குள்ள பொருள்கள் தமிழ்நாடு புகுந்து பட்டினி போக்குவதும் என்றும் நிகழும் காட்சியாக மணிமேகலைக் காப்பியம் பாடுகிறது. அமுத சுரபி கல்விக் கடவுளின் கையிலிருந்து தமிழ் நாட்டில் தோன்றிக் கிழக்கிந்தியத் தீவிற்குப் போய்த் தமிழ் நாட்டின் பட்டினியைப் போக்க மணிமேகலை வழியே கிழக்கிந்தியத் தீவிலிருந்து திரும்புவதும் இந்தப் பேருண்மையை அன்றோ சுட்டுகின்றது ? சாதுவனுடைய மனைவியாம் ஆதிரை அல்லளோ, அமுதசுரபியில் முதன்முதல் அமுதிட்டவள் !

இந்த உட்கோள் இல்லை என்றால் புலவர் பெருமான் சாத்தனார் சாதுவனது வரலாற்றை விரித்துக் கூறுவானேன் ?

"நம் நாடு வாழ்ந்தால்மட்டும் போதாது ; உலகமும் வாழ்ந்துய்ய வேண்டும்" என்ற எண்ணத்தினை நம் நாட்டினர் மனத்தினில் வேரூன்றி வளர விட்டவர் கீழைக் கதிரவனும் புத்தர் பெருமானேயாவர். அக் கதிரவனது ஒளி சுற்று முற்றும் பரவுவதனையே சாதுவன் வரலாற்று வழியாகத் தமிழரது தனிப்பெருஞ் சிறப்பெனப் புலவர் பெருமானார் பாடுகின்றார். மணிமேகலை வரலாறே, மணிபல்லவம் முதலிய தீவுகள் இல்லையானால் எவ்வாறு மாறிப் போகும் என எண்ணிப் பார்த்தால் யாம் கூறிவரும் வரலாற்றின் நுட்பம் எளிதில் எவருக்கும் விளங்கிவிடும்.

கிழக்கிந்தியக் கடலை மணிமேகலா தெய்வத்தின் கோயிலாகக் கொள்வது நம்முடைய கடமை.யாகும். நமக்கும் கீழை நாடுகளுக்கும் உள்ள தொடர்பு கடவுளர் விரும்பிய தொடர்பு என்பதும் உண்மை ; இயற்கையோடியைந்த தொடர்பு என்பதே அதன் பொருளாம். முன்னே தமிழர் ஆட்சி அங்குச் சென்றது. அதுவன்று புத்தர் பெருமானார் உட்கோள். என்றும் நிலவுவது அன்பு ஒன்றே. தமிழர் அன்பே இனி எங்கும் செல்லும். மணிமேகலைக் கோயிலில், கீழை நாட்டு மக்கள், தமிழர் அன்பொளியில் ஒரு குடும்பமாக வாழ்வர். மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு அளித்த மூன்று மந்திரமும் இனிச் செயலில் விளங்கவரும்.

"வேற்றுரு எய்தவும் அந்தரம் (ஆகாயம்) திரியவும் ஆக்கும் இம் மந்திரம். இப் பெரு மந்திரம் இரும்பசி அறுக்கும்" என்று அருள் செய்த வரலாறு இனி உண்மையாகும். மக்களைப் பிடுங்கித் தின்னும் மாக்கள், அறிவிலும் அன்பிலும் சிறந்த மக்களாவதினும் வேற்றுரு எய்தல் எனப் பேச வேறு வியப்புண்டோ ? மக்களைப் பிடுங்கித் தின்போரல்லரோ இன்று வல்லரசுகள் எனச் செருக்கித் திரிவோர் எல்லாம் ? அவர்களை அன்புருவமாக மாற்றும் மந்திரம்

காந்தியடிகள் வழியே வரும் காலம் உண்டெனில் மணி மேகலா தெய்வம் கூறிய மந்திரம் பலித்தது எனலாம் அன்றே ? அந்தரம் திரிதல் ஆகாய விமானத்தில் தமிழர் பறந்து திரிந்து உலகிற்கு உதவும் காலத்தே மெய்யாகும். ஈது ஓர் அருமைப்பாடன்று. முதலில் மறந்து, பின் நினை விற்கு வந்ததும் கீழிறங்கி மணிமேகலா தெய்வம் தந்தரு ளிய மந்திரமே பட்டினி நீக்கும் மந்திரமாகும். பலபல நினைக்கும்போது எல்லாச் சிறப்பிற்கும் அடிப்படையான இந்த மந்திரத்தை மறந்துவிடுவது உலக இயல்பு. பட்டினி நீங்கிய குடும்பமாகக் கிழக்குக் குடும்பம் மணிமேகலா தெய்வத்தின் கோயிலில் சிறந்ததோர் உட்கோளைச் சுட்டு கிறது என்பதனைப் பாட்டின்வழியே நம் உளம்கொள வற்புறுத்தி அருளுவதே மணிமேகலைக் காப்பியம் பாடிய முத்தமிழ் ஆசான் சாத்தனரது நோக்கமாகும். ஆதலின், அதனை மறத்தலாகாது. மணிமேகலா தெய்வம் என்றும் நின்று நிலவுக!

---

5. உயிர்நிலைப் பாட்டு

இராமாயணக் கதை உலகினர் மனத்தை இன்னும் நீர்ப்பிண்டமாய் உருக்கிவருகிறது. இந்திய நாட்டில் இந்த வகையில் இதற்கு இணையான கதையே இல்லை என லாம். இந் நாட்டில் வழங்கும் எல்லா மொழியிலும் இக்- கதை இன்ப ஊற்றாகச் சுரந்து, அன்பு நீராகப் பரந்து, வான் ஆறாக வெள்ளமிட்டோடி இந்திய வாழ்வை வளர்க் கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந் நாடு இவ்வாறு உருப்பெற்றுவருகிறது. இராமனே இந் நாட்டு அரசரின் மேல்வரிச் சட்டம். சீதையே இந் நாட்டுப் பெண்களின் உயிர்நிலை. இந் நாட்டு அரசர் இராமனை எவ்வளவில் பின் பற்றினரோ யாம் அறியோம். இந் நாட்டுப் பெண்களிற்

பலர் சீதையே ஆயினர் ; ஆகின்றனர் ; ஆவர். இந் நாட்டு மக்களின் கனவிலும் நனவிலும், நடையிலும் உடையிலும், பேச்சிலும் மூச்சிலும், ஆடலிலும் பாடலிலும், உடலிலும் உயிரிலும் இந்தக் கதை தவழ்ந்து விளையாடி இன்பமூட்டி வரக் காணலாம்.

இந்த ஒரு கதையே பலபல காட்சி வழங்குகிறது. வான்மீகி வடமொழியிற் கண்ட காட்சி இயற்கை மணம் கமழ்வது. எழுத்தச்சன் மலையாளத்திற் கண்ட காட்சி கடவுளின் திருப்புகழ்மாலையாகத் தித்திப்பது. துளசிதாசர் ஹிந்தியில் கண்ட காட்சி அறிவை மறந்த உணர்ச்சி உலகின் அன்புருவாய்த் திகழ்வது. முல்லையம்மை தெலுங்கிற் கண்ட காட்சி சுருக்க வடிவில் ஒளிரும் பெண்மைக் காட்சி. பிறர் கண்ட காட்சிகள் புலமை ததும்பும் காட்சிகள்.

கம்பன் கண்ட காட்சியோ அன்புலகில் அறிவொளியில் மிளிரும் முத்தமிழ்ப் பெருங்காட்சி. பல்லாயிரம் பாடல்களாய்ப் பாடுமாறு இதிலே மிகமிக ஈடுபட்டான் கம்பன். இவனன்பும் அறிவும் உடலும் உயிரும் இக் கதைப் போக்கில் பேரொளியாய் ஒருங்கியைந்து முறுகி வளர்ந்து நிலையாய் ஒளிர் தருகின்றன. இக் காட்சி இவன் வாழ்க்கையின் பெரும்புரட்சியாம். இதுவே இவன் கலைவாழ்வில் எழுந்த பேரொளி ; பாட்டாய்ப் பெருகிய இவன் உணர்வின் எல்லையில்லா வெள்ளம் ; இவன் கண்ட குணப் பெருங்குன்றின் கொடுமுடி ; இவன் துய்த்த இன்ப வான் மீன்கள் மின்னிப்பொலியும் வானகம்; இவனறிந்த கடவுள் மணம் வீசும் களிக்காற்று. இதன் நுட்பத்தை நாம் அறிதல் வேண்டும்.

இதில் மற்றொரு வியப்பும் உண்டு. பழங்கதை ஒன்றே இவ்வாறு புதுப்புதுக் கதையாக மாறுகிறது. பழம் பொன்னை உருக்கி வார்த்துப் புத்துருவம் பல படைத்துள்ளனர் பாவலர். புத்துருவின் சிறப்பியல்பையே நாம்

நாடுதல் வேண்டும். பாவாணர், தம் உயிரையே பிழிந்தெடுத்து எதிர் வைத்துத் தம் கடவுட்டன்மையால் அழகு ஊட்டிய வடிவங்களே இக் கதைகள். கல்விற் செதுக்கிய வடிவத்தை ஆயும்போது கல்லில் முட்டிக்கொள்வதோ அறிவின் ஏற்றம் ? அக் கல், வன்கல் ஆகலாம் ; மாக்கல் ஆகலாம்; உதிர்கல் ஆகலாம் ; போர்லிக்கல்லும் ஆகலாம். கல்லாராய்ச்சி அன்று இங்கெழுவது ; கல்லிடை எழுந்த உயிரோவிய ஆராய்ச்சியே ஆம். அங்குத் திகழும் அழகிய வடிவமன்றோ கல்தச்சனது உயிருணர்ச்சியிலே பிறந்து வளர்ந்துள்ளது ? அங்ஙனமே, பழங்கதையிலே குற்றம் காட்டுவதிற் பயனில்லை. பாவலர் எதிர்கிடந்த கல் அது. கல்லை உயிராக்கிப் பெரும்புரட்சி செய்துள்ளனர் பாவாணர். அவர்தம் உடலுருக, உயிருருக, உள்ளமுருக, உணர்வுருக அமைத்த உயிர்நிலையையே நாம் ஆராய்தல் வேண்டும். அங்குத்தான் பாட்டு உண்டு ; அதிலேயே நாம் திளைத்தல் வேண்டும்.

போரிற் புழுங்கும் இன்றைய உலகம் புத்துலகைப் பற்றிக் கனாக் காண்கிறது. கம்பன் புத்துலக வாழ்வைக் கண்டு பாட்டாகப் பாடுகின்றான். கம்பனது நோக்கம் இறந்தகால நோக்கம் அன்று ; எதிர்கால நோக்கமே ஆம். ஆனால், ஆயிரம் ஆண்டுகளாகியும் அவன் கண்ட புத்துலகம் இன்னமும் பிறக்கவில்லை. பிளேடோவின் ரிபப்ளிக், மூரின் உடோபியா முதலிய நூல்களிற் காணும் காட்சியினும் சிறந்த காட்சியே கம்பன் காண்கின்றான் ; காட்டுகின்றான் ; நிலைநாட்ட முயலுகின்றான் ! இந்த நோக்கத்துடனேயே ஒவ்வொரு தமிழ்ப் பாவலனும் நாட்டுப் படலமும் நகரப் படலமும் அரசியற் படலமும் பாடிவருகின்றான் என உணராது மயங்கித் தன் பழம்பெரும் புதையலையே அறியாது, வறியனாய் வாடும் தமிழனை என் என்பது ?

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவைவல் லர்அல்லா ரும்இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல் வமும்எய் தலாலே
இல்லாரும் இல்லை உடையார் களும்இல் லைமாதோ!

"ஏகம் முதற்கல் விமுளைத் தெழுந்தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக் கிஅருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம்ம லர்ந்து
போகக் கனிஒன் றுபழுத் ததுபோலும் அன்றே.

"வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினன்"

என வரும் புத்துலகில் நாம் என்று புகுவோம்!

'அழிய வேண்டும்' எனக் கம்பன் விரும்பிய அரக்கர் உலகமே இன்னமும் அழியாது விளங்குகிறது. ஹிட்லர் முதலியோர் நாடுகளைக் கம்பன் பாடல் நினைப்பூட்டுகின்றது. தன் நாடு வாழ, தன் நாட்டு மக்கள் பிறரை அடக்கி ஆளத் தன் இனத்தாருக்கு ஒப்பார் உலகில் இல்லை என்ற பேய்ச்செருக்கே தலைவிரித்துஆடுமாறு 'ஓ'எனவாழ்ந்தான் இராவணன்; வாழ்கின்றார் ஹிட்லர் போன்றவர். அங்கு என்ன குறை? இங்கு என்ன குறை? கலையிலே குறைவா? செல்வத்திலே குறைவா? வீரத்திலே குறைவா? கல்வியிலே குறைவா? ஆனால், அங்கும் இங்கும் உரிமை இல்லை; பிறரை ஆளுதலே உண்டு. பரந்த அன்பு இல்லை; பாழான அரசியற் சூழ்ச்சியே உண்டு. சூழ்ச்சியும், உரிமை குறையக் குறைய அரசனது மனம்போன போக்காய் முடிகிறது. இன்பம் இல்லை; களிப்பே உண்டு. உரிமைக் கலை அன்று, அங்கும் இங்கும் ஒளிர்வது; அடிமைக் கலையே, அங்கும் இங்கும் அலைவது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர் !" என்பது தமிழ்ப் பாட்டு. இராமன் குகனைத் தம்பியாகக் கொண்டான் எனத் திருமங்கை மன்னர் பாராட்டுகின்றார். அங்கொரு காட்சி காண்கின்றான் கம்பன். இராமன் உலகனைத்தையும் உடன் பிறந்தாராகக் கொண்டு சேர்த்தணைக்கும் காட்சி கம்பன் மனத்தே ஓங்கி எழுகின்றது. கம்பன் விரல்விட்டுஎண்ணிக் கொண்டே போகின்றான். தசரதன் பிள்ளைகள் நால்வர். குகன் ஐந்தாமவன். சுக்கிரீவன் ஆறாமவன். வீபீடனன் ஏழாமவன். இமயமுதல் இலங்கைக்கோடிவரையுள்ள மக்கள் அனைவரும் இவ்வாறு ஓரினமாகின்றனர். சாதிப் பித்தேறிய இந்த நாடு, என்றோ இந்த உண்மையை உணர்ந்து உலகிற்கு வழி காட்டுவது ?

இந்தச் சீர்திருத்தக் கொள்கையைப் பெண்களும் பின்பற்றி வாழ்கின்றனர். "ஐவீரும் ஒருவீராய் அகவிடத்தை நெடுங்காலம் அளித்தீர்" என்கிறாள் கம்பன் கண்ட கௌசலை. உலகனைத்தும் ஓரரசாய் அன்பிலே வீறு பெற்றுத் தோன்றும் காட்சியன்றோ ஈது ! பெண் இதனைக் காண்பதே பெருஞ் சிறப்பு. ஆம் ! அங்கே பெண்மையே கம்பன் கண்ட கடவுள். பெண்களே கடவுளாகக் காண்கிறோம். "தேவ ராச குதூகல"த்தில் ஈடுபட்டிருந்தாளாய் வான்மீகி கண்ட அகலிகை, கம்பனுலகில், இந்திரன் சூழ்ச்சியால் மயங்கி, உண்மை உணர்ந்ததும் உணர்வற்றொழிகின்றாள் ; நெஞ்சினூற் பிழைப்பிலாளும் வருத்தமின்றிக் கல்லாய்க் கிடக்கும் இழிநிலையே அடைகின்றாள். உடற்கற்பே யன்றி உள்ளக் கற்பு மாறுகின்றதில்லை. உள்ளம் வருந்த வேண்டா ; உடலே மாறுதல் வேண்டும். அதுவே கல்லாய்ப் பின் மகளாகின்றது எனக் காண்கிறான் கம்பன். அம்மட்டுமா ! சுக்கிரீவனுடைய மனைவியின் கற்பை அழித்த கொடுமைக்கே, வாலி கம்பன் கையில் உயிரிழக்கின்றான். வாலியின் மனைவியாம் தாரை வான்மீகியிலே கள்ளைக் குடித்துக் காமவெறி கொண்டு சுக்கிரீவனை

மயக்கி இலக்குவனையும் மயக்க வருகின்றாள். கற்பில் உயர்ந்தாளாகப் பேசப்பெறும் தாரையை இவ்வாறு காணக் கம்பன் மனம் ஒருப்படுமா? கைம்மை நோன்பில் கனிந்த இந்தக் கற்பரசியின் வடிவமே கம்பன் கண்ணெதிர் இலக்குவன் சீற்றத்தை ஆற்றவருகின்றது. இத்தகைய பெண் பெருமாட்டிகளிடையே பெருங்கடவுளாக வீற்றிருப்பாள் சீதையேயாம்.

நம் உலகில், கடவுள் வாழ்வை நிலைநாட்டக் கனுக் காண்கின்றான் கம்பன். அவன் நிலைநாட்ட வருவது போலிக் கடவுளை அன்று; போரிடும் கடவுளை அன்று; ஆசறு காட்சி ஐயன்மாராம் அந்தண அறவோரின் பாட்டிடையே பயின்று இன்பக் கூத்தாடும் அன்பிற் பெரிய கடவுளையே நிலைநாட்ட வருகின்றான்; உலகின் உயிர்நிலையாம் உண்மைக் கடவுளையே நிலைநாட்டுகின்றான். அதுவே தமிழர் கண்ட தனிக் காட்சி; பாவாணர் கண்ட பாவமுதம்!

பாவோ பலபல நிலையில் ஒளிர்கின்றது. சொல்லழகில் மனத்தைக் கவர்வது பாட்டின் முதல் நிலை. சொல்லழகோடு பொருளாழமும் பிரிவின்றி இயைந்து தோன்ற, பாவாகப் பரந்து உள்ளத்தை வலித்து ஈர்ப்பது பாட்டின் இரண்டாம் நிலை. கதைப் போக்கின் ஒற்றுமைப்பாட்டில் நம் மனத்தை ஈடுபடுத்துவது பாட்டின் மூன்றும் நிலை. கதைப்போக்கின் சிறப்பணைத்தையும் பெருமகனின் வாழ்க்கைப் புரட்சியாகப் புனைந்துரைத்துப் புத்துணர்ச்சி தந்து, அலைந்தழியும் மனத்தை அமைதியாக்குவதே பாட்டின் நான்காம் நிலை. பெருமகனின் வாழ்க்கைப் புரட்சியின் கதைப்போக்கிலே ஈடுபட்டுத் தன் உயிரும் உடலும் உள்ளமும் உணர்வும் இன்பமும் அன்பும் அப் புரட்சிப் பெருந்தீயில் குளித்தெழுந்து தூய்மையாக, அக் கதையினுள்ளே உலகத்தையும் உலகம் படைத்த ஒருவனையும் கண்டு, உலகத்தைச் சீர்படுத்தித் திறம்பட உருப்படுத்தும்

உட்கோளாக அக் கதைப் போக்கின் உண்மையைத் தன் உயிரோடு ஒருங்கு இயையவைத்து, உள்ளவாறு காணுந்தோறும் காணுந்தோறும் அப் பாவலனது உணர்வெலாம் உருகிப் பாக்கடலாய்ப் பரந்து வெள்ளமிட, அதில் எழுகின்ற இன்ப அன்பாம் திரையாட்டத்தில் உலகனைத்தும் ஆழ்ந்து மூழ்கித் திளைக்கும் களியாட்டமே பாட்டின் ஐந்தாம் நிலையாம். இந்த ஐந்தாம் நிலையே பாவின் உயிர்நிலையாம். அங்கு அரசாளும் பாவாணர் மிகச் சிலரே. அச் சிலரில் கம்பனும் ஒருவன்.

கடவுட் காட்சியே கம்பன் கண்ட காட்சி என்றோம். தன் நூலுக்கு, "இராமாயணம்" எனக் கம்பன் பெயரிட்டான் இல்லை. 'இராமாவதாரம்' என்பதே அவனிட்ட பெயர். கடவுள், உலகிடை வாழ வருகின்ற கதையே அஃது. என்று வருகின்ற கதை ? என்றும் வருகின்ற கதை! அத்தகைய கடவுட்காட்சியே கம்பன் காண்கின்ற காட்சி.

இக் காட்சியில் பெண்மையும் கடவுளும் இயைந்து ஒன்றாய் விளங்கக் காண்கிறோம். சீதை நேற்றிருந்த பெண் அல்லள். அவள் இந்தியர் மனத்தில் என்றும் வாழும் உலகப் பெருந்தாய். கடவுளின் அருளையே அங்ஙனம் பேசி வருகின்றோம். அருளே சிறைப்பட்டிருக்கின்றது இராவணன் இலங்கையில்; அருளே சிறைப்பட்டிருக்கின்றது இன்னும் இவ்வுலகில். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கும் மணிமேகலை பிறந்த நாடே இந்த உண்மையை அறிதல் கூடும். பெரியோருக்கும் சிறியோருக்கும் இவ்வுலகம் சிறைச்சாலையை இடம் எனத் தந்து உதவுகின்றது. ஆனால், பெரியோர் அங்கும் பெருஞ் சிறப்புடன் வீற்றிருக்கின்றனர். அருளே வெல்லும்! உண்மை வாழ்வு அருள் வாழ்வே! இன்ப வாழ்வு அருள் வாழ்வே! இந்தியர் கண்ட புதுப்பொருள் அன்றோ அன்பு என்பது? புத்தரும் அருகரும், ஆழ்வாரும் ஆளுடைய பெரியாரும் கண்ட விழுப்பொருள் அன்றோ அன்பு? சுண்ணாம்புக் காளவாய்

சுடுகின்ற காலத்தும் அன்பன்றோ அப்பருக்கு உயிர்நிலையாய் இன்பூட்டியது? "அன்பலாற் பொருளும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே."

இவை அனைத்தும் நம் புனைந்துரை அல்ல; கம்பன் காண்கின்ற கடவுட் காட்சியே ஆம். சீதை சிறையிலே கிடக்கின்றாள்; அவளைக் கண்ட சொல்லின் செல்வனும் அநுமன் அக் காட்சியைப் பலபடப் புனைந்துரைத்து, இராமன் மனங்கொள்ளக் கூறுகின்றான். பலர் நடுவே நிற்கின்றாள் சீதை. தன்னந்தனியள்! என்னே அக் காட்சி! உண்மையிற் பெண் அன்று அங்குத் தோன்றும் உரு. இரக்கமே ஏந்திழை வடிவம் எய்தி வந்துள்ளது. தன் வீரச் செருக்கை எல்லாம் காட்டிட வந்துள்ளான் அவ்வேந்திழை; இரக்கத்தை அழிக்க வருவாரை எள்ளி நகையாட, அவர்தம் சிறைக்குள் தானே புகுகின்றாள். இரக்கமே வெல்லப்போகின்றது என்ற காட்சியே அங்கொளிரும் காட்சி. கம்பனது கடவுட் காட்சியில் எழுந்த உறுதிப்பாடு அது.

பெண்மைக்கடவுளைப் போற்றுகின்ற கம்பன், உலகின் உயிர்நிலையாம் இரக்கத்தைப் பெண்ணாகக் கண்டதில் வியப்பொன்றும் இல்லை. அரக்கர் யார் என இப்பொழுது அறிவோம். இரக்கம் அற்றோரே அரக்கர்; போலி இரக்கங் காட்டுவோரே அரக்கர். அவரும் இரக்கமுடையார்போலக் காட்டிக்கொள்ள முயல்கின்றனர்; இரக்கத்தைத் தழுவ முயல்கின்றனர். இரக்கத்தின் எதிரே அரக்கியர் செருக்கே வீறிட்டெழுகின்றது. உண்மைப் பெண் எதிரே போலிப் பெண்கள் பலர் வருகின்றனர். இதிலொரு தகுதிப்பாடும் உண்டு. உலகை வாழ்விப்பது பெண்ணால், ஆழ்விப்பதும் பெண்ணே ஆம் அன்றோ?

அரக்கரோ அளவற்றோர்கள். அவர்களின் ஆரவாரச் செருக்கிற்கோ அளவில்லை. பிறரை மருட்டி வெருட்டும் பேயெல்லாம் ஒருங்கே கூடி வரினும் இவர்களைக் கண்டால்

அஞ்சும். அத்தகையது இவர்கள் கொடுமை. "அரக்கரது கொடுமையின் கொடுமுடியின் எல்லையைக் கண்ட அமரர்களும் சீதை படும் கொடுமையை அறிந்தவர் அல்லர் ; அவர்களும் இது கண்டு அஞ்சுவர்" என மற்ருேர் ஏடு கூறுகின்றது. "அமரர்கள் குழுவும் அஞ்ச" எனினும், கொடுமையின் மிகுதியே புலனுகிறது. அரக்கியர் தம் "அலகையின் குழுவும் அஞ்ச" வாட்டுகின்றனர் சீதையை. எனினும், செருக்கிடை விளைந்த இன்னல்களைக் கண்டு, இரக்கமாம் ஏந்திழை, தன் மெய்யனைத்தும் தீக்கனல் கதுவப் புழுங்குகிருள் : இஃது ஓர் ஏடு. எனவே, அரக்கியர்க்கும் இரங்குகிருள்; அரக்கியரிடையே இன்னல் உறுவாருக்கும் இரங்குகின்ருள் சீதை என்பதாயிற்று. அஃது அன்ருே இரக்கத்தின் பெருமை ?

"செருக்கு இனல் கண்டு செய்ய மெய்க் கனல் தீக்கச் சீர்த்த" என்பது ஒரு பாடம். இந்தப் பாடத்தினும், "நெருக்கினர் காப்ப நின்பால் நேசமே அச்சம் நீக்க" என்ற பாடமே சாலச் சிறந்ததாம். இரக்கமாம் ஏந்திழை, அரக்கியர் அளவற்ருர்கள், அலகையின் குழுவும் அஞ்ச நெருக்கினர் காப்பவும் அஞ்சாதிருப்பது எங்ஙனம் ? அன்புள்ள இடத்தில் அச்சமேது ? கன்றின்மேல் இருக்கும் அன்பால் அச்சத்தையே மறந்து, புனிற்றிளம் பசுவும் புலியின்மேற் பாயும் அன்ருே ? அன்பிலே திளைக்கின்ற இரக்கமே, உலகை வாழ்விக்க வருகிறது. இராமனும் அன்பில் ஈடுபட ஈடுபட, அந்த அன்புருவமே சீதையின் மனக்கண்ணெதிர் தோன்றுகிறது. இரக்கத்தின் முன்னர், அதன் உயிர்நிலையாம் எதிர்கால உலக அன்பே, கண்ட கண்ட இடமெல்லாம் காட்சி அளிக்கின்றது. அரக்கியர் செருக்காட்டம் ஒன்றும் அங்குத் தோன்றவில்லை. சிலுவைமேல் ஏறிய ஏசு பெருமானர் தம்மைச் சிலுவையில் ஏற்றிய மாக்களின் செருக்காட்டத்தை அறியாராய், அவர்களுக்காகப் பெரிதும் இரங்கி, "அவர்கள் செய்வதறிகிலர்; அந்தோ! ஆண்டவனே!" என

மன்றாடுவது இந்த இன்ப அன்பில் வாழும் இரக்கமே ஆம். புனிற்றிளம் புலிக்குட்டியின்மேல் வைத்த அன்பால், புனிற்றிளம் புலிப்பிணாவின் பசிக்கும் இரங்கி, அப் புலி வாயிற் புகுந்த புத்தர் பிரானாரின் இரக்கமும் ஈதே ஆம். "அஹிம்சா பரமோ தர்ம," "சத்யாக்ரஹம்" என்றெல்லாம் வருகின்ற சொற்றொடர்கள், பொருள் விளங்கிப் பொலியும் இடம் ஈதேயாம். புத்துலக வாழ்வின் கடவுள் நுட்பம் இங்கே இவ்வாறு ஒளிர்கின்றது.

"அரக்கியர் அளவுஅற் றார்கள் அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால் நேசமே அச்சம் நீக்க
இரக்கம்என்ற ஒன்றும் தானே எந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையள்அத் தமியள் அம்மா!"

என்ற இப் பாட்டே கம்பனது இராமாவதாரக் கதையின் உயிர்நிலைப் பாட்டாம். "இராமாயணம் சிறையிருந்தாள் ஏற்றம் கூறும்" என்று இக் காட்சியிற் பழகிய பிள்ளை லோகாசாரியார் தம் ஸ்ரீவசனபூஷணத்தில் எழுதுகின்றார். அவரும் இதனையே உயிர்நிலையாகக் கொள்கின்றார் என்பதும் தெளிவாகிறது. இந்த நுட்பத்தை அறிவோமாயின், கம்பன் கண்ட காட்சியின் பெருமை விளங்கும்; கம்பனை ஓதும் முறையும் விளங்கும்.

தமிழையும் இராமாயணத்தையும் ஒருங்கு வைத்துக் கம்பன் கண்ட ஒற்றுமைக் காட்சியே இக் கடவுட் காட்சியாம். கம்பன் கங்கை என்பான்; சரயு என்பான்; அயோத்தி என்பான்; மிதிலை என்பான். ஆனால், உட்பொருளாய் வருவன எல்லாம் காவிரியும் கொள்ளிடமுமே; உறையூரும் மதுரையுமே. இராமனுக்கு முடிசூட்டுகின்ற கம்பன், வேளாண் மக்களைக் கொண்டு எதிர்கால இன்பத் தமிழனுக்கே அன்பு முடி சூட்டுகின்றான்; கடவுட் காட்சியாகக் காணுமதுவும் தமிழ்த் திருமூலன் கண்ட பழந் தமிழ்க் காட்சியே ஆம்.

" அன்பும் சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

தமிழன் உடலிலும் உயிரிலும் உணர்விலும் ஊறிய காட்சியன்றோ ஈது ? தலைமுறை தலைமுறையாக வரும் தம் பொருளைப் பிறர்பொருள் எனவும், தம்மை வாழ்விக்க வரும் அமுதினை நஞ்செனவும் எண்ணி நடுங்குவாரை என் என்பது !

கம்பன் கண்ட இக் காட்சியைத் தமிழர் என்று உள்ள வாறு காண்பாரோ, அன்றே, தமிழர் வீறுபெற்றெழுந்து உலகினுக்கு வழிகாட்டும் நாளாம் ; அன்றே கம்பன் உள்ளங் குளிரும் நாளாம்.

---

6. நிமிர்ந்து நின்ருன்

எத்தனையோ நூற்ருண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள்: உலகம் பெருங்காடாகக் கிடக்கின்றது. விலங்குகளுடைய செங்கோல் நடக்கின்றது. பெரிய பெரிய மரங்கள், பெரிய பெரிய பாம்புகள், பெரிய பெரிய பல்லிகள்—இப்படிப் பல வாழ்ந்து மறைகின்றன. இவற்றிடையே ஒரு புறம் குரங்கு போன்ற வடிவம் தோன்றுகின்றது : உயரம் ஐந்தடி இருக்கும். வால் இல்லை. ஆம் ! இவன்தான் சிறு மா மனிசன் ; புலிக்கும் பல்லிக்கும் அஞ்சிக் கிளைகளில் இலை மறைவில் பதுங்கி ஒதுங்குகிருன் ; மழைக்கு நடுங்கிக் குகையில் புகுகின்ருன். இவனைப் பொருட்படுத்தும் உயிரே இல்லை.

நாலுகாற் பாய்ச்சலாக விலங்கோடு விலங்காய்த் திரிகின்ருன் இவன். கதிரவன் ஒரு நாள் செக்கச் சிவந்து தொடுவானத்தில் அழகாகக் காட்சி அளிக்கின்ருன்.

கிளையில் உறங்கிய சிறு மா மனிசன் விழித்தெழுகின்றான்; முன் நாள் அலைந்த அலைச்சலால் திமிர்விட்டுக் கிளையைப் பற்றித் தொங்கிச் சிறிது ஊசலாடுகிறான் ; தரையில் கால் பட்டதும் அப்படியே நிற்கின்றான்.

புதுமை ! புதுமை ! முன் காணாத காட்சி ! உலகமே புதிதாகத் தோன்றுகிறது. நாலுகாற் பாய்ச்சலாக வாழ்ந்தபோது மண்ணுங்கட்டித் தரையினையே கண்டு வாழ்ந்த காட்சிபோல இல்லை இது. மூக்கிற்கு அப்பால் தோன்றாத நிலைமை மாறிவிடுகிறது. தொடு வானம் வரை, எல்லாம் வெட்டவெளியாக விளங்குகிறது. நிமிர்ந்து நின்றதும், விண்ணுலகின் வாயிலே திறந்தது போலத் தோன்றுகிறது. நோக்க மாறுபாடு மிகமிகப் பெரிது. ஆழ்ந்து அகன்று ஓங்குகிறது அவனுடைய நோக்கம். காட்சிக்கு ஏற்பக் கருத்தும் விரிகிறது.

கருத்தோடு கையும் விடுதலை பெறுகிறது. முன்னங் காலாய் முடிந்து கிடந்தது முழுதும் சிறந்து முடுகித் திரிகிறது ; கண்டதனை எல்லாம், எட்டுவதனை எல்லாம் தொட்டும் பிடித்தும் எடுத்தும் தடவியும் பார்க்கிறது. கண்ணறிவும் கையறிவும் இவ்வாறு ஒன்றாக இயைந்து விடுகின்றன. 'எக்ஸ்பெரிமெண்ட்' (Experiment) என்ற செய்க்காட்சியே விஞ்ஞானியின் சிறப்பு நிலை. அனைத்தினையும் செய்து பார்த்தே உண்மை காண முயல்கின்றான் விஞ்ஞானி. விடுதலை பெற்ற கைகொண்டு, அனைத்தினையும், அன்னையினும் அன்போடு, கையால் தடவியும், முத்தமிடுவதுபோல வாயிலிட்டும், கைகொண்டு ஆராயும் இந்தக் காட்டாளிடத்தே அந்த நிலையில் விஞ்ஞானி பிறக்கின்றான். கை என்பது 'செய்' என்ற சொல்லின் மாற்றுவடிவம் என்பர். செய்வது கை ; செய்து காண்பது கை ; காட்சிக்கும் பெருந்துணையாய்க் கருத்தினை வளர்ப்பது கை. உலகினை அறியச் சுவடிகள் இல்லாத அந்த நாளில் கைகொண்டு செய்து பார்த்துத்தான்

அறியவேண்டும். மூளையின் வளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கும், இன்றியமையாத தொடர்புண்டு என்பதற்கு இந்தச் சிறுமாமனிசனே சிறந்த சான்று ஆவான். மூளையிற் சிறந்தவன் மனிதன் ஒருவனே. கையிரண்டு பெற்றவனும் மனிதன் ஒருவனே.

கையாற் சிறந்தவன் மனிதன். தோளே அவனுடைய தோழன். இயற்கைக் கைகொண்டு வாழும் இவன், உலகனைத்தினையும் செயற்கைக் கைகளாக் கொண்டு திகழ முயல்கின்றான் ; கைக்கு எட்டாததனைக் கொம்புகொண்டு எட்டுகின்றான் ; உதிர்க்கின்றான் ; அடிக்கின்றான் ; ஆம் ! கொல்லவும் செய்கின்றான். உலகில் உள்ளவை அனைத்தும் இவன் கையிற் சிக்கியதும் அவை இவனுடைய ஆற்றலாக மாறிவிடுகின்றன.

விஞ்ஞானி காணும் பொறிகளும் அணுக்குண்டுகளும், அவனுடைய கையும் தோளுமே ஆம். கைபெற்ற மனிதன் உலகினைக் கட்டிஆளுதல் வியப்போ ? அவன் கையிலே செங்கோலை அடையாளமாக இன்றும் உலகம் வைத்துக் காண்கிறதன்றோ ?

கைவளரக் கருத்து வளரும் நுட்பத்தினை அறியாத நம் கல்வி முறை, நேர் வழி காணாது மூலை முடுக்கில் சிக்கி அலைவது இயல்பேதான். செய்து காண்பதே செவ்விய கல்வி எனக் கண்ட காந்தியார், தொழிலடியாகக் கல்விக் கோட்டையைக் கட்ட முயன்றதன் நுட்பமும், வரலாற்று முறையில் பழைய மரபாக உள்ளதே ஆம். செய்து காண்போனே சிறந்த மகனாவான். உழைப்போர் கையே வன்கை. உழையாதவர் கையே மென்கை. மக்கள், வாழ்க்கை வஞ்சனைப் பேயின் மல்லாட்டத்தில் தலை கீழாக உருண்டதும், " உழைக்கும் வன்கையே அடிமையின் கை ; உழையாது உண்ணும் கையே மென்கை" என்று தொழிலின் இழிவினையும் தொழிலாளியைச் செல்வச் செருக்கால் வேலை வாங்கும் ஆண்மையின் உயர்வினையும் பாடிப்

புகழும் பண்பாடு பரவுவதுஇயல்பேஆம். இந்தச் செயற்கைச் சீர்கேட்டில் அன்றோ உலகம் இன்று சிக்கி உழலுகிறது? "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாரதியார் பாடும் ஆனந்தப்பள்ளு, கையின் விடுதலையில் எழுந்த ஆனந்த சுதந்தரத்தினைப் பழைய மரபினை ஒட்டி, வரலாற்றுவழி பிறழாது பாடுவதேயாம். பாரதியார் புதுக் கால் ஒன்றும் வெட்டவில்லை; தூர்ந்துபோன பழைய வாய்க்காலினையே புதுக்குகின்றார். உலகப் பண்பாடு, வேறு வாய்க்காலில் பாய்வதற்கு இடம் இல்லை.

சிறுமாமனிசனைச் சிறிது திரும்பிப் பார்ப்போம்: அநுமன் நினைவிற்கு வருகிறான். குரங்குபோலக் கிளைகளிற் பாய்ந்துலாவிய அவன், நிமிர்ந்துநின்று தாவிக் குதித்த கதைதானே இராமாயணம்? மனிதனது எதிர் கால வாழ்வினை எல்லாம் அநுமனிடம் காணலாம். அநுமனின் திருவிளையாடல்களைக் கம்பன் பரக்கக் கூறியதெல்லாம் புனைந்துரை ஆகாமல் எதிர்காலத்தின் ஞானக்காட்சியாக விளங்கக் காண்கிறோம். கதிரவன் தேரோடே ஓடிக் கற்ற அநுமன் யார்? பகலெலாம் கதிரவன் தேரோட, இந்தச் சிறுமாமனிசனும் உலகில் ஓடி அலைந்து அனைத்தினையும் கண்டறிகின்ற கதையும் பொய்யா? நிமிர்ந்து நின்ற புகழைக் கம்பனொடு கண்டு களித்துக் கவி பாடலாம்:

"மின்னெடுங் கொண்டல் தாளின்
    வீக்கிய கழலின் ஆர்ப்பத்
தன்னெடும் தோற்றம் வானோர்
    கட்புலத்து எல்லை தாவ
வல்னெடும் சிகர கோடி
    மகேந்திரம் அண்டம் தாங்கும்
பொன்னெடும் தூணின் பாத
    சிலைஎனப் பொலிந்து நின்றான்."

---

7. இன்ப உழைப்பு

குடியரசில் வாழ்கின்றோம். "எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்!" என்று குடியரசின் நுட்பத்தினைப் பாரதியார் பாடினர். உலகம் முழுதும் தழைத்து நிழல் செய்யும் இந்தக் குடியரசு மரம் வளர்ந்து ஓங்க வேண்டுமானால், அதன் ஆணி வேரும் அடிமரமும் கல்வியாக அமையவேண்டும் எனக் கம்பன் கருதினன். "ஏக முதற்கல்வி" என்பதன்றோ அவன் கண்ட கனவு! கதிரவன் ஒளியின்றி, மரம் வளராது; அறிவொளியின்றி, நாடும் வளராது.

இதுபற்றியன்றோ, எல்லோரும் கற்கவேண்டும் என்ற திட்டம் எழுகின்றது? "கல்வியில் எல்லோரும் ஓர் நிறை" என்றால், எழுதப் படிக்கத் தெரிந்தால்மட்டும் போதுமா? இங்குப் பொதுமையை வளர்ப்பதென்றால் கம்பன், வள்ளுவன், நக்கீரன், ஔவை, தொல்காப்பியன் முதலியோரது அறிவுநிலை, எல்லாத் தமிழரதும் பொதுநிலை ஆகவேண்டும் என்று பொருளா? கம்பனையும், வள்ளுவனையும் விறகு தலையனது அறிவுநிலைக்குக் கொண்டுவருவதென்று பொருளா? எல்லோரும் வள்ளுவராக முடியாதெனயாரும் அறிவர். ஆனால், அவ்வாறாக முயலுதல் முடியாதா? அப்படியாவதற்கு வேண்டும் வாய்ப்புக்களைப் பொதுமக்களுக்கு ஆக்கித் தருவது முடியாதா? முயற்சியையும் வாய்ப்பினையுமே வற்புறுத்தவேண்டும். அவற்றால் ஏற்படும் பயன் நம் கையில் இல்லை. அவற்றையே மறுத்தபின் ஆவது யாது? எனவே, எல்லோரும் விறகு தலையர்களாக உழைத்து, வள்ளுவராக அறிவுலகில் திகழுவதே குடியரசாம். "வண்மை யில்லையோர் வறுமை இன்மையால்" என்றபடி வளமையில் பொதுமை வேண்டுமே அன்றி வறுமையிற் பொதுமை வேண்டா; அறிவிற் பொதுமை வேண்டுமே அன்றி, அறியாமையிற் பொதுமை வேண்டா.

இன்று, நம் நாட்டில் பலர் அறியாமைநிலையில் புழுங்குகின்றனர். இவர்களுக்கேற்ற நூல்கள் பலப்பல எழுதல் வேண்டும். அவை பாலர் பாடம்போல இருப்பதும் இன்றியமையாததேயாம். ஆனால், இந்த நாட்டில் எழுகின்ற நூல்கள் எல்லாம் பாலர் பாடமாகவே இருக்கவேண்டும் என வற்புறுத்தலாமா? தாய், தன் மகள் தலையில் 5 பேனும், தன் மகன் தலையில் 4 பேனும் ஆக 9 பேன் குத்தினாள் என்ற கணக்குமட்டும் அறிந்தால் போதுமா? ஐன்ஸ்டைன் இன்று கவர்ச்சிச் சட்டத்தினையும் மின்காந்தச் சட்டத்தினையும் ஒன்றாக்கிப் புதிதாகத் தந்துள்ள கணக்கினையும் அறியவேண்டாவா? அறிய முயலவேனும் வேண்டாவா? பலரும் அறியாத கணக்கென ஐன்ஸ்டைன் வாய்க்குப் பூட்டிட்டு, எழுதும் கைக்கும் விலங்கிட்டு விடலாமா?

உழைப்பை வெறுக்கின்ற மனப்பான்மை ஒழிய வேண்டும். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" உழைப்பின்றி நம் நாடு உணவு பெறுவதெங்கே? எந்திரங்கள் செய்வது எங்கே? பிறர் கையை நாடாது, தளர்நடை நீங்கி, நின்று நடப்பது எங்கே? உள்ளத்து உழைப்பும் வேண்டும்; அறிவு உழைப்பும் வேண்டும். பென்சிலின், ஸ்ட்ரெப்டோமாய்சின் போன்ற புது மருந்துகள், மழையின்றியும் விரைவில் வளரும் நெற்பயிர்கள், அளவுக்குமேல் சர்க்கரை தரும் கரும்புகள், புதைபாண விமானங்கள், அணுஆற்றலால் இயங்கும் எந்திரங்கள்—இவை எல்லாம் அறிவின் உழைப்பின்றித் தோன்றுமா? பாடங்களை நெட்டுருப்பண்ணி ஒப்புவிப்பதால்மட்டும் இவை வருமா? இப்படிப் பட்டம் பெற்றவர் பலர் இருந்தும் நம் நாடு முன்னேறாதது ஏன்? அந்த நிலையையும் தாண்டி மேலுக்குப் போதல்வேண்டும்.

காப்பி குடிக்கின்ற நேரத்தில் கதைகளைப் படித்து எறிந்துவிடுவது, சிகரெட்டோடு போட்டியிட்டுப் பாடலைப்

படித்து முடிப்பது, அரைத் தூக்கத்தில் கட்டுரைகளைப் படிப்பது, கள்ளுக்குப் பதிலாகப் பேசும்படங்களை அனுபவிப்பது—என்று இருந்தால் உயர்ந்த அறிவுநிலை எழுவது அருமை, அருமை, அருமை ! இத்தகையவை வேண்டா என்பதில்லை. இவையும் வேண்டும் ; ஆனால் இவையே முடிந்த பொருள் என்ற மனப்பான்மை ஒழியவேண்டும். இவற்றிற்கு மேலானவற்றைப் பெறுகின்ற மனப்பான்மை அமையவேண்டும்.

பாட்டெல்லாம் மேல்வாரியாகப் போவன என்று எளிமையையே வற்புறுத்தி, மக்கள் மனத்தே உழைப்பினை எள்ளி நகையாடும் மனப்போக்கினைப் பலர் வளர்த்துவிடுகின்றனர். பலரையும் பாட்டனுபவத்தில் ஈடுபடுத்தும் சிறந்த வழி இஃது என்பதனை நாம் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். ஆனால், முடிந்த முடிபான உண்மை என இதனை எவரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு பிள்ளை பெறுகிறவள் படுகின்ற பாடெல்லாம் பட்டே, புலவன் ஒரு பாட்டுப் பாடுகின்றான். பாட்டு வெளியானபோது தங்கு தடையின்றி எளிதே இன்னோசையாக ஓடியிருக்கலாம். அழகான பிள்ளையை எளிதே பெறுவதும் உண்டு. ஆனால், பத்து மாதம், தாயும், ஒழியாது பட்ட பாடுகள் என்ன என்ன ! கம்பன் உலகிடை வாழ்ந்தான். பல காட்சிகள் அவன் மனத்தில் தோய்ந்தன. அவன் இராமர் கதையைப் படித்தான். அவன் அனுபவங்கள் அக் கதையைச் சுற்றி உருப்பெற்றுப் பாட்டாக வெளி வந்தன. "எவ்வளவு குமுறல்கள்! எவ்வளவு போராட்டங்கள் ! எவ்வளவு கொலைகள் !"—இப்படி எல்லாம் கம்பன் மனத்தில் அடித்த புயற் காற்றுக்கள், முடிவில், அமைதி இன்பமாய்க் காவியமாய் உருப்பெற்று ஒளிர்கின்றன. அவனுடைய கவிதையுள்ளம் உலகையும் கிழித்து ஆழச் சென்று அப்பாலுக்கும் அப்பாலான உண்மைகளையும் உணர்த்துகின்றதென உணர்கின்றோம். ஆமாம் ! அந்த

ஆழ்ந்தநிலை எல்லோருக்கும் பொதுவானதொரு நிலை. அனைவரும் தெளிவாகச் சொல்ல மாட்டாமல் அலைவதை எல்லாம், கம்பன் சொல்லுகின்றான். கேட்டதும், "இது நம் அனுபவமன்றோ!" என்று வியக்கின்றோம்; களிக்கின்றோம். ஆனால், "நவில்தொறும் நூல் நயம் போல" என்று, பாடல்களைக் கற்றுத் தெளிந்த திருவள்ளுவர், தம் அனுபவத்தினைக் கூறுகின்றார். நம் அனுபவம் வளரவளரப் பாக்களின் பொருளும் மேலும்மேலும் புத்தம்புதிதாக விளங்கிவரக் காண்கிறோம். திருவள்ளுவர் நூல் இன்றும் புதிதாக விளங்குவது இதனாலேயே. எத்துணை உரையாசிரியர்கள் இன்னும் அந்த நூலுக்குத் தோன்றிக்கொண்டே வருகின்றனர்.

மேல்வாரியாகப் படிப்பதிலும் இன்பம் உண்டு: பழகப் பழக மேலும்மேலும் இன்பம் துளிர்க்கும். பின்னே பின்னே பொங்குகிற இன்பம், நம்மை உயர்நிலையில் தூக்கி அதில் முழுத்திவிடுகின்றது. இதனை மறந்து, மேல்வாரிப் போக்கே பாட்டு என்பது உண்மையன்று. இயற்கைக்கு எதிர் கண்ணாடி பிடிப்பதே பாட்டு என்று பலர் கருதி விடுகின்றனர். பாட்டினைப் புகைப்படக் கலையாக்கிவிடுகிற இந்த முயற்சி, பாட்டின் உயிர்க்கே உலைவைப்பதாகும். இயற்கையைப் பாவலன் பாடாமல் எதனைப் பாடப் போகின்றான்? 'இறவுப் புறத்தன்ன ஈர்ம்புற மஞ்சள்'— 'இருமீன் போன்ற மஞ்சட் கிழங்கு'—என்பதனைவிடச் சிறந்த புகைப்படம் ஒன்று காணமுடியுமா? ஆனால், நாம் காணும் இயற்கைப் பொருள்கள் துண்டுதுணுக்குக்கள். இவற்றின் முதலும் அறியோம்; முடிவும் அறியோம்; இடைநிலையும் நன்கு விளங்குவதில்லை. இப்படிப்பட்ட துண்டுதுணுக்குக்களை முழுமுழுப் பொருளாக அனுபவத்தோடு ஒன்றுபடுத்திக் காட்டுவதே புலவன் பாட்டாம். வண்டு, பூவில் மொய்ப்பதனை யார் அறியார்? அந்த வண்டு, தலைவியின் கூந்தலில் மொய்க்க வருவதனையும் யாரும்

பார்த்திருக்கலாம். ஆனால், ஒரு புலவர் காண்கின்றார்; கற்புடைய பெண்ணின் கூந்தலே இயற்கை மணமுடையது என்று அவருக்குத் தோன்றுகிறது. தலைவனும் தலைவியும் புத்தம்புதிதாய்க் கூடும் காதல் காட்சி அவர் கண்ணெதிரே எழுகின்றது. ஏதோ ஒரு சாக்குச் சொல்லித் தலைவன் தலைவியைத் தொடவேண்டும். இத்தகைய நிலையையும் காண்கின்றார் புலவர். வண்டினை ஓட்டுவது போலக் காதலியின் உடலைத் தொடுகின்ற இன்பம், பாட்டில் பொங்கி வழிகிறது. மறுபடியும், வண்டு மொய்ப்பது கண்டு, அதனோடு பேசுவதுபோலத் தன் அன்பினைக் காதலன் வெளியிடுகின்றான். "நல்ல வண்டன்றோ நீ; நீ நன்றாக இருக்கவேண்டும்; ஏதோ சொல்! அவள் கூந்தலின் மணம் போல ஏந்தப் பூவினுக்கும் இல்லை அன்றோ?" என்று பேசுவதுபோலப் புலவர் காதுக்குக் கேட்கின்றது. மலரில் வண்டு மொய்க்கின்ற காட்சி, புலவர் அனுபவத்தில் தோய்ந்து, உழுவலன்பில் விளைந்த காதல் வரலாறாய், இன்பப் பேச்சாய் இனிக்கின்றது. பொருளற்ற புல்லிய வண்டு, வெறுந் துண்டுதுணுக்காய் நில்லாது, இன்பப் பேச்சினைத் தூண்டிவிடும் இன்பக் காட்சியாய், இயற்கையின் அடிப்படையாய், அன்பின் திறவு கோலாய்ப் பொருள்பெற்றுயர்வது காண்க:

> "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,
> காமம் செப்பாது கண்டது மொழிமோ!
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
> செறியெயிற்று அரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ நீ அறியும் பூவே!"

எனவே, புலவர் கண்ணுக்கு எதிரே தோன்றும் பொருள் அடிப்படையுண்மையின் விளக்கமாகத் தோன்றுகிறது.

இயற்கைக்கு எதிர் கண்ணாடி பிடிக்கின்ற நிலைமைக்கு மாறாக, மழுங்கித் தோன்றும் இயற்கை வடிவம் எந்த ஒரு

மறைபொருளின் நிழல் என்பதனை நமக்குக் காட்டிவிடு-கின்றான் புலவன். இயற்கை, அதற்கு அப்பாற்பட்டதற்-கெதிர் கண்ணாடி பிடிக்கின்றது. அதுவும் அழுக்கு மலிந்த கண்ணாடியே. குழம்பிக் கிடக்கும் நிழலை விட்டு அடிப் படையான அழகினை நம் மனத்திற் பதியவைக்கப் பாடுவதே பாவலன் தொண்டு. அந்த அடிப்படையின் ஆழத்தில் குதிக்கும்பொழுது, நம் அனைவரின் அடிமனத்தின் ஆழத் தினையும் தாண்டி விளங்கும், அனைவர்க்கும் பொதுவான, உயர்ந்த மனநிலையிற் புகுகின்றான் புலவன். எல்லோர் உள்ளத்திலும் அவன் புகுகின்ற நுட்பம் இதுதான். நாம் நினைத்ததுபோலப் புலவன் பாடுகின்ற உளவும் இது தான். பிளேட்டோ என்பவர் இந்த உண்மையை ஒரு புராணக் கதை கூறி விளக்குகின்றார்; உலகில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் அடிப்படையான பொருள், முழுநிலையில் அப்பட்டமாகக் கருத்து வடிவாகக் கடவுள் உலகில் இருக் கின்றதெனப் புராணம் பாடுகின்றார். புலவர்கள் தக்க கற்பனைத் திறத்தால் மேலுலகங்களிலும் சென்று உண்மை வடிவினைக் கண்டு பாட வருகின்றனர் எனப் பௌத்த நூல்கள் கூறுவதுண்டு.

இதன்படி, கண்ணாடி பிடிப்பவர் புலவர் அல்லர்; இயற்கையே. இயற்கை, வெறு நிழலே. உண்மை அதற்கு அப்பாற்பட்டது. அதனைக் காண்பதே புலவர் காட்சி. காவியத்திலும் ஓவியத்திலும் வரும் காட்சியே உண்மைக் காட்சி. இயற்கை எவ்வளவுக் கெவ்வளவு அந்த உண்மைக் காட்சியோடு ஒத்திருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அழகியதாம்; சிறந்ததாம். இயற்கைபோன்றிருந்தது ஓவியம் என்பதன்று சிறப்பு. ஓவியம் போன்றிருந்தது இயற்கை என்பதே சிறப்பு. "ஓவியத் தெழுத ஒண்ணா உருவம்" என்று பேசுவது இதனாலேயேஆம். சீதை அசோக வனத்தில் வாடியதனைப் புனைந்துரைக்கும்போதும், மன் மதன் எழுதிய ஓவியம் மாசுகண்டதுபோல வாடினாள்

எனக் கம்பன் புகழ்கின்ருன். உயிரா வணமிருந்து உற்று நோக்கி உற்று நோக்கி உள்ளக் கிழியில் உரு எழுதுகின்ற அப்பரைப்போல உண்மை உருத் திட்டுகின்றவர்களே புலவர்கள் என்பது தமிழர் கருத்து.

இவை எல்லாம் பிற்காலக் கேடு என்று கூறுவதற்கு இல்லை. சாத்தனுர் தமது மணிமேகலையில் மலர்வனம் புக்க காதை பாடுகின்ருர். மணிமேகலை மலர் கொய்யப் புகுந்த உவவனம் எத்தகையது? குரவமும் மரவமும் மலர்ந்திருந்தன.

" வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் "

என அவர் புகழ்கின்ருர். " ஓவியம் போன்றது இயற்கை " என்பதன்றி வேறு யாது? நாம் இங்கு வித்தகர் என்ற சொல்லில் தோன்றும் உணர்வின் உழைப்பினை, படைப்பின் பரிவை அறிதல் வேண்டும்.

" மணிமேகலையும் பின்னேர் செய்த நூலே. இயற்கையில் ஈடுபடுவதொன்றே சங்ககாலத்தில் நாம் காண்கிரேம். இத்தகைய அழிவழக்குப் பேச அங்கு இடம் இல்லை " என்று சிலர் நினைக்கலாம். சங்க காலத்தில், பாட்டின் உயிர் நிலையான தொடரை அறியும் பண்பாடு நிலைத்திருந்தது. அந்த உயிர் நிலையான பாத் தொடரினையே, அப் பாட்டினைப் பாடிய புலவர்கட்கு இட்டுத் தமிழ் மக்கள் தங்கள் நன்றியறிதலைத் தமிழ் உள்ளளவும் நிலை நாட்டிவிட்டனர். 'செம்புலப் பெயல் நீரார்', 'ஓரே ருழவர்', 'ஊட்டியார்' என்ற பெயர்கள் அவ்வாறு எழுந்த பெயர்களே ஆம்! இந்த உயிர்நிலைப் பாத்தொடரின் இனிமையால், இந்தப் புலவர்களின் இயற்பெயர்கள் மறைந்து போயின. 'ஊட்டியார்' என்பார் நாம் இங்கு விளக்கிவரும் செய்யுள் மரபினைத் தாம்பெற்ற சிறப்புப் பெயர்கொண்டே விளக்கிவருகின்ருர்.

அவர் பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ள செய்யுட்கள் இரண்டு (அகம். 68, 388). தலைவியின் தாய் படுத்துக் கொண்டு கிடக்கின்றாள். அவள் நன்றாகத் தூங்கிய பின்னரே காதல் நாடகம் நடைபெறலாம். அவள் தூங்குகிறாளோ இல்லையோ என்று பார்க்கவேண்டும். தோழி பேசிப்பார்க்கின்றாள். அவள் மனத்திற்குப் பிடித்தனவற்றை—திடுக்கிடக்கூடியவற்றை—ப் பேசினால் அன்றோ தூக்க மயக்கத்தையும் விட்டு 'ஊம்' கொட்டுவாள் தாய்! செடிகொடி வளர்ப்பதில் ஊக்கம் கொண்டு அவற்றின் அழகில் ஈடுபடும் குடும்பம் இஃது. "அன்று காலை நாம் கண்டு மகிழ்ந்த கூதளந்தழை எல்லாம் குழைய, அருவி, வெள்ளமிட்டு ஓடுகிற ஒலியைக் கேட்டாயோ தாயே?" என்கிறாள் தோழி; "இன்று காலையில் நாங்கள் ஊசலாடிய அசோகத்தினைப் புகழ்ந்தாயல்லவா! அதோ அதன் மேல் இடி விழுந்தது" என்று திடுக்கிடச் செய்கிறாள். ஆனால், தாய் நன்றாகத் தூங்கிவிட்டதால், அவள் காதில் ஈதொன்றும் விழவில்லை. தலைமகன், மழை என்றும் பாராமல் வந்தானும். இங்கே, தோழி, தாயின் மனத்தைக் கவரும் பொருளைப் பற்றித் திடுக்கிடும் வழியில் கூறிப்பார்க்க முயன்றபோது, அசோகத்தினைக் குறிக்கின்றாள். தாயின் மக்கள் ஆடும் ஊசல் கட்டிய மரம் என்பதொன்று! இயற்கையிலே கண்ணைக் கவரும் அழகியது அம் மரம் என்பது மற்றொன்று! எத்தகைய அழகு? ஓவியக்காரனே நிறம் ஊட்டித் தீட்டினாற் போன்றது; அல்லது, சாயம் ஊட்டுங் கலைஞன் சாயம் ஊட்டியது போன்றது என்றே தோழி புகழ்கிறாள். [கலையைப்போன்றது இயற்கை என்று புனைந்துரைப்பதிலேயே புலவர் மனம் போகின்றது.] "ஊட்டி யன்ன ஒண்டளிர்ச் செயலை": "சாயம் பூசினது போல அவ்வளவு ஒள்ளிதாய்ப் பளபளக்கும் செக்கச் சிவந்த தளிர்களை யுடைய அசோகம்!"

கவிஞன் கண்ணோடு பிழைப் பதில்லை. இயற்கைதான் கண்ணோடு பிழைப் பதுண்டு.

மற்ரொரு பாட்டிலும் இச் செய்யுள் மரபினை அப் புலவரே போற்றிவளர்க்கின்ருர். தலைவி, தலைவன்மேற் கொண்ட காதலால் வாடிவருந்துகிருள். சுற்றத்தார் வெறியாட்டெடுக்கின்றனர். வெறியாடுபவன், 'முருகனுல் வந்தது' எனக் கூறுவானுயின், "உங்கள் இறைவன்தான் வேட்டையாடி வேழத்திற் பாய்ந்த சிவந்த அம்போடு அந்த யானை போனவழி கேட்டு வருவானே?" என்று கேட் போம் என்கிருள் தோழி. தலைவன் முதன்முதல் கண்ட போது நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைப்பூட்டுகின்ருள் தோழி. அன்போடு காதல் உள்ளம் தோன்றத் தலைவன் இவர்கள் எதிர் வருகின்ருன்; யானையை எய்து ஓட்டமெடுக்கச் செய்யும் வீரம் எதிர்தோன்ற வருகின்ருன். வீரத்திற்குக் குழையும் காதலுள்ளம் இங்கே தோன்றுகிறது. யானை மேற் பட்ட அம்புவழியே பச்சைக் குருதி பீறிட்டெழு கிறது. அம்பு இப்போதுதான் சிவப்புச் சாயம் பூசப்பெற் றதுபோல விளங்குகிறது. வீரக் கொடுஞ்செயலும் அன்புக் கண்ணுல் நோக்கும்போது சாயம் பூசுவது போலத் தோன்றுகிறது. சாயம் பூசுவதில் இளைஞர் மனம் மிகமிக ஈடுபடுகிறது என்பது மன இயல்பு. உணர்ந்தார் கண்ட உண்மை. "ஊட்டி அன்ன ஊன்புரள் அம்பொடு, காட்டுமான் அடி வழி யொற்றி, வேட்டஞ் செல்லுமோ நும்மிறை?" என்பதிலும், இயற்கை, கலைத்திறம்போன் றிருப்பதே சிறப்பாம் என்ற கொள்கை விளங்குதல் காண்க. "ஊட்டி" என இவ்வாறு இந்த மரபினைப் போற்றிப் பாடியதனைப் புகழ்ந்த சங்க காலப் பெரியோர் இப் புலவர்பெருமானுக்கு ஊட்டியார் என்றே திருப்பெயர் சூட்டினர். ஊட்டி என்ற சொல்லின் பொருளாழத்தில் ஆழும்போதன்ருே, படைப்பில் எழும் இன்ப உழைப்பெல்லாம் விளங்குகிறது! அந்த இன்ப உழைப்பு என்றும் நிலைபெறுவதாக!

8. கலையழகும் சுவையழகும்

அழகு என்பது, “ இது நன்று, இது தீது ” என்று கூறுவதுபோல, “ இஃது அழகு ” என்று கூறும் தீர்வை நிலையாம் முடிபே ஆகும். “ இதனைவிட இஃது அழகு ” (வானங் கோழியை விட மயில் அழகு) என்று ஒன்றோடு மற்றொன்றனை முறைமைப்படுத்திக் கூறும்போது விளங்கு வது முறைமை நிலை அழகாகும். அவ்வாறு ஒன்றோடும் முறைமை பாராட்ட வேண்டாதபடி சிறந்து விளங்கும் அழகு தனி நிலை அழகு (Absolute beauty) அல்லது தனியழகு ஆகும். அதுவே, அனைத்துமாய் நீக்கமற நிற்கின்ற நிறை அழகாகும். இங்கே, அனைத்துலகங்களும் அங்குள்ள அனைத்துப் பொருள்களும் ஒன்றாக இயைந்துவிடுகின்றன. இவ்வாறு ஒன்றாகத் திரண்ட திரட்சி தவிர வேறொன்றும் இங்கு இருப்பதற்கில்லை. இப்போது இந்த ஒருமை எதனை அனுபவிக்கும்? தன்னைத் தானே நுகருகிற தன்னனுபவமே இங்கு உண்டு. முறைமைநிலை அழகில், மக்கள், தனித் தனியே, “இஃது அழகு, அஃது அழகு ” என முடிவு கூறு கின்றனர். அத்தகைய சுவைத் தீர்ப்புக்கள், அவர்கள் அகத்தோ புறத்தோ கண்ட “ கனவு மயில் ” முதலிய பொருள்களைப் பற்றியனவே ஆகும். ஆனால், தனிநிலை அழகிற் காணப்படும் பொருள், வேறு இருப்பதற்கு இல்லை. வேறொன்றோடு ஒப்பிட்டு மதிப்பிடுதற்கு, ஒரு பொருளும் இங்கு இல்லை. இந்த நிலையில், முழுதாய்த் திரண்ட நிறைவே, தன்னிற்றானே விளங்கித் தன்னில் தானே சிறக் கின்றது. அனைத்தினையும், ஒன்றாக இயைந்த முழுநிலை யாகக் கொள்ளும்போது, இந்த முழுநிலையே அனுபவமாக விளங்குகிறது. எதன் அனுபவம் இது? தன்னைத் தானே முழு நிலையாகக் காணும் தன்னனுபவமே இஃது. இந்த வகையில், இது கலப்பற்ற சுவையனுபவமாகிறது.

இவ்வாறு முழுநிலையும் உள்ளுணர்வாக எழுமானால், இந்த வகையில் இதனைப்பற்றித் தீர்வை கூறுதலும் கூடும். எனவே, முடிபு கூற முனைகிற தீர்வையுணர்வும் இங்கு எழும் என்பதாயிற்று. தீர்ப்புக்கள் பலபல வகையாக எழும் எனக் கண்டோம். எல்லாவகையான தீர்ப்புக்களும் திரண்ட முடிவே இந்த முழு நிலையில் தீர்ப்பாக எழும். தனித்தனி வகையாகக் கூறப்பெறும் தீர்வைக்கும், இந்த முழுநிலைத் தீர்வைக்கும் உள்ள தொடர்பு யாது? கணக்கு நூற் புலவர்கள் 1, 2, 3, 4 என்று எண்களைக் கூறுவது போல, "முடிவிலாதது" என்ற ஒன்றனையும் ஓர் எண்ணாகக் கருதுவர். அதற்கு முடிவற்ற எண் (Infinity) என்று பெயர். எட்டினைப் படுத்துவைத்தாற்போல எழுதும் குறியே (∞) அதனைச் சுட்டுவதாகும். பூச்சியத்தினை ஒன்றால் வகுத்தால் என்ன ஈவு வரும்? முடிவற்ற எண்ணே ஈவாக வரும் என்பர். 1, 2 போன்ற தனித்தனி எண்களுக்கும் முடிவற்ற எண்ணிற்கும் என்ன தொடர்போ, அன்ன தொடர்புதான் தனித்தனித் தீர்வைக்கும் முழுநிலைத் தீர்வைக்கும் உள்ள தொடர்பு ஆகும்; முறைமைநிலை அழகினுக்கும் தனிநிலை அழகினுக்கும் உள்ள தொடர்பாகும். இங்கே, காணப்படும் பொருளே இல்லை என்றோம்; ஆதலின், காண்பானே உண்டு. காண்பானே அனைத்துமாய் அமைந்த நிலையே இங்கு உண்டு; தன்னைத்தானே காணும் தன்னனுபவமே இங்கு இருக்க முடியும். இந்த அனுபவம், இந்த அனுபவத்தினையே அழியாததொரு முடிவுநிலையாகக் கண்டு அவ்வாறே தீர்வை கூறுகிறது. இத்தகைய தீர்வை நிலையில் ஒளிர்வதே தனியழகாகும்.

வெவ்வேறு பொருள்களைப் பற்றி, "அழகு, அழகு" என்று பேசும்போது யாது தோன்றுகிறது? அந்த அந்தப் பொருள்களின் ஒருப்பாட்டமைப்பு அழகிய வடிவமாகத் தோன்றுகிறது; குறைநிலையாக அன்றி நிறைநிலையாக விளங்குகிறது. இவ்வாறே, தனிநிலையழகி

லும் அனைத்தும் இயைந்ததோர் ஒருப்பாட்டமைப்பே தோன்றும்; அஃது ஒரு வடிவமாக (form) விளங்கும்; ஒற்றுமைக் காட்சியாம் அந்த வடிவமும் நிறைநிலையாகத் திகழும். அனைத்துமாய் நிற்கிற காண்பான், அனைத்துமாகிய தன்னையே அனுபவிக்கும்போது அனைத்தும் ஒன்றாகத் திரண்ட திரட்சியினுள்ளே அமைந்த ஒவ்வொரு பகுதியையும் எவ்வாறு காண்பான்? முழுதுமாய் நின்ற நிலையில், ஒரு குறைவும் இன்றி ஒற்றித்து இயைந்து நிற்பதாகவே ஒவ்வொரு பகுதியினையும் காண்பான். எல்லாச் செயலையும் தனக்குள் அடக்கிக்கொண்டு விளங்கும் தனது இயல்பின் முழுத்தோற்றமாகவே அனைத்துமாகிய ஒருப்பாட்டமைப்பு நுகரப்பெறும்; ஒற்றுமைஇயைபு அனுபவிக்கப் பெறும். இந்த முழுதுமாம் நிறைநிலையே இங்குள்ள ஒவ்வொரு பகுதியினையும் அடக்கி ஆள்கிறது. ஆனால், அவ்வாறு அடங்கி நிற்கும் ஒவ்வொரு பகுதியும் முழுதுமாம் நிறை நிலைக்கு இன்றியமையாததே ஆம். ஒன்றைவிட்டொன்று வாழ முடியாது. உயிரில்லையானால் உடலின் ஒவ்வோர் உறுப்பும் பயனற்றதாகும். உயிரே அவை அனைத்தினையும் அடக்கி ஆள்கிறது. ஆனால், அந்த உறுப்புக்களிற் சிறு பகுதி கெட்டாலும்,உயிரின் அனுபவம் முழுநிலையனுபவமாகாது, ஊளியனுபவ மாகும். "கண் கெட்டால் குருடனும்; காது கெட்டால் செவிடனும்" என்று காணவில்லையா? ஆதலின், முழுநிலை மகனாக நிற்க, ஒவ்வோர் உறுப்பும் இன்றியமையாது வேண்டப்படும். ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தால், அந்த முழுநிலை கெட்டதே ஆகும். இந்த உயிர்ப்பொருளமைதி (Organic relation) யாம் இயைபு, அனைத்துமாய் நிற்கும் தனிநிலையழகிலும் உண்டு.

தனிநிலையழகினைப்பற்றி இவ்வளவும் கூறியது ஏன்? இதுவே ஒவ்வொரு கலைப்பொருளின் பொது இயல்பாகும். கலைப்பொருள்களிடத்தே இந்த இயல்பு நன்கு விளங்கக்

காண்போம். இதனை அறியவே இவ்வளவும் கூற வேண்டுவதாயிற்று.

இத்தகைய அழகனுபவத்தின் வெளிப்பாடே (Expression) கலை (Art). கலைப்பொருள்களைப் படைத்துத் தருபவனே கலைஞன் அல்லது கலைவாணன். (கலை என்பதனைக் "கல்" என்ற பகுதியிற் பிறந்தது என்பதற்கேற்பக் கலைஞன் என்ற சொல்லும் வலைஞன் என்ற சொல்போல அமைந்தது எனக் கொள்வோமாக.) கலைப்பொருளின் திறனாய்ந்து தெளிந்து துய்ப்பவனே சுவைஞன் அல்லது சுவைவாணனும் (Critic) ஸஹ்ருதயன். கலைஞன் கலையை அமைத்துத் தருவதனால் யாது செய்யக் காண்கிறோம்? அவன் தன் அனுபவத்தினைச் சுவைஞனிடம் கொண்டு சென்று உய்க்கின்றான். கலை வெளிப்பாடு இவ்வாறு விளங்குகிறது. கலைவாணனைப் பொறுத்தமட்டில் இங்கு வெளிப்பாடாவது யாது? ஏதோ ஓர் அனுபவத்தினை வெளியே கொண்டுவருதலே ஆம்; புலப்படுத்தலே ஆம். சுவைவாணனைப் பொறுத்தமட்டில் ஏதோ ஒன்றனை உட்கொள்ளுதலாம்; துய்ப்பதாம்; அனுபவிப்பதாம். வெளி வந்து புலப்படுவது யாது? உட்கொண்டு துய்க்கப் பெறுவது யாது? அழகு அனுபவம் என்ற ஒன்றே ஆகும். புலப்பட வெளிவரும்போது, அந்த வெளிப்பாட்டினாலே, அந்த அனுபவம், அந்த வகையில்; கவிஞனது நிலையாகச் சிறந்து தனிநிலை அடைகிறது; உட்கொண்டு துய்க்கும்போது, அந்தத் துய்க்குஞ் செயற்பாட்டால், சுவைஞனது நிலையாகச் சிறந்து தனிநிலை யுறுகிறது. ஏன்?

கலை, எங்கும் நோக்கமுடையதே ஆகும்; ஆதலினால், அந்த நோக்கம் அவ்வாறு சிறந்தே விளங்கும். கலை, வேரூன்றி வளரும் இடமும் வித்தும், அனுபவமே எனக் கண்டோம். கடலின் காட்சியைப் பாடும் நிலையைப் பார்ப்போம்: நம் மனம், முன்னரே உணர்ந்ததொரு செயற்பாடாக (Activity)க் கடலின் காட்சியனுபவம் நம்

மனத்தில் முற்றி எழுந்து திரளுதல் வேண்டும். அந்தச் செயற்பாடு, நாம் முழு மனத்தோடும் மிகமிக விரும்புவது: ஆதலின், மனம் அதுவாக மாறுகிறது; கலையாக வெளிப்படுகிறது. இங்கு நோக்கம் என்ன? அந்த அனுபவத்தினை வெளிப்பாடாக மாற்றுவதே ஆம்; வேறொன்றும் அன்று. அந்தக் கடற்காட்சி, கலைப் பொருளாம் பாட்டாகவோ ஓவியமாகவோ வெளிவரும். உள்ளெழுந்த முழுநிலை யனுபவம் நிறைநிலையாக ஒற்றித்தே வெளிவரும். இந்த நிறைநிலை சிதறுண்ணாது திகழ வேண்டுமானால், இதற்குள்ளே யமைந்த ஒவ்வொரு பகுதியும் இந்த முழு நிலையாம் ஒருப்பாட்டமைப்பிலே ஒன்றாக இயைந்து நின்று விளங்கி வாழவேண்டும். கலைவாணனது நிலையிலிருந்து நோக்கும் போது இந்த வெளிப்பாட்டின் உண்மை இவ்வாறு தோன்றுகிறது.

சுவைவாணனது நிலையிலிருந்து நோக்கும்போது இஃது எவ்வாறு விளங்குகிறது? கடற்காட்சியின் ஓவியத்தினையோ பாட்டினையோ சுவைஞன் உட்கொண்டு துய்க்கின்றான். இந்த அனுபவம், முழுமனத்தோடும் அவன் மிகமிக விரும்பும் செயற்பாடாகும். ஓவியமாகவோ பாட்டாகவோ கலைஞன் புலப்படக் காட்டிய வெளிப்பாட்டினைச் சுவைஞனது அனுபவமாக விளங்குமாறு அங்குக் கொண்டுசென்று உய்ப்பதே வெளிப்பாட்டின் நோக்கமாகும். கலைஞனிடத்துப் புலப்படும் வெளிப்பாடு, சுவைஞனிடத்தில் உளப்பாடாக முழுதும் மாறுகிறது. இதுவே, இங்குள்ள புரட்சி; வியக்கத் தக்க புரட்சி. இயற்கைக்கும் கலைக்கும் இடையே உள்ள பெருங் கடலை நம்முடைய மனம் இத்தகைய செயற்பாட்டினால் அனுமானிலும் சிறந்த முறையிற் கடப்பதனைக் கலையுலகில் காண்கின்றோம். வெளிப்பாடு என்ற இயல்பு கலையில் இல்லையானால், இது முடியுமா? தனி ஒருவனது சிறப்பு அனுபவம் மற்றொருவன் சிறப்பு அனுபவமாகும் நுட்பம் யாது? கலையுலகில்

உள்ளது பொதுஉடைமையே அன்றித் தனிஉடைமை அன்று. கலைஞன், பொது உடைமையாகப் படைத்ததனை அனைவரும் துய்ப்பதில் வியப்பு என்னை ? பொதுஉடைமை யாகக் கலைஞன் தன் படைப்பினை அமைத்ததே இங்குள்ள வியப்பு !

தனிமகனது வாழ்க்கையை ஒரு பேராறு என்று கூறலாம். அது மாறிமாறிப் புரண்டோடிக்கொண்டே போகிறது. அதிலே அவன் இமைக்கு இமை குளித்து வருகிறான். சிலசிலபோது அழகனுபவம் அங்கே சிறந்து தோன்றுகிறது. எப்போது ? அவன் வாழ்க்கையின் பல கூறுகளும் ஒருப்பாட்டமைதியாக இயைந்து ஓர் உருப் பெற்று விளங்கும்போதே அழகனுபவம் எழுகிறது. அப்போது அவன் அந்த ஒருப்பாட்டமைப்பினை உன்னிப்-பாகப் பார்க்கின்றான். அந்த அமைப்பு அவன் கருத்தினைக் கவர்கிறது. அவன் மனம் அதனை விடாப்பிடியாகப் பிடித் துக்கொண்டு ஊசலாடி அதிலேயே தோய்ந்தடங்குகிறது. தியானமும், தாரணையும் அங்கு உண்டு. அவன் கண்டு களிக்கும் பொருள், அவ்வாறு தனது இயற்கையான சுற்று நிலைச் சூழலை விட்டு எழுந்து, அவன் உள்ளத்தினுள்ளே தனிநிலை அடைகிறது ; நிறை நிலையில், விளங்கும் முழுப் பொருளாகத் திரண்டெழுகின்றது ; சிறப்பு நிலை வடிவம் கொண்டு திகழ்கிறது ; உயிரோவியமாக ஒளிர்கிறது.

" உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே "

என்று தமது கடவுட் கலையனுபவத்தினைத் திருநாவுக்கரசனார் பாடுகின்றார்.

இவ்வளவும் கலைஞனது மனத்தில் நிகழுவதே ஆம். இங்கு ஒருப்பாட்டு வடிவம் (Form) வெளிப்படுகிறது என்றோம். அஃது அக நிலை வெளிப்பாடே ஆம். ஆனால், அதனை உலகிற்கு அறிவிப்பதற்குப் புறநிலை வெளிப்பாடும் வேண்டும். இல்லையானால், புகைவண்டி ஓடுகின்றபோது எழும் வெற்றொலியேபோல, வாழ்க்கையின் போக்கிலே வாழ்க்கைக்குத் தொடர்பின்றி நிகழும் நிகழ்ச்சியாகவே கலை முடியும்; ஊமை கண்ட கனவாகவே போகும். கலையானது சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்டது. பொது உடைமை என்று பேசுவது அதனாலன்றோ? பொதுமக்களுக்கும் கலை இன்றியமையாததுபோலக் கலைக்கும் பொது மக்கள் இன்றியமையாது வேண்டும். பொதுமக்களை நோக்கிப் பொதுஉடைமையாக வெளிப்படுவதன்றோ கலை? எனவே, கலையின் அடிப்படை இந்த அனுபவத்தின் வெளியீடே ஆகும். இல்லையானால், கலைக்கு என்று தனித்துச் சுட்டக்கூடிய செயற்பாடே இல்லையாய்ப் போகும்; கனவுக்கும் கலைக்கும் வேற்றுமை இல்லையாகும்.

கலையில் நிகழும் வெளிப்பாடு, முழுஅனுபவத்தின் குறைவிலா நிறைவாம் வெளிப்பாடாகும். எழுத்தாளர்கள் பயன்படுத்தும் வியப்புக் குறி (!) போன்றவையும் வியப்பு முதலியவற்றை வெளிப்படுத்துவதால் கலையாகுமா? ஆகா! அவை அனுபவத்தின் துண்டுதுணுக்குக்களே அன்றி முழு அனுபவம் அல்ல. அனுபவமாகிய கடற்காட்சியைப் புகைப்படம் பிடிக்கலாம்; அசையும் படமாகவும் பேசும் படமாகவும் காட்டலாம். ஆனால், அவையும் உலகத்தில் வெட்டி எடுத்த துண்டுதுணுக்குக்களே; உலகக் குழப்பத்தின் சிதறல்களே; இங்குள்ள சிக்கல்களில் தோன்றி அறுபட்ட முடிச்சுக்களே. அங்கே மூளி அனுபவமே உண்டு; முழு அனுபவம் இல்லை. பாட்டு அல்லது ஓவியத்திலோ

இக் காட்சி முழுப்பொருளாய் நிறைநிலை பெற்றுத் தெளிவாக விளங்கும்.

கண்டதனைக் கண்டபடி காட்டுபவனே கலைஞன் என்பர். தான் கண்டபடி காட்டுபவனே அன்றிப் புகைப்படம் பிடிப்பவன் அவன் அல்லன். கலைஞன், தான் கண்டதனைக் கருத்திலே உள்ள உணர்ச்சித் தீயிற் புடம் போட்டுப் பொன்னுக்குகிறான் ; தன் வாழ்க்கையின் நோக்கத்திற்கேற்ப உருப்படுத்துகிறான் ; புத்துயிர் கொடுக்கின்றான் ; உலகில் உலவ விடுகின்றான் : இதுவே கலைஞன் செய்வது. இயற்கையைச் சாயல் பிடிப்பவன் (Imitate) கலைஞன் என்று சொல்லலாமா ? கண்ணாடியில் தோன்றும் நிழல் போன்றதா கலை ? இல்லை, இல்லை ! அப்படியானால் அது குரங்குக் கலையாம் ; நையாண்டிப் பாட்டாம். வெளிப் பொருளே இல்லாதபோதும் பாட்டெழும். அங்கே எதனைச் சாயல் பிடிப்பது ? கவிஞன் வெளிப்பொருளைப் பற்றியே பாடாது போகலாம். அவனுக்கு எழும் அனுபவம் அவனுடைய மனத்திலிருந்தே எழலாம். ஒரு புதிய எண்ணம் அழகாக உள்ளத்தே தோன்றினால், அதனை அவன் பாட்டாகப் பாடலாம் அன்றோ ? அங்கே அவனுக்குப் புறமாகச் சாயல் பிடிக்க என்ன இருக்கிறது ? லுக்ரீஷியஸ் என்ற லத்தீன் பாவாணர் தம்முடைய சமயக் கொள்கையையே பாட்டாகப் பாடியுள்ளார். மாணிக்கவாசகரது திருவாசகம் அவருடைய உயிர்க்குள்ளே தோன்றிய அனுபவத்தின் பெருக்கன்றோ ? தாமரை, கதிரவன் முதலிய வெளிப்பொருள்களைப் பாடும்போதும் சாயல் பிடிப்பது என்பதற்கு இடம் இல்லை. ஏன் ? பாவாணன் உள்ளத்தில் எழுகின்ற அனுபவத்தைப் பார்த்தால் இது விளங்கும். அங்கு உள்ளம் என்றும், வெளிப்பொருள் என்றும் வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்றாய் ஒருப்பாட்டு வடிவம் பெற்று இயைந்துள்ளன ; ஒன்றாய்த் திரண்டு பிரிபடாத முழுநிலையாகிவிட்டன. அந்த , முழுநிலை,

உள்ளுணர்ச்சியாக விளங்குகிறது. அங்கே, காண்பான் யார்? காணப்படுபொருள் எது? இவ்வாறு பிரித்துப் பேசும் பேச்சுக்கே இடம் இல்லை. அவ்வாறு பிரித்துப் பேசும் பிரிநிலைப் பேச்சு எழுவது ஏன்? நம் நனவு நிலையில் ஆராய்ச்சி செய்யும்போது பேசும் பேச்சே அந்தப் பிரிநிலைப் பேச்சு. இந்த ஆராய்ச்சி, கலையனுபவத்திற்குப் பின்பு எழும் ஆராய்ச்சியே ஆகும். கலையின் வெளியீடு இந்தப் பிரிநிலை ஆராய்ச்சிக்கு முந்தியது; முழுநிலையாய் நிறைந்து, விளங்கிய அனுபவத்தோடு ஒட்டியது; அதனையே அது வெளியிடுகிறது. வெளிப்பொருளே வேறு தோன்றாத அந்த முழுநிலையிற் புறப்பொருளைச் சாயல் பிடிப்பது எங்கே?

"கலையானது அனுபவத்தின் வெளிப்பாடு" என்றால், முதலாக அந்த வெளிப்பாடு பொதுஉடைமையாக வரும் புறநிலை வெளிப்பாடு என்பதே பொருள். 'புறநிலை' என்றதாலேயே புறப்பொருளைச் சாயல் பிடிப்பது என்பதற்கில்லை. அந்த வெளிப்பாடு, வெற்று நிலையில், "நானே படைத்ததும் அன்று; உலகம் கொடுத்ததும் அன்று;" "நான் வேறு; உலகம் வேறு" என்பதின்றி இரண்டும் இயைந்து விளங்கும் முழுநிலை அனுபவத்தின் வெளிப்பாடே யாம். "அனுபவத்தின் வெளிப்பாடு" என்றால் இரண்டாவதாக இதுவும் விளங்குகிறது. இதனாலேயே, "அருங் கலை" என ஒன்றாகப் பேசுகின்றோம். ஒரே விளக்கொளி பச்சைக் கண்ணாடியின் ஊடே வந்தால் பச்சையாயும், நீலக் கண்ணாடியின் ஊடே வந்தால் நீலமாகவும் தோன்றுகிறது. இந்த வேற்றுமை எதனால் எழுந்தது? நீலமாகவும் பச்சையாகவும் இருக்கும் ஊடுநிலை வேற்றுமையால் எழுந்தது. உண்மையில் இருப்பது விளக்கொளி ஒன்றே. இவ்வாறே நிறத்தைத் தீற்றும் ஓவியம், கல்லிற் செதுக்கும் சிற்பம், ஒலியில் மனத்தினை ஓடவிடும் இசை, சொல் கொண்டு அமைக்கும் பாட்டு என அருங்கலைகள் பலவாகப்

பிரிகின்றன. எதனாலே? தாம் புலப்பட வெளிப்பட்டுத் தோன்றும் நிறம், கல், ஒலி, சொல் என்ற ஊடுநிலைகள் (Mediums) பலவாதலினாலேயே பலவாகத் தோன்றுகின்றன. ஆனால், இவை அனைத்தும், மேலே கூறியபடி, உள்ளுணர்வாய் நிகழும் அனுபவத்தின் நின்றும் அரும்பி மலர்ந்து, அந்த அனுபவத்தின் முழுநிலை வெளிப்பாடாகக் கனிந்து, அழகாக இனிக்கின்றன. அதனாலேயே, இவை அனைத்தினையும் அருங்கலை என ஒரு குடும்பமாகக் கொண்டாடிக் கலை என ஒருபெயர் கொண்டே அழைத்து வருகின்றோம்.

கவிஞன் நிலையிலிருந்தும் சுவைஞன் நிலையிலிருந்தும் கலையை இதுவரை நோக்கியதிலிருந்து ஒருண்மை தெளிவாகியுள்ளது. "கலை என்பது, கலைஞனது அனுபவத்தினை அவன் வெளியிடும் வெளிப்பாடுமட்டும் அன்று; அந்த வெளிப்பாட்டினையே சுவைஞன் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவமும் ஆகும்" எனக் கண்டோம் அன்றோ? இங்கே முதலாவதாகக் கலைஞன் காட்டும் புறநிலை வெளிப்பாடு உண்டு. அதனை அனுபவிக்கும்போது இரண்டாவதாகச் சுவைஞனிடத்தே தோன்றும் வெளிப்பாடு அகநிலை வெளிப்பாடேயாம். அஃது அவன் உள்ளத்தே தோன்றுவது; அவனுடைய அனுபவம். கலை என்பது நம்முடைய மனத்தின் செயற்பாடு என்றோம். இங்கே, மனத்தில் இவ்வாறு இரண்டு வேறு நிலைகள் படைபடையாகத் தோன்றுகின்றன. ஒரு படை கலைஞன் அனுபவம்; மற்றையது, சுவைஞன் அனுபவம். இவ்வாறு கூறினாலும், கலைஞனே தன் கலையின் வெளிப்பாட்டில் ஈடுபட்டுச் சுவைஞனாகி இரண்டாம் அனுபவத்தினையும் தானே துய்க்கக்கூடும். ஒவ்வொரு கலைஞனும் தன் கலையின் ஊற்றாகப் பொங்கி உயிர்பெற்றுத் துள்ளும் உணர்வினை அனுபவித்துக் கொண்டே வெளிப்படுத்தும்போது, அதனைப் புலப்பட வெளிப்படுத்திநிற்கும் தன் மனத்தின்

செயற்பாட்டு நிலையையும் அனுபவிக்கின்றான் என்றே சொல்லுதல் வேண்டும்.

இவ்வாறு முன் பின் ஆதலினால், இரண்டாகித் தோன்றும் அனுபவங்களின் வேற்றுமையை நாம் உணர்தல் வேண்டும். கலைஞன் உள்ளத்தே முகிழ்க்கிற உள்ளெழுச்சியாய் விளங்கும் அனுபவம் முடிவுநிலையாக நாம் கருதும் மற்றோர் அனுபவத்திற்கு வழியும் ஆகலாம். அதுவே நாம் முடிபு நிலையாகக் கருதும் அனுபவமாகவும் ஆகலாம். ஆராய்ச்சி, இந்த அனுபவத்தினைச் சிதைக்கின்றது எனக் கண்டோம். ஆனால், அந்த ஆராய்ச்சிக்குப் பின்னர்க் கலையைப் பழைய நிலைக்குக் கொண்டுபோய் அரசு வீற்றிருக்கச் செய்யலாம். அதனாலேயே, திறனாய்ந்து தெளியும் ஆராய்ச்சிக்கு இடம் உண்டாய்உள்ளது. அவ்வாறு பழையபடி கலையை நிலைநிறுத்தும்போதும் உள்ளெழுச்சியாம் அனுபவமும் அதனைப் பிறருக்குப் புலப்பட வைக்கும் வெளிப்பாடும் ஒன்றாகிவிடுவதில்லை ; ஒன்றாகாமற் போனாலும் இரண்டாக வேறுபடாது, பிரிவின்றி இயைந்து கலையாகவே விளங்கும். இங்கே வெளிப்பாடாம் அனுபவத்தின் பயன் யாது? அழகே ஆகும். அப்போது யாது நிகழ்கிறது? உள்ளெழுச்சியாம் அனுபவத்தினை வெளிப்பாடாம் அனுபவத்தினும் வேறாகவேகொண்டு மதிப்பிடுகின்றோம். திறனாய்ந்து தெளிவோருக்கு அவ்வாறு வேறாகக் கண்டு மதிப்பிட்டதனால் பெரியதொரு மன ஆறுதல் உண்டாகிறது. பின்னர் வெளிப்பாடாம் அனுபவத்தினைத் துய்க்கும்போது இவ்வாறு மன ஆறுதலாய் எழுந்த முன்னைய புத்துணர்ச்சியும் பின்னைய நுகர்ச்சியிற் புகுகின்றது. இதனாலேயே இரண்டும் ஒன்றாகத் தோன்றுகின்றன.

9. மார்கோ போலோவும் தமிழ்நாடும்

முதற் பகுதி

(மார்கோ போலோ 13-ஆம் நூற்றாண்டின்
தமிழ் வாழ்க்கையைப் பற்றி எழுதிவைத்த குறிப்புக்கள்)

இந்தியாவைச் செல்வப் புதையல் என மேனாட்டார் கருதி வந்தனர். பலர் அங்கிருந்து இங்கு வந்து இந்த நாட்டினைப் பற்றிப் பல குறிப்புக்கள் எழுதிவைத்துள்ளனர். அலெக்ஸாண்டருக்குப்பின் இந்த நாட்டினோடு மேனாட்டின் தொடர்பு வளர்ந்தது. உரோமப் பேரரசு சாய்ந்ததும் மேனாட்டில் இருள் மூடியது. இந்திய வெறிகொண்டு கொலம்பசும் வாஸ்கோடகாமாவும் புறப்படுவதற்குமுன், கீழ் நாடுகளைப் பற்றிய பேரவாவினை மேனாட்டில் கிண்டியவர் மார்கோ போலோ என்பவராவர். இவர் இத்தாலியில் வெனிஸ் மாநகரத்தில் 1254-ல் பிறந்தார். இவருடைய தந்தையும் சிறிய தந்தையும் உயர்குடியிற் பிறந்த வாணிகர்கள். 1260-ல் இவ்விருவரும் சீனாவுக்குப் புறப்பட்டுச்சென்றனர்; இரண்டாம் முறை இவர்கள் 1271-ல் புறப்பட்டபோது மார்கோ போலோவையும் உடன்கொண்டு சென்றனர்; 24 ஆண்டுகள் சுற்றிய பின் 1293-ல் ஊர் திரும்பினர். ஜெனோவாவுக்கும் வெனிசுக்கும் நடந்த போரில், மார்கோபோலோ சிறைப்பட்டார். ஆனால், வெற்றி வெறியால் தலைமயங்காமல், ஒரு நன்மை செய்தனர் ஜெனோவா நகரத்தினர்; மார்கோ போலோ கூறும் கதைகளை எல்லாம் ருஸ்தி செல்லோ என்பவரைக் கொண்டு எழுதுவித்தனர். நோபெல் பரிசு பெற்ற பேர்ல்பக் என்ற அம்மையார் இவரை முந்தமுதல் தோன்றிய உலகக் குடிமகன் (First World Citizen) என்பர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனக்கொண்டு மேனாட்

டில் இருந்து புறப்பட்டுக் கீழ்நாடெல்லாம் சுற்றி வந்த ஒரு பரந்த உள்ளம், கண்டதனை எல்லாம் குழந்தை மனத்தோடு கண்டு களித்த ஊக்கம், இதனை எல்லோருக்கும் சொல்லவேண்டும் எனப் பொங்கி எழுந்த அன்பு-இவையே இவர் நூலை இன்னும் வாழ்விக்கின்றன. சீனப் பேரரசர் குப்லாகானைப் பற்றி இவர் எழுதியன, புராணம்போல் ஆய்விட்டன. இவர், நம் தமிழ் நாட்டிற்கும் வந்தனர். இவர் கண்டவற்றை ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்குப் பின், நாம் இன்று படிப்பது இன்பம் தருவதொன்றும். சோழப்பேரரசு வீழத் தொடங்கியபோது கட்டற்றுக் கிடந்த தமிழ் நாட்டினையே இவர் கண்டார். தமிழ் நாட்டினை "மாபர்" என்று அரேபியக் கப்பலோட்டிகள் வழங்கி வந்தனர். சுந்தரபாண்டியன் சீரும் சிறப்பும் பெற்ற காலம் அது. தமிழ் நாட்டினைப் பற்றி மார்கோ போலோ எழுதியுள்ளதனைக் கீழே மொழி பெயர்த்துத் தருகின்றோம் :

" இலங்கைத் தீவினை விட்டு மேற்காக 60 மைல் கப்பலில் போனதும் மாபர் (தமிழ்நாடு) என்ற பெரிய நாட்டினை அடைவீர். இஃது ஒரு தீவு அன்று ; பெரிய இந்திய கண்டத்தின் ஒரு பகுதியே ஆகும். உலகில் செல்வத்திலும் மாட்சிமையிலும் இது தலைசிறந்த நாடாகும். இதனை நான்கு அரசர்கள் ஆண்டுவருகின்றனர்கள். இவர்களில் தலையாயவன் பெயர், "செந்தர் பண்டி" (சுந்தர பாண்டியன்) என்பதாம். இவனுடைய நாட்டில் மாபர்க்கும் ஜைலன் (சீலோன் - இலங்கை) தீவுக்கும் இடையே உள்ள வளைகுடாவிலேதான் முத்துக் குளிக்கும் துறை உண்டு. அங்கே தண்ணீர் 12-15 ஆள் ஆழத்திற்கு மேல் இராது ; சில இடங்களில் 2 ஆள் ஆழத்திற்குமேல் இல்லை. முத்துக் குளிக்கும் தொழில் கீழே கண்டபடி நடைபெறுகிறது :

" ஒரு சில வணிகர்கள் தனித்தனிக் கூட்டாக வர்த்தகக் குழுக்களாகச் சேர்வார்கள். இவர்கள் பலபல அளவில் உள்ள பல கப்பல்களையும் படகுகளையும் வேலைக்கு

வைத்துக்கொள்வார்கள். இவற்றில் தரைப்பாரஞ் சாம்பிக் கயிறு களும் உண்டு. இவற்றால் நங்கூரம் பாய்ச்சிவிட்டுக் கப்பலில் எளிதில் ஏறிக் கடலில் போகலாம். இந்தக் கப்பல்கள் முத்துள்ள சங்குகளைக் குளித்து எடுக்கும் கலையில் வல்லவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு செல்லும். இந்தச் சங்குகளை வலைப் பை வழியாக மேலே கொண்டுவருவர். இந்தப் பைகள் முத்துக் குளிப்போர் உடம்பில் கட்டி இருக்கும். இவர்கள் தண்ணீருக்குள் மூச்சுவிட முடியாத போது, நீர் மட்டத்தின் மேலே வருவர்; சில நேரம் கழித்து மறுபடியும் குளிப்பர். இப்படிப் பலமுறை நிகழும். இவர்கள் இந்த வேலையில் நாள் முழுதும் விடாப்பிடியாக ஈடுபடுவார்கள். எல்லா நாடுகளுக்கும் வேண்டும் அளவு சங்குகளை இவர்கள் ஒரு பருவத்திற்குள்ளேயே தங்கள் முயற்சியால் சேர்த்துவிடுவார்கள். இந்த வளைகுடாவில் உள்ள முத்துத்துறையில் கிடைக்கும் முத்துக்கள் பெரும்பான்மையும் உருண்டையாகவும் நல்ல ஒளியுடையனவாகவும் உள்ளன. பெருவாரியாகச் சங்கு எடுக்கும் இடம் தாய்நாட்டிலேயே இருக்கிறது. இதற்குப் பெதேலா என்று பெயர். இங்கிருந்து இந்தத் துறை தெற்கே 60 மைல் வரை நீண்டு செல்கிறது.

" இந்த வளைகுடாவில் ஒருவகைப் பெரிய மீன்கள் நிறைந்துகிடக்கின்றன. இவை குளிக்கிறவர்களை அடிக்கடி கொன்று தொலைக்கின்றன. இதற்காகச் சில மந்திரக்காரர்களை இந்த வணிகர்கள் தங்களோடு அழைத்துச்செல்கிறார்கள். இவர்கள் பார்ப்பனக் குடியைச் சேர்ந்தவர்கள். தங்களுடைய மந்திர வித்தையால் இந்த மீன்களை வசியம் பண்ணித் தங்கள் விருப்பப்படி நடக்கச் செய்து ஒரு கேடும் விளையாதபடி இவர்கள் தடுக்கின்றார்கள். முத்துக் குளிப்பது பகலில்தான் நடக்கும். ஆகையால், இவர்கள் மாலையில் மந்திர சக்தியைச் செலுத்தாமல் விட்டுவிடுவார்கள். இராக் காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு முத்துச் சங்கு

களைத் திருட வந்து குளிக்கும் வஞ்சகர்கள், மந்திரக் கட்டில்லாத இந்த மீன்கள் நடையாடுவதற்கு அஞ்சி, அவ்வாறு செய்ய முனையாது விட்டுவிடுவார்கள் என்பது இவர்களுடைய எண்ணம். இந்த மந்திரக்காரர்கள் இதைப் போல எல்லா வகையான பறவைகளையும் விலங்குகளையும் வசியம் செய்யும் கலையிலும் கைதேர்ந்தவர்கள்.

" முத்துக் குளிப்பது ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் ; மே மாதம் நடுவரை நடைபெறும். இந்தத் தொழிலில் ஈடுபடும் உரிமையை அரசனிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும். இந்தத் தொழிலில், வருவாயில் பத்தில் ஒருபங்கே அரசனுக்குத் தரும் விலையாகும் ; மந்திரக்காரனுக்கு இருபதில் ஒரு பங்கு சேரும். எனவே, வணிகர்களுக்கே இதனால் பெரிய ஊதியம் உண்டு. மேலே சொல்லிய பருவகாலம் முடிவதற்குள் சங்குகளை எல்லாம் அந்த இடத்தில் குளித்தாய்விடும். பின்னர்க் கப்பல்களை அவர்கள் வேறு இடத்திற்குக் கொண்டு செல்வர் ; இந்த வளைகுடாவிலிருந்து 300 மைல் தூரம் போவர் ; அங்கே செப்டம்பர் மாதத்தில் தங்கத் தொடங்கி அக்டோபர் மாதம் நடுவரை இருப்பர். அரசன் மேற்கண்டவாறு பத்தில் ஒரு பங்கு முத்துக்களைப் பெறுவதோடு நல்ல வடிவாய் உள்ள பெரிய முத்துக்களையும் பொறுக்கி எடுத்துக்கொள்ளலாம். அவற்றிற்கு அவன் நிறைப் பணம் தருவதால், அவற்றை அவனிடம் கொண்டுபோய்க் காட்டுவதில் வியாபாரிகள் கசப்பு ஒன்றும் கொள்வதில்லை.

" நாட்டின் இந்தப் பகுதியில் உள்ளவர்கள், மானத்திற்காகக் காக்கவேண்டும் உறுப்புக்களைமட்டும் சிறு துணியால் மறைத்துக்கொண்டு மற்றைப்படி ஏறக்குறைய நிருவாணமாகவே போகின்றார்கள். . " அரசன், விலையான துணிகளை உடுத்திக்கொண்டிருக்கின்றான் " என்பது தவிர அவன் ஒன்றும் பிறரைவிட மிகுதிப்படியாக உடையணிந்திருப்பதில்லை ; ஆனால், பலவகை அணிகலன்களைப் பூண்டு

பிறரினும் பெருந்தன்மையாகச் சிறந்து விளங்குகிறன் ; விலேயேறிய நீலம், பச்சை, கெம்பு முதலிய இரத்தினங்கள் நிறைந்த கழுத்துப் பட்டை (கண்டசரம்), பட்டு நூலில் முத்தும் கெம்பும் கோத்துக் கழுத்திலிருந்து மார்புவரை தொங்கும் மாலே (ஹாரம் ; இரட்டை மணிமாலே) இவற்றை அணிந்திருக்கிறன். இந்த மாலேயில் மணிகள் 104. (108 என்பதனே மறந்து 104 என எழுதுகிருர் மார்கோ போலோ). 104 என்ற எண்ணுக்குக் காரணம் உண்டு. அரசனுடைய சமய முறைப்படி ஒவ்வொரு நாளும் தன் கடவுளே நோக்கி அத்தனே முறை மந்திரம் செபம் செய்யவேண்டும். அவனுடைய முன்னேர், என்றும் இதி லிருந்து தவறியதே இல்லே. இந்த மந்திரம் "பகஉதா" என்ற சொல்லே ஆம். (பகவுதா என்பது பகவத் என்பதனேக் குறிக்கலாம் ; "பகவான்" எனத் தமிழில் வழங்கும் இந்தச் சொல்லேக் கேட்டது நினேவில் இருந்திருக்கலாம். பாண்டியர்கள் சைவர்கள் ; ஆதலின் "நமச்சிவாய" என்ற மந்திரத்தினேயே செபித்திருப்பர்.) இந்த மந்திரத்தினே இவர்கள் 104 (108) முறை செபிக்கின்றனர். பொன்னுல் செய்து முத்தும் மணியும் கொண்டு புனேந்த தோள்வளேகள் மும்மூன்றனேத் தோளில் அரசன் அணிந்திருக்கின்றன் ; அவ்வாறே புனேந்துள்ள பொன் பட்டைகளே (கழல் சிலம்பு முதலியவற்றை)த் தன் காலில் மூன்று வேறு இடங்களில் பூண்கின்றன்; கால் விரல்களிலும் கைவிரல்களிலும் மதிப் பிட முடியாத மோதிரங்களே அணிந்துகொண்டிருக்கிறன். இந்த இரத்தினங்களும் முத்துக்களும் இவனுடைய நாட் டுப் பொருள்கள் ஆதலின், இவ்வளவு பெருமிதமான அர சச் சின்னங்களே அழகாக வெளிக்காட்டிக் கொள்வது இந்த அரசனுக்கு மிகமிக எளிதாம்.

" இவனுக்கு மனேவியரும், காதற் கிழத்தியருமாகக் குறைந்த அளவு ஆயிரம் பேர் இருப்பர். தனக்கு மகிழ்ச்சி தரும் பேரழகியைக் கண்டதும் உடனே அவன் தன் ஆசை

யைத் தெரிவித்து விடுவான் ; தன்னோடு உடன் பிறந்தவனுடைய காதலியை ஒரு முறை தன் காதலியாகக் கொண்டு வந்து விட்டானும். உடன் பிறந்தவன் இடம் பொருள் ஏவலுணர்ந்த அறிவாளி. படை தொடுப்பதற்கு அடிக்கடி எண்ணியிருந்தும் இதனைப் போருக்குக் காரணமாக்க வேண்டா எனப் பலர் கேட்டுக் கொண்டதற்கு அவன் இணங்கிப் போய்விட்டான்.

" அரசன் தன்னைச் சுற்றிப் பல வீரர்களை வைத்திருக்கிறான். " இம்மைக்கும் மறுமைக்கும் அரசனுக்கு வேளைக்காரர் " என்ற சிறப்புப் பெயர் அவர்களுக்கு உண்டு. அவர் மெய்காப்பாளராய் அரண்மனையில் அரசனது திருமேனியைக் காக்கின்றனர் ; உலாப் போகும்போது பக்கத்தில் குதிரையேறிச் செல்கின்றனர். எப்பொழுதும் அரசனுடனேயே செல்லுகின்ற உடனுறை சுற்றம் அவர்களே ஆவர். அவர்கள் அரசாங்கத்தில் எல்லாத் துறைகளிலும் மிக்க அதிகாரம் செலுத்திவருகிறார்கள். அரசன் இறந்ததும் அவனுடலைக் கொளுத்தும் சடங்கு நடைபெறும்போது, அந்த உண்மைச் சேவகர்கள் அந்தத் தீயில் குதித்து அரசனது உடலோடு எரிந்து சாம்பராவார்களாம் ; மறுபிறப்பிலும் அவனுடைய உடனுறை சுற்றமாகத் தொண்டாற்ற இவ்வாறு செய்வார்களாம்.

" கீழே கண்ட வழக்கமும் இதேபோல் வழங்கி வருகிறது : அரசன் இறந்தால் அவனுக்குப் பின் அரசனாகும் அவனுடைய மைந்தன், முன்னவன் விட்டுப்போன பண்டாரத்தை (பொக்கிஷத்தை)த் தொடுவதே இல்லை. நாடு முழுதும் தனக்கு முழு உரிமையோடு வந்த பின்னர்த் தன் தந்தைபோலத் தானும் பெரிய பண்டாரத்தை நிரப்ப ஆற்றலற்றுப் போனதாகத் தன் ஆளும் திறமையிலேயே குறைவாய் முடியும் எனக் கருதியே இவ்வாறு மைந்தன் நடந்து வருகின்றனனும். இந்த மனப்போக்கின் காரண

மாகத் தலைமுறை தலைமுறையாய் அளவற்ற செல்வம் சேர்ந்து வருகிறது என்று மக்கள் கருதுகிருர்கள்.

"இந்த நாட்டில் குதிரைகள் பிறந்து வளர்ந்து பல்கிப் பெருகுவது இல்லை. அரசனும் அவனுடைய மூன்று தம்பி மாரும் ஆர்மஸ் (Hormuz), தியூவார் (Murbat), பெசார் (Sohar), ஆதென் (Aden) என்ற இடங்களிலுள்ள வணிகர்களிடமிருந்து குதிரைகள் வாங்கப் பெரும்பணத் தொகையைச் செலவிடுகின்றுர்கள். இந்த வியாபாரிகள் 5000 வரை குதிரைகளை இறக்குமதி செய்து ஒவ்வொரு குதிரையையும் 500 பொன்னுக்கு விற்பதால் இந்த நாட்டிற்குக் குதிரைகளைக் கொண்டுவரும் வியாபாரத்தில் பெரிய செல்வம் படைக்கின்றுர்கள். அந்தக் குதிரைகளைச் சரிவரப் பாதுகாக்கவோ, வேண்டும் மருந்துகளைத் தரவோ தக்கவர்கள் இல்லாமையால் இது காரணமாகவே ஆண்டின் முடிவில் அவற்றில் 300 கூட உயிரோடு இருப்பது இல்லை என்று பலர் கூறுகின்றனர். அதனுல், அவற்றுக்குப் பதிலாக ஆண்டுதோறும் குதிரைகளைப் புதியவாக வாங்கக் கட்டாயம் ஏற்படுகிறது. ஆனுல், இந்த நாட்டின் சீதோஷ்ண நிலை இந்த வகையான குதிரையினத்திற்குப் பிடிக்கவில்லை. அதனுலேயே இங்கே குதிரைகளைப் பிறக்கச் செய்வதும் வளர்ப்பதும் அருமை ஆகின்றன. அரிசி தவிர வேறு தானியங்கள் இந்த நாட்டில் விளையாமையால், இந்தக் குதிரைகளுக்குத் தீனியாகச் சோறு தீற்றிய இறைச்சியையும் வேறு வகையாகச் சமைத்த உணவுகளையும் கொடுத்துவருகின்றனர்.

"இம்மே கண்ட வியப்பான வழக்கம் இந்த நாட்டில் வழங்கிவருகிறது: குற்றவாளி, வழக்கு முடிந்ததும் கொலைத் தண்டனையை ஏற்றுக் கொலைக்களத்துக்குப் போகும்போது குறிப்பிட்ட தெய்வத்திற்குத் தன்னைப் பலி இட விரும்பினுல் அதனைத் தெரிவித்து விடுவான். உடனே அவனுடைய உறவினரும் நண்பரும்

ஒருவகை நாற்காலியில் அவனை அமர்த்தி அவன் கையில் நன்ருகக் கூர்தீட்டி உறுதியாக இருக்கும் பன்னிரண்டு கத்திகளைக் கொடுத்துவிடுவார்கள்; நகரத்தைச் சுற்றி இவ்வாறு அவனைத் தூக்கிச் செல்வார்கள்; உரத்த குரலில் 'இந்த வீரப் பெருமகன் கடவுள் மேலுள்ள அன்பின் மேலிட்டால் தானே தன்னைப் பலி கொடுக்கப் போகிருன்' என்று பறையறைவார்கள். தண்டனை நிறைவேற்றும் களத்திற்கு வந்ததும், அவன் இரண்டு கத்திகளை விரைந்து எடுத்து, 'இந்தத் தெய்வத்திற்கு என்னைப் பலி கொடுக்கப் போகிறேன்' என உரத்துக் கூவி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடையிலும் குத்திக்கொள்வான்; இரண்டை வயிற்றிலும் இரண்டை மார்பிலும் குத்திக்கொள்வான்; ஒவ்வொரு முறை குத்திக்கொள்ளும்போதும், முன் சொல்லிய சொற்களைச் சொல்லிக்கொண்டே ஒரு கத்தி தவிர மிகுதியை எல்லாம் இவ்வாறு தன் உடலின் பல உறுப்புக்களிலும் குத்திக்கொள்வான்; பிறகு கடைசிக் கத்தியை நெஞ்சிற் குத்திக்கொண்டு உடனே மாய்ந்துவிடுவான். இந்தக் காட்சி நடந்தேறி முடிந்ததும், அவனுடைய சுற்றத்தார் பெரிய விருப்போடும் களிப்போடும் சென்று அவனுடைய உடலை நெருப்பிற்கு இரையாக்குவர். அவனுடைய மனைவி, தன் கணவன்மேலுள்ள அன்பு காரணமாக அந்தத் தீயில் விழுந்து அவனோடு சாம்பலாவாள். இத்தகைய உறுதிப்பாட்டினைக் காட்டும் பெண்களைச் சமுதாயம் மிகவும் பாராட்டுகிறது. அவ்வாறு செய்ய அஞ்சும் பெண்களையோ மிகவும் பழிக்கின்றது."

—

10. மயிலேயும் குமரியும்

(மார்கோ போலோ இரண்டாம் பகுதி)

[பதின்மூன்ரும் நூற்ருண்டின் தமிழகத்தை மார்கோ போலோ பார்த்தபோது அவர் மனத்தில் தோன்றியவை இவை. முரண்பாடுகளும் தவருன எண்ணங்களும் இருந்தாலும், நம்மைப் பிறர் பார்த்தவகை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள உதவுமல்லவா ?]

" இந்த நாட்டில் விக்கிரகங்களே வணங்கும் குடிகளில் பெரும்பான்மையோர் சிறப்பாக மாட்டினிடம் பயபக்தியோடு நடந்துகொள்கின்றனர். எந்தக் காரணத்திலும் இவர்களே மாட்டிறைச்சியைத் தின்னுமாறு செய்யவே முடியாது. 'ஆனல், 'கஇஉ'[1] என்று ஒரு தனியான இனம் உண்டு. இந்த இனத்தவர்கள் இந்த இறைச்சியைத் தின்ருலும் அந்த விலங்கினேக் கொல்ல நெஞ்சு உரம் இவர்களுக்கும் கிடையாது. ஆனல், இயற்கையாகவோ பிற வகையாகவோ செத்துக் கிடக்கும் அதன் பிணம் கிடைத்தால் 'கஇஉ' மக்கள் தின்பார்கள். எல்லா மக்களும் தங்கள் வீடுகளேச் சாணிகொண்டே மெழுகுகின்ருர்கள் ; தரைமேல் பாய் விரித்து உட்கார்ந்து கொள்கிருர்கள். 'இப்படி ஏன் உட்காருகிறீர்கள் ?' என்று கேட்டால், 'பூமியின்மேல் உட்காருவது மிகப் பெருமை' என்றும், 'மண்ணிலிருந்து தோன்றியுள்ளோம் ; ஆதலின் மண்ணுக்குள்ளேயே திரும்பிப் போவோம்' என்றும், 'பூமிக்குத் தகுந்த சிறப்பினேச் செய்வது எவருக்கும் அருமையாம் ; அதனே இழிவாகக் கருதுவது அடாத செயலாம்' என்றும் பதில் கூறுகின்ருர்கள். இந்தக்

---

1. கௌஹத்தியா என்பது பசுக்கொலேயாகும். 'கன்று தின்னி' என்பது சங்கத் தமிழில் புலேயர்க்குப் பெயராகும்.

'கஇஉ'க்கள் இனத்தவர் கடவுள் வழிகாட்டியாய தாமஸ் முனிவரைக் கொன்றவர்களின் வழி வந்தவர்களாம். ஆதலின், அவர்களில் எவரும் அருள்பெற்ற அந்த முனிவரது திருமேனி தங்கும் கட்டடத்திற்குள் புகவே முடியாது. பத்துப் பேர், உரம் எல்லாம் கொண்டு, அவர்களில் ஒருவனை உள்ளே தள்ளினாலும், இயற்கையையும் கடந்த அந்தத் தெய்விகத் திருமேனியின் ஆற்றல் அவனைவெளியே தள்ளி விடுகிறதாம்.

"அரிசியும் எள்ளும் தவிர வேறொரு தானியமும் இந்த நாட்டில் விளைவதில்லை. உடை ஒன்றும் உடுத்தாது, ஈட்டியும் கேடயமும் தாங்கிக்கொண்டு, இந்த மக்கள் போருக்குச் செல்வார்கள். இவர்கள், போருக்கு முந்தாத, மிகவும் இழிவான சாதியார்; ஆடுமாடுகளையோ வேறு எந்த விலங்குகளையோ உணவுக்காகக் கொல்லவே மாட்டார்கள்; ஆடு அல்லது வேறு விலங்கு அல்லது பறவையின் இறைச்சியை உண்ணவேண்டும் என ஆசைப்பட்டால், இந்த வகையான சட்டத்திற்கோ வழக்கிற்கோ உட்படாத 'சாரசன்' சாதியாரை (துருக்கர்களை) அந்த வேலையைச் செய்ய அமர்த்திக்கொள்வார்கள்.

"இந்த நாட்டு மக்களுள் ஆணும் பெண்ணும் தம் உடல் முழுதினையும் நாள்தோறும் இருமுறை காலையிலும் மாலையிலும் கழுவிக்கொள்வர் (குளிப்பர்). இந்தக் குளியல் நடைபெறுதவரையில் அவர்கள் உண்பதும் இல்லை; பருகுவதும் இல்லை. இந்த முறையைக் கையாளாதவர் மத விரோதிகள் (பாஷண்டிகள்) என்று கருதப்படுவார்கள். உண்ணும்போது வலக்கையைப் பயன்படுத்துவார்களே அன்றி, இடக்கையால் உணவினை எப்போதும் தொடமாட்டார்கள் என்பதனை இங்குக் குறிப்பிட வேண்டும். தூய்மையான நல்ல தொழிலுக்கெல்லாம் அவர்கள் முன்னதனையே பயன்படுத்துவார்கள். உடலைக் கழுவும் இழிந்த வேலைக்கோ, விலங்குவகையான அவர்கள்

தேவைகளுக்கோ மட்டுமே இடக்கை உதவும். ஒரு தனி வகையான செம்பிலிருந்து அவர்கள் குடிப்பார்கள். ஒவ்வொருவரும் தத்தம் செம்பிலிருந்தே குடிப்பர்; மற்றொருவரது குடிசெம்பினைப் பயன்படுத்துவதே இல்லை. அவர்கள் குடிக்கும்போது செம்பினை வாயில் படும்படியாக வைப்பதில்லை; தலைக்கு நேரே மேலே பிடித்துக்கொண்டு எந்த வகையான காரணத்தாலும், செம்பு உதட்டினைத் தொடாதபடி நீர்ப்பொருளை வாய்க்குள் ஊற்றிக்கொள்வர்; அயலாருக்குக் குடிக்கக் கொடுக்கும்போது தம் செம்பினை அவர்கள் கையில் கொடுத்துவிடுவது இல்லை; அயலாருக்கெனத் தனியே ஒரு செம்பு இல்லையானால், கள்ளையோ வேறு நீர்ப்பொருளையோ அயலார் கையில் ஊற்றுவர். கிண்ணத்திலிருந்து குடிப்பதுபோலக் கையை வளைத்து வைத்து அதிலிருந்து அயலாரும் குடிப்பர்.

"இந்த நாட்டில், குற்றங்களுக்கு விதிக்கும் தண்டனைகளைப் பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்கும்படி மிகக் கடுமையான முறையில் அவர்கள் விதிக்கின்றார்கள். கடன்காரர்களைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட வழக்கம் அங்கே உண்டு; கடனைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் எனக் கடன் கொடுத்தவன் கடன்காரனை அடிக்கடி கேட்டு வருகிறான். கடன்காரனோ அப்போதைக்கப்போது கொடுத்துவிடப் போவதாகக் கூறி ஏமாற்றிக் காலத்தைக் கடத்திக்கொண்டேவருகிறான். இந்த நிலையில் கடன் கொடுத்தவன் கடன்காரனைச் சுற்றித் தரையில்ஒரு வட்டம் கீறி, அவனைக் கையும் பிடியுமாகப் பிடித்துக்கொண்டது போல் மேலே செல்லாதபடி அங்கேயே நிறுத்திவிடலாம். கடனைக் கொடுத்தோ, தக்க பிணை(ஜாமீன்) காட்டியோ கடன் கொடுத்தவனது விருப்பத்தினை நிறைவேற்றாமல், கீறிய வட்டத்தினை விட்டுக் கடன்காரன் வெளியேற முடியாது; அங்கிருந்து தப்பி ஓடமுயன்றால் அறத்தின் சட்டத்தினைத் தகர்த்து எறிந்தவனாய்க் கொலைத் தண்டனைக்கு

உள்ளாவான். (மார்கோ போலோ தம் ஊருக்குத் திரும்பி வரும் பயணத்தில் இந்த நாட்டில் தங்கி இருக்கும்போது, குறிப்பிடத்தக்க இத்தகைய நிகழ்ச்சியைக் கண்ணால் காணல் நேர்ந்தது.) அயல் நாட்டு வியாபாரி ஒருவனுக்கு அரசன் ஒரு சிறு தொகை கொடுக்கவேண்டியிருந்தது; கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் எனப் பல முறை இரந்துகேட்டும், கொடுப்பதாய் வீணே உறுதிகூறி, நீண்ட காலம் அரசன் தள்ளிவைத்துக்கொண்டே வந்தான். ஒரு நாள் அரசன் குதிரைமேல் ஏறிப்போகும்போது, அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, அவனையும் அவன் குதிரையையும் சுற்றிக் கடன் கொடுத்த வியாபாரி மிக விரைவாகத் தரையில் ஒரு பெரிய வட்டம் கீறி விட்டான். இவ்வாறு செய்ததனை அரசன் உணர்ந்ததும் மேலே போகாமல் அங்கேயே நின்றுவிட்டான். அந்த வணிகனது விருப்பம் முழுதும் நிறைவேறுவதற்கு முன்பாக அரசன் அங்கிருந்து அசையவும் இல்லை. அயலில் நின்றவர்கள் நடந்ததனைக் கண்டு புகழ்ந்து அறச் சட்டத்திற்கு அரசன் தானுகவே உட்பட்டு நடந்ததால், 'தலை சிறந்த அறவோன் என்ற பட்டத்திற்கு இந்த அரசனே உரியவன்' என முடிவு கூறினர்.

"இந்த மக்கள் கொடி முந்திரிப் பழத்திலிருந்து செய்த சாராயத்தைக் குடிப்பதே இல்லை; அப்படி எவனுகிலும் குடிப்பதாகத் தெரிய வந்துவிட்டால், அவனை எவ்வளவோ இழிவாக எண்ணிவிடுகிருர்கள்; அவனுடைய சாட்சியை அற மன்றத்தில் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்; கடல் மேல் அடிக்கடி போவாரையும் அப்படியே இழிவாகக் கருதுகிருர்கள்; கதி யற்றவர்களே இப்படிச் செய்வார்கள் என்று நினைக்கிருர்கள். அதனுல்தான் அவர்களுடைய சாட்சி ஒப்புக்கொள்ளத்தக்கது அன்ரும். பரத்தைமை ஒழுக்கை (வியபிசாரத்தை)க் குற்றம் என்று இவர்கள் கருதுவதில்லை.

"இந்த நாட்டில் வெப்பம் அளவு கடந்து காயும். அதனால் இந் நாட்டு மக்கள் ஏறக்குறையப் பிறந்த வடிவமாகவே நடையாடுவர். ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தவிர, வேறு எப்போதும் அங்கு மழை இல்லை. [2]இந்த மூன்று மாதங்களில் பெய்யும் மழை காரணமாகக் காற்றுக் குளிர்ந்து வீசுவது இல்லை என்றால், அங்கே உயிர் வாழவே முடியாது.

"சாமுத்திரிகா சாத்திரத்தில் வல்லவர் இந்த நாட்டில் பலர். மக்கள் குணத்தினையும் இயல்பையும், அவர்கள் நல்ல போக்குடையவர்களா தீய போக்குடையவர்களா என்பதனையும் அறிய இந்தச் சாத்திரம் கற்பிக்கின்றதாம். ஆணோ பெண்ணோ எதிரே வந்ததும் இந்தச் சாத்திரம் வல்லவர்கள் இந்தக் குணங்களை அறிகின்றனர். சில பறவைகளோ விலங்குகளோ தென்பட்டதும் 'என்ன நிகழும் ?' என்றும் இவர்கள் அறிவார்கள். உலகத்தில் எல்லாரையும்விட இவர்களே பறவைகள் பறந்து போவதனை உன்னிப்பாக உற்றுநோக்கி ஆராய்பவர்கள்; இதிலிருந்து நல்லதோ கெட்டதோ வரும் என்று முன்னுகக் கூறுவார்கள் ; வாரத்தில் ஒவ்வொரு நாளிலும் ஏதோ ஒவ்வொரு மணி நேரம் கெட்டது என்று கருதுகிறார்கள். சோயியாச்[3] என்று அந்த மணி நேரத்தை இவர்கள் வழங்குகிறார்கள். இப்படியே ஆண்டு முழுதும் ஒவ்வொரு நாளின் நன்மைதீமைகளை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் இவர்கள் நூலில் குறித்து எழுதி இருப்பராம் ; ஒரு மனிதன் நேராய் நிற்கும்பொழுது விழுகிற நீளத்தைக் கண்டு 'இன்ன மணி' என்று அறிகிறார்கள். ஆணோ பெண்ணோ குழந்தை பிறந்ததும், தாயோ தகப்பனோ, அது பிறந்த

---

[2]இது தமிழ் நாட்டைப் பற்றிய உண்மை அன்று. மேற்குக் கரையைப் பற்றி அறிந்ததனைக் கிழக்குக் கரைக்கும் பொருந்தும் என மறதியால் எழுதுகின்றார் போலும்.

[3]த்யாஜ்யம் என்பதின் சிதைந்த வடிவமாகும் இது.

கிழமை, மாதம், மணி, சந்திரன், வயது (திதி) முதலிய குறிப்பு எழுதி வைப்பர் ; சோதிட சாத்திரத்தின்படியே தங்கள் வாழ்வின் எதிர்கால நிகழ்ச்சி எல்லாம் நடைபெறுவதால் இவ்வாறு செய்கின்றனர்.

" இந் நாட்டினர் தம் பையனுக்கு 18 ஆண்டுகள் ஆனதும் அவனைத் தன் விருப்பப்படியே போகவிடுகின்றனர். தன் தகப்பன் குடும்பத்தில் ஒருவனாக இருந்து அதற்கு மேல் மகன் வாழவேண்டுவதில்லை. அவனுக்குக் குடும்பத்தினர் 20, 24, (க்ரோட் என்ற இத்தாலியக் காசு) பொன் பணம் கொடுத்து விடுவார்கள். அதனை வைத்துக்கொண்டு ஏதோ ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டு இலாபம் பெற்றுத் தன் வாழ்க்கையை அவன் நடத்திப் போக முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இந்த இளைஞர்களும் ஓரிடத்தில் ஒரு பொருளை வாங்கியும் மற்றோரிடத்தில் அதனை விற்றும் நாள் முழுவதும் இவ்வாறு எல்லாப் பக்கமும் ஓடியலைவார்களே அல்லாமல், சும்மா இருப்பதில்லை ; முத்துக் குளிக்கிற காலத்தில் கடற்கரைக்கு அடிக்கடி போய் ஐந்தோ ஆறோ, அவற்றிற்கு மேலோ சிறு முத்துக்களைத் தங்களுக்கு இயன்ற அளவு வாங்குவார்கள் ; சூரிய வெப்பத்திற்கு அஞ்சி வெளியே வாராமல் வீட்டிலே இனிதே இருக்கும் வியாபாரிகளிடம் அவற்றினைக் கொண்டுபோய், ' இந்த முத்துக்காக நிறையக் கொடுத்துள்ளோம் ; ஏதோ இதன்மேல் உங்களுக்குத் தக்கதென்று தோன்றும் இலாபம் கொடுங்கள் ' என்று சொல்வார்கள். அவற்றைத் தாங்கள் வாங்கிய விலைக்குமேல் சிறிது இலாபமும் வைத்துக் கொடுத்துவிடுவார்கள் ; இப்படியே வேறு பல பொருள்களிலும் வியாபாரம் செய்து மிகச் சிறந்த திறமையுள்ள வியாபாரிகளாக ஆகிவிடுவார்கள் ; அந்த அந்த நாளைய வியாபாரம் முடிந்ததும் தத்தம் தாய்மாரிடம் உணவுக்கு வேண்டும் பொருள்களைக் கொண்டு செல்வார்கள். அவர்கள் சோற்றைச் சமைத்துத் தருவார்கள்.

ஆனுல், இவர்கள் தங்கள் தகப்பனுர் செலவில் ஒன்றும் உண்பது இல்லை.

"இந்த நாட்டில் மட்டும் அன்று—பொதுவாக இந்தியா முழுவதிலுமே, குயில் நீங்கலாகப் பிற பறவை இனங்களும் விலங்கு இனங்களும் நம்முடைய இத்தாலி நாட்டில் இருப்பதுபோல இல்லாமல் மாருகவே இருக்கின்றன. அங்குக் குயில் ஒன்றுதான், நம் குயிலுக்கு முற்றும் ஒத்து இருக்கிறது. கழுகு போலப் பெரிய வௌவால்கள் அங்கு உண்டு. காக்கை போலக் கரிய கழுகுகள் உண்டு. அவை மிக வேகமாகப் பறக்கும் ; பறவையைப் பிடிப்பதில் அவை குறிதவறுவதே இல்லை.

" இந்த நாட்டுக் கோயில்களில் ஆண் வடிவிலும் பெண் வடிவிலும் பல விக்கிரகங்கள் உண்டு. தாய் தந்தையர் தங்கள் பெண்களை இவற்றிற்கு என விட்டுவிடுவதும் உண்டு. அப்படிச் சுற்றிவிட்டபின் அந்த மடத்தின் அர்ச்சகர் கடவுளை இன்பூட்ட அவர்களைக் கூப்பிடும்போதெல்லாம் அவர்கள் போகவேண்டும். அப்படிப்பட்ட சமயங்களில் பாடிக்கொண்டும் இசைக் கருவிகளை மீட்டிக்கொண்டும் அவர்கள் அங்கே போகின்றனர். திருவிழா அவர்கள் இருப்பால் பொலிவெய்துகிறது. அந்த இளமங்கையர் மிகப் பலர் பெருங் குழுக்களாக அமைகின்றனர் ; வாரத்தில் பலமுறை உணவுப் பலி கொண்டு செல்கின்றனர். 'விக்கிரகம் அந்த உணவை உட்கொள்கிறது' என்று அவர்கள் கூறுகிருர்கள். அவற்றிற்கெதிரே இதற்காக ஒரு மேசை வைத்திருக்கும். ஒரு மணிநேரம் இந்த மேசைமேல் உணவினை விட்டுவைப்பார்கள். அப்போது இந்தப் பெண்கள் இடையே நிறுத்தாமல் தொடர்ந்து பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வேண்டுமென்ற பல சைகைகளைக் காட்டிக்கொண்டும் இருப்பார்.[4] உயர்ந்த நிலையில் உள்ள பெரிய மனிதர்

---

[4]மார்கோ போலோவிற்குப் பரதநாட்டியம் கண்டபோது இவ்வாறு தோன்றியது !

இனிதான உணவினை உண்டுமுடிக்க எவ்வளவு நேரம் பிடிக்குமோ அவ்வளவு நேரம் வரை இந்த வகையாக நட-னம் நடந்துகொண்டிருக்கும். பிறகு, நடத்திய கேளிக்கையில் விக்கிரகத்தின் ஆவி ஓர் ஆறுதல் அடைந்ததாக இவர்கள் கூறுவார்கள். அதனைச் சுற்றி வரிசையாக நின்று அவர்களும் தங்கள் முறைக்கு உண்பார்கள்; அதன் பிறகு தத்தம் வீட்டிற்குப் போய்விடுவார்கள்.

"இப்படி இந்த இள மங்கையரைக் கூட்டுவதற்கும் மேலே கூறிய சடங்குகளைச் செய்வதற்கும் கூறும் காரணம் இதுவாம் :—அர்ச்சகர் சொல்கிறாராம் : "ஆண் தெய்வம் பெண் தெய்வத்தோடு மாறுபட்டுக் கோபித்துக்கொண்டு அதனைச் சேரவோ, அதனோடு பேசவோ மறுக்கின்றதாம்; இவற்றினிடையே ஒற்றுமையையும் அமைதியையும் நிலை நாட்ட ஏதேனும் ஒரு வழி செய்யாமற் போனால், தேவதைகளின் அருளும் வாழ்த்தும் இல்லாமற் போமன்றோ? ஆதலினால், அந்த மடத்தின் எல்லா வேலைகளும் பாழாகும்"—இதற்காகத்தான் வழிபடுவோரை அமணமாகத் தங்கள் இடுப்பில்மட்டும் ஒரு துணியோடும் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்; அந்த நிலையில் தேவனுக்கும் அம்மனுக்கும் கீதங்களைப் பாடவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். தேவர் அம்மனோடு அடிக்கடி இன்பமாகக் காலம் கழிக்கிறார் என இந்த மக்கள் நம்புகிறார்கள்.[5]

"இந்த நாட்டினர் இலேசான பிரம்பு வேலை செய்த ஒருவகைப் படுக்கை அல்லது கட்டிலைப் பயன்படுத்துகின்றனர். அஃது ஒரு சூத்திரமாகச் செய்யப்பட்டது. அதில் படுத்தபின் தூக்கம் வரும்போது ஒரு கயிற்றினை இழுத்ததும் திரையானது சுற்றி மூடிக்கொள்ளும். ஈ கொசுகு முதலிய சிறிய விஷ ஜந்துக்கள் தொந்தரவு செய்யாமல்

[5]கோயில் வழிபாடுகளைப் பற்றித் தவறான எண்ணங்கள் அந்நாளிலேயே பரவின போலும்!

தடுக்கவும் மிகக் கடுமையாகக் கடிக்கும் ஜல மண்டலி முதலியன உள் நுழையாமல் இருக்கவும் இப்படிச்செய்கின்ருர்கள்.[6] ஆனால், அதே சமயத்தில் மிகுந்த வெப்பத்தைத் தணிப்பதற்கு இன்றியமையாது வேண்டும் காற்றும், தடைப்படுவதில்லை. இப்படிப்பட்ட ஏற்பாடுகளை எல்லாம் உயர்ந்த நிலையில் உள்ளோரும் செல்வருமே அனுபவிக்கின்ருர்கள். கீழான வகுப்பினரோ தெருவிலே கிடக்கின்ருர்கள்.

"மாபர் என்ற இந்த நாட்டில், தம் உயிரையே பலி கொடுத்த பெருஞ்சிறப்புடைய தாமஸ் முனிவரது திரு மேனி இங்குத்தான் இருக்கின்றது.[7] இங்குத்தான் அவர் கொல்லப்பெற்ருர். இந்த இடம் ஒரு சிறு நகரில் கிடக்கிறது. தங்கள் வியாபார நோக்கத்திற்கு இது தகுதியற்றது. ஆதலின் இங்குப் பல வணிகர்கள் புழங்குவதில்லை. ஆனால், பக்தி காரணமாக எத்தனையோ கிறித்தவர்களும் சாரசன் சாதியாரும் இங்கு வருகின்றனர். பின்னவர்களும் அவரைப் பெரிய நபியாகக் கருதுகின்றனர். 'அவரியன்' என்று அவர்கள் அவரைப் பாராட்டுகின்றனர். அதற்குப் பொருள், 'கடவுள் மனிதன்' என்பதாம். இங்கு யாத்திரையாக வரும் கிறித்தவர்கள் அவர் கொல்லப்பட்ட இடத்திலிருந்து சிவப்பு நிறமாக உள்ள மண்ணைத் திரட்டிப் பயபக்தியோடும் எடுத்துக்கொண்டு போகின்ருர்கள்; பிறகு அதனை அற்புதங்கள் செய்யப் பயன்படுத்துகின்ருர்கள்; அதனைத் தண்ணீரில் கலந்து நோயாளிகளுக்குக் கொடுக்கின்ருர்கள். அதனால் பல நோய்கள் தீர்கின்றனவாம்.

"கி.பி. 1288–ஆம் ஆண்டில் இந்த நாட்டு அரசகுமாரரில் அதிகாரம் பெற்ற ஒருவன் இருந்தான். அறுவடைக்

---

[6] ஊஞ்சலைக் கூறுகின்றனர் போலும்.

[7] தாமஸ் முனிவர் தமிழ்நாட்டில் இறந்தார் எனச் சுட்டிக் காட்டுவதனை இங்குத்தான் முதல் முதல் காண்கிறோம். இந்த இடம் சென்னையில் 'சான்தோம்-சென்தாமஸ்' எனப்படும்.

காலத்தில் மிகப் பெரிய அளவு நெல் போர்போராகக் குவிந்தது. இவற்றினை எல்லாம் கொட்டி வைக்கப் போதிய களஞ்சியம் அவனிடம் இல்லை. அதற்காகத் தாமஸ் முனிவரது கோயிலைப் பயன்படுத்துவதே தக்கது என்று அவன் கருதினான். இதுவோ அந்தக் கோயிலின் தர்மகர்த்தாக்கள் விருப்பத்திற்கு முற்றும் மாறாக இருந்தது. ஆதலின், அந்தச் சிறந்த முனிவரின் திருமேனியைப் பார்க்க வரும் பிரயாணிகள் தங்குவதற்கு என விட்டிருக்கும் கட்டடத்தினைக் கைப்பற்றக்கூடாது என அவர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அவனோ முரட்டுத்தனமாய்த் தான் பிடித்ததை விடாமல் அடம் செய்தான். மறுநாள் இரவு அந்தப் புண்ணிய முனிவர் அவன் எதிரே கையிலே ஒரு சிறிய வேலை ஏந்திக்கொண்டு வந்து தோன்றிக் காட்சி தந்தாராம். அந்த அரசனது கழுத்தை நோக்கி அதனைக் காட்டினாராம்; 'இப்போது நீ கைப்பற்றியுள்ள எனது வீட்டினை உடனே காலி செய்யாமற் போனால் உன்னைச் சித்திரவதை செய்வேன்' என்றாராம். அவன் திடுக்கிட்டு நடுநடுங்கி விழித்துக்கொண்டு, முனிவரைக் கண்டதனைப் பொதுவாக எல்லோர்க்கும் எடுத்துக் கூறி, அவர் கேட்டுக் கொண்டபடி செய்துவிடும்படி உடனே அவன் கட்டளை இட்டானாம்.

"பேரருள் பெற்ற முனிவர் முன்னின்றருள்வதால் நாள்தோறும் பலவகையான அற்புதங்கள் இங்கே நிகழ்கின்றன. இந்தக் கோயிலைக் கண்காணித்து வரும் கிறிஸ்தவர்களிடம், பாக்கு விளையும் மரத் தோப்புக்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொரு மரத்திற்கு ஒரு குரோட் (இத்தாலியக் காசு) ஆக அரச சகோதரர்களிடம் வரி செலுத்தித் தங்கள் வாழ்விற்கு வேண்டுவனவற்றை எல்லாம் பெறுகின்றார்கள்.

"தலைசிறந்த இந்த அறவண அடிகளின் முடிவு இவ்வாறு நிகழ்ந்ததாம்; இவர் ஓர் ஆச்சிரமத்தில் ஓய்வாகப்

போனாராம்; அங்கே பிரார்த்தனை செய்துகொண்டு இருந்தாராம். 'அந்த நாட்டில் எங்கும் நிறைந்திருக்கும் மயில்களில் பல அங்கே சூழ்ந்து நின்றனவாம்[8]. 'கவவி' என்ற சாதியைச் சேர்ந்த விக்ரகபக்தன் ஒருவன் அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தானாம். அறவண அடிகளை அவன் பார்க்கவில்லை ; ஒரு மயில்மேல் அம்பு ஒன்று எய்தானாம். அது முனிவரின் விலாப்புறத்தே பாய்ந்ததாம். தாம் படுகாயம் பட்டிருந்ததனை உணர்ந்த முனிவருக்கு, கடவுள் தமக்குக் காட்டிய அருளுக்கெல்லாம் நன்றி செலுத்த மட்டுமே பொழுது இருந்ததாம். ஆண்டவன் கையில் தம் உயிரை அவர் ஒப்படைத்துவிட்டாராம்.

"இந்த நாட்டு மக்கள் கறுப்பாய் இருந்தாலும் கருமையே அழகின் முழுநிலை எனப் பாராட்டிச் செயற்கை வழிகளால் பின்னரும் கறுப்பாக்கிக் கொள்வது போலப் பிறப்பதில்லை. இதற்காக இவர்கள் ஒவ்வொரு நாளும் மூன்று வேளை தங்கள் குழந்தைகளின்மேல் எண்ணெயைத் தேய்க்கின்றார்கள் ; தங்கள் கடவுள் விக்கிரகத்தைக் கறுப்பாகத் தோன்றும்படி செய்கிறார்கள்;பிசாசையோ வெள்ளை பூசிக் காட்டுகிறார்கள் ; பேய்கள் எல்லாம் அந்த வெள்ளை நிறமே என உறுதி கூறுகிறார்கள்.

"இவர்களில் எருதினை வழிபடுவோர், 'எவனானாலும் சரி காட்டுப் பசுவின் மயிரைத் தன்னோடு எடுத்துக்கொண்டு போனால், எல்லா வகையான இடையூறுகளிலிருந்தும் அது காரணமாகப் பிழைத்துப்போவான்' என்று காட்டுப் பசுவின் மயிரின் இயல்பிலும் ஆற்றலிலும் நம்பி, அதனைப் போருக்குப் போகும்போது தம்மோடு எடுத்துச் சென்று, தங்கள் குதிரையின் பிடரிகளில் கட்டி வைப்பார்களாம். இதனால் காட்டுப் பசுவின் மயிர் இந்த நாட்டில் மிக்க விலை விற்கின்றது.

---

[8]மயிலாப்பூர் என்ற பெயரைக் கண்டு இவ்வாறு கற்பித்தனர் போலும்.

(இலங்கையில் சாக்கிய முனி புத்தரைப் பற்றிக் கூறியபின் திருநெல்வேலியில் உள்ள குலசேகரன் பட்டினம் என்ற காயற் பட்டினத்தைப் பற்றிக் கூறுகின்றார்.)

"காயல் என்பது மிகப் பெரிய நகரம். மாபர் நாட்டு அரசர்களாம் நான்கு சகோதரர்களில் ஒருவரான ஆஸ்தியார்[9] இதனை ஆள்கிறார். அவருக்குப் பொன்னும் மணியும் நிறைய உண்டு; தம்முடைய நாட்டினை நிறைவான அமைதி நிலையில் வைத்துக் காத்துவருகிறார். இதனாலேயே அயல் நாட்டு வாணிகர்கள் வந்தால் அவர்கள் மனத்திற்கு இது மிகப் பிடித்துவிடுகிறது. அவர்களை நன்றாக வரவேற்று இந்த அரசர் பாராட்டுகிறார். ஆகையால், மேற்கிலிருந்து ஆர்மஸ் (ormus), கிஸி (Kesi) ஏதன் (Aden)—அரேபியாவில் பல பாகங்கள்—இங்கிருந்து எல்லாம் பல வியாபாரப் பொருள்களையும் குதிரைகளையும் நிறைய ஏற்றி வரும் கப்பல்கள் யாவும் இதனையே துறைமுகமாகக் கொள்கின்றன. இதுவும் அல்லாமல், வியாபாரத்திற்கும் இஃது உகந்ததாக இருக்கிறது. இந்த அரசர் மிகச் சிறந்த நிலையில் 300-க்கு மேற்பட்ட பெண்களை வைத்துக் காப்பாற்றி வருகிறார்.

"இந்த நகரத்தில் இருக்கும் எல்லா மக்களும்—பொதுவாக இந்தியாவில் உள்ள எல்லோருமே—தங்கள் வாயில் எப்போதும் தாம்பூல் (தாம்பூலம் - வெற்றிலை) என்ற இலையை வைத்துக்கொண்டிருக்கும் வழக்கம்உடையவர்கள். பழக்கத்தின் காரணமாகவும் அது தரும் மகிழ்ச்சி காரணமாகவும் இவர்கள் இவ்வாறு செய்கின்றனர்; அதனை மென்றதும் வரும் எச்சிலைத் துப்புவார்கள். ஒருவன் மற்றொருவனை மிகவும் அவமானமாகவும் மிகவும் வெளிப்படையாகவும் இகழவேண்டும் என நினைத்தால் அவன் முகத்தில்

---

[9] கி. பி. 1263—1308 ஆண்ட மாற வர்மன் குலசேகரர் போலும்.

இவ்வாறு மென்ற இலையின் சாற்றினைத் துப்புவான். இவ்வாறு இகழப்பெற்றவன் அரசன் முன்னிலைக்கு விரைந்துசென்று, தனக்கு அவமானம் ஏற்பட்ட தறுவாயை எடுத்துக்கூறி, அந்த முரண்பாட்டினைப் போர் வழியே தீர்த்துக்கொள்ளத் தான் உடன்படுவதனையும் தெரிவிப்பான். அதன்மேல் அரசன் அவனுக்குப் படைக் கலங்களை - ஒரு வாளும் ஒரு கேடகமும் - கொடுத் துதவுவான். இந்தப் போர் அவர்களில் ஒருவன் சாகும் வரை நடைபெறும். இதனைக் காண எல்லா மக்களும் கூடுவர். வாளின் நுனியால் காயப்படுத்தக் கூடாது என்ற தடை உண்டு. ''

* * *

'' குமரி என்பது ஒரு நாடு. ஜாவாவில் தோன்றாத வடக்கு நட்சத்திரங்களை இந்த இடத்திலிருந்து 30மைலுக் குள் பார்க்கலாம். தொடுவானத்திலிருந்து ஒருமுழ உயரத் தில் இவை தோன்றும்—இந்த நாடு முழுதும் சிறப்பாகக் காடாய்க் கிடப்பதால் அவ்வளவாகப் பயிரிடப்பெறவில்லை. இந்தக் காடோ விலங்குகளுக்குக் குடியிருப்பு—சிறப்பாக வாலற்ற குரங்குகளுக்கு இருப்பிடம்—எனலாம். இவை வடிவில் மனிதனைப்போலவே தோன்றும்படி அமைந் துள்ளன. நீண்ட வாலுள்ள குரங்குகளும் உண்டு. இவை அளவில் முன்னவற்றிலும் மிக வேறுபட்டவை. புலி சிறுத்தை முதலியனவும் இந்தக் காட்டில் நிறைய உண்டு. ''

---

11. நற்றிணைச் சிறப்பு

தமிழ் ஒரு பெருங்கடல். தமிழரது வரலாறும் ஒரு பெருங்கடல். அலைகள் மேலே ஓங்கியும் கீழே தாழ்ந்தும் மாறிமாறி வந்துகொண்டே இருக்கின்றன. பேரூக்கம் ஒருகாலம்; பெருஞ்சோர்வு மற்றொரு காலம். தமிழ்ப் பாட்டுக்களைத் திரட்டுவது, அவற்றின் சுவையில் ஈடுபட்டு ஆராய்வது—இப்படி ஒருகாலம் வரும். தமிழரைவிடச் சுவையுணர்ந்து, அந் நூல்களைச் செல்லும் கரப்பானும் உண்ண விருந்தளித்த காலம் ஒருமுறை வரும். ஒரு பஞ்சம் வந்தபோது புலவர்கள் தமிழ் நாட்டை விட்டு வெளியேறி வாழ வந்த கொடுமையையும், அதன்பின்னர் அகத்திணை மரபை அறிய முடியாமற் போகவே ஆண்டவனே வந்து அறிவுறுத்தியதனையும் இறையனார் அகப்பொருள் உரை விரித்துக் கூறுகின்றதன்றோ? தமிழ் நூலுலகிலும் இவ்வாறு பகலும் இரவும் மாறிமாறி வருகின்றன. சங்க காலத்திலேயே பாக்களைத் தொகுத்த காலமும் உண்டு; புலவர்கள் பெயரையும் மறந்துவிட்ட காலமும் உண்டு. விடுபாட்டுக்களாக உள்ளவையே நமக்கு அகப்படுவன. பொருட்டொடர்ச் செய்யுள்களாகச் சிலப்பதிகாரத்துக்கு முன் இருந்தவை காலக் கடலில் அமிழ்ந்துவிட்டன. தமிழர் வரலாற்றில் கடல்கோள்கள் பல காண்கிறோம். சம்பந்தர் பாட்டொன்றுதான் நெருப்பில் எரியாது, நீரோடு ஓடாது, பிழைத்தது என எண்ணவேண்டா; நமக்குக் கிடைத்துள்ள தமிழ்ப் பாடல்கள் எல்லாம் இவ்வாறு நெருப்பிற்கும் நீருக்கும் அழியாது நிலை நின்ற கன்னித் தமிழ்ப் பாடல்களே யாகும்.

தமிழ்க் கடலுள் ஊக்கம் என்னும் அலையோங்கிய காலத்தே சிலபாடல்கள் நற்றிணையாகத் தொகுக்கப்பெற்றன. பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதியே இப்பாடல்களை நமக்குத் தந்தவன். அதற்கு முன்னிருந்த கரிநாள்களை

இந்தத் தொகை நூலே சிறிது விளக்குகின்றது. வண்ணப் புறக் கந்தரத்தனார் (71-ம் பா), மலையனார் (93-ம் பா), தனி மகனார் (153-ம் பா), விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் (242-ம் பா), தும்பிசேர் கீரனார் (277-ம் பா), தேய்புரிப்பழங் கயிற்றினார் (284-ம் பா) என்ற நற்றிணைப் புலவர்கள், நற் றிணையில் தாம் பாடிய பாடல்களில் வரும் அருந்தொடர்க ளால் பெயர் பெற்றவர்கள். இவர்களில், தனிமகனார், தேய் புரிப்பழங்கயிற்றினார் என்ற இருவரது இயற்பெயரை அந்த நாளைய தமிழுலகமே மறந்துவிட்டது. இத்தகைய நன்றி கெட்ட காலம் இடைஇடையே தோன்றுவது தமிழின் தலையெழுத்து. அத்தகைய காலங்களை அடுத்தடுத்து நன்றி யுள்ள மக்களும் தோன்றிவந்துள்ளார்கள் ; நற்றிணை தொகுத்த காலத்து நன்றி மறவா மக்கள், அப்பாடல் களில் தம்மையும் மறந்து சுவைத்த நிலைமையால் புலவர்கள் இட்ட இலக்கியப் பெயரைக் காத்து இன்றும் நாம் உணர உணர்த்திச்சென்றார்கள்.

போர் நடந்த ஒரு நாட்டில் பல ஊர்கள் பாழாய்க் குடியிருப்பாரற்றுக் கிடக்கின்றன. அவற்றைக் காக்க ஒவ்வொருவர் படைமக்கள் இருப்பர். அந்தக் கொடு நிலைமையை மனத்தில் எண்ணிப்பார்க்கும்போதுதான் தனிமகனார் பாட்டின் சிறப்பும், அவர்க்குத் தனிமகனார் எனப் பெயரிட்ட தமிழ்ப் பெருமக்களின் பாட்டுணர்வும் நமக்கு நன்கு விளங்கும். தலைவன் பிரிந்தான். அவனையே எண்ணிக் கிடக்கின்றாள் தலைவி ; எண்ணம் அவன்பாலதாகலின் தன் நெஞ்சம் தலைவனிடமே போய்விட்டது எனப் புலம்புகிறாள். பலவகை வளங்களும் சிறந்த பட்டினம் போன்றது தலைவியின் அழகு என்று சொல்வது பழந்தமிழ் வழக்கு. அத்தகைய பேரெழில் எல்லாம் வாடிப் பசலை பாய்ந்து அழிந்துகிடக்கும் பாழ்ம்பட்டினம் போன்றிருக் கின்றது தன் உடல் எனப் புலம்புகிறாள் தலைவி. உடம்பு-தான் எஞ்சிநிற்கிறது. அந்த நிலையில் பாழ்பட்ட ஊரிலே

தனியே ஊர் காத்திருக்கும் படைமகன் உண்பதும் பேயுண்பதுபோலத்தானே தோன்றும்! தலைவன் இருந்தாலன்றோ விருந்து! அவ்வாறு விருந்து புறந்தருதலை இழந்த தலைவி, ' தனியுண்டல் மிக இரங்கத்தக்கது ' எனப் புலம்புகிறாள். அவளுடைய காட்டம் அறமேயன்றி இன்பம் அன்று. மழை, எத்தனை நாள் மின்னிப் பெய்யவேண்டுமோ, அத்தனை நாளும் பெய்த பின்னர் அதற்குமேல் மழை பெய்தல் இல்லையாகவே, தன்னிருப்பிடம் செல்கிறது. அதுபோலத் தலைவியின் மனம் எத்தனை நாள் அவளுக்கு ஆறுதல் எண்ணங்களைத் தூண்ட முடியுமோ, அத்தனை நாளும் அவளுடன் இருந்து, பின் ஆற்றமுடியாத நிலையிலே தலைவனே புகல் என அவனிடம் செல்கின்றது. அவ்வாறு தலைவி கூறும் கூற்று ஆற்ருமையை மிக அழகாகப் புலப்படுத்துவதாகும். செம்பைக் கடையும்போது பொறிகள் பளபள எனப் பறப்பதுபோல, வானம் மின்னும் என்பது உள்ளதை உள்ளபடி உள்ளமுவக்கக் கூறும் உயர்வுடையதாகும்.

" குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி
மண்திணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னிஎவ் வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கில் சென்றற் றாங்கு
நெஞ்சம் அவர்வயின் சென்றென ஈண்(டு)ஒழிந்து
உண்டல் அளித்தென் உடம்பே ; விறல்போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே. " (நற். 153)

அந்நாளைய தமிழர், பொருளில் ஈடுபட்டுச் சுவைமிகுந்த பகுதி கொண்டு பெயரிட்ட மற்ருெரு பாடலைமட்டும் கூறி மேற்செல்வாம் :

" புறந்தாழ்பு இருண்ட கூந்தற் போதின்
நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும் ;
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ; ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே." (நற். 283)

உலகில் பெருமக்களிடையே எழும் போராட்டத்தைக் குறிக்கின்றது இப்பாடல். அறிவு ஒரு புறம் இழுக்கின்றது. உணர்ச்சி ததும்பும் நெஞ்சம் மற்ருெரு புறம் இழுக்கின்றது. தலைகொழுத்து நெஞ்சுலர்ந்து நிற்கின்ற உலக மன்ருே இன்று போரிடை மடிகின்றது! தலை சிறுத்து நெஞ்சு பெருத்த உலகம் பிறர்க்கடிமையாகிச் சாகும். பெருமக்களிடையோ பேரறிவும் பேருணர்ச்சியும் ஒருங்கே இயைந்து நிற்கக் காண்போம். தலைமகன் என்ருல் அவ்வகையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் அல்லனே ? இவ்விரண்டினிடையே செயற்படும் ஊக்க நிலையும் விளங்க வேண்டும். அறிவும் உணர்வும் செயலும் அழகாக அமைந்த நிலையே முத்தமிழ் நிலை என உணர்தல்வேண்டும். அத்தகைய முத்தமிழ் நிலையில் உடம்பு உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இயையச் செயல் செய்துவரும் ஓர் அருமையை இந்தப் பாடல் விளக்குகிறது. தலைவன், தலைவியின் கூந்தலை அணையாகக் கொள்ள, அவள் அன்பெலாம் மலரத் தன்னைக் கண்ட பார்வையைத் தலைவன் மறக்கின்ருன் இல்லை. பிரிந்து வந்து பொருள் ஈட்டும் இந்த நிலையில் அப்பார்வை வந்து இவனை மருட்டுகின்றது. தானும் அவளும் ஒருவரே

எனக் காட்டிய அந்தப் பார்வையை எண்ணுந்தோறும் தனியவள் வாட்டமும் மனக்கண்ணெதிரே தோன்றுகிறது. அவ்வாட்டந் தவிர அவளுடைய கூட்டந்தான் உறுதிப் பொருள் என்கிறது நெஞ்சம். செய்வினை முடிப்பதற்கு முன் போதல் அறியாமையாகும்; அங்குள்ளாரும் எள்ளத் தக்க இளிவரவு நிலையேயாகும். ஆதலின், சிறிது தாழ்த்துச் செல்லுதலே தக்கது என்று இவ்வாறு கூறுகிறது அறிவு. இவ்விரண்டில் எதனைத் துணிவது? இரண்டும் பொருத்த முடையன வல்லவோ? இவ்விரண்டற்கும் இடைப்பட்ட செயனிலை படாதபாடு படுகின்றது. 'இரண்டு நுனியையும் இரண்டு யானைகள் பிடித்திழுக்கின்றன; கயிறோ தேய்ந்த பழங்கயிறு. இவற்றிற்கிடையே அந்தக் கயிறு அற வேண்டுவதுதான். இந்த நெஞ்சிற்கும் அறிவிற்கும் இடையில் அகப்பட்ட செயற்படும் உடம்பின் நிலையும் அந்தக் கயிற்றின் நிலையே'—இங்ஙனம் வாய்விட்டுப் புலம்புகின்றான் தலைவன். இவ்வாறு முத்தமிழ் நிலையை விளக்கித் தலைவன் பெருமையையும் புலப்படுத்தி, அதற்கேற்ற உவமையையுந் தேடிக்கொடுத்து, உலகுள்ளளவும் மறக்கத் தகாத இப்பாடலைப் பாடியவரைத் தேய்புரிப் பழங்கயிற்றினார் என அழைத்த நற்றிணைத் தமிழுலகம், தன் நன்றியையும் தன் தமிழ்ச் சுவையையும் நிலை நாட்டியது எனலாம். இவ்வாறே பாட்டாற் பெயர்பெற்ற புலவரின் பாடல்களை உணர்ந்து துய்ப்பது தமிழர் கடனாகும்.

நெடுந்தொகை எனும் அகநானூற்றுப் பாடல்கள் போல மிகப் பெரியன அல்ல இதன் பாடல்கள்; பொருள் முடிபு காண வருந்த வேண்டுவதில்லை. குறுந்தொகைப் பாடல்கள் போல மிகச் சிறியன அல்ல இவை; பொருள் ஆழங் காணாது அலையவேண்டுவதில்லை. இடை நிகரன வான பாடல்களே இந் நற்றிணையில் உள்ளன; இரண்டன் அழகும் இதனிடை உண்டு. அகத்திணைப் பாடல்களுக்குத் 'திணை' எனப் பெயர் வழங்கும் மரபு உண்டு. திணை எழுபது

திணைமாலை நூற்றைம்பது என்ற நூல்களின் பெயர்களைக் காண்க. அத்தகைய 'திணை' என்ற பெயரோடு 'நல்' என்ற அடையும் சேர வழங்குகிறது இந்நூல். 'நல்ல குறுந்தொகை' என்று பிற்காலத்தார் படினர்கள். ஆனால், தொகுத்த காலத்தே 'நல்' என்ற அடை இந்நூலுக்குத் தான் இடப்பட்டது என்பதை நாம் மறத்தலாகாது. ஆனாலும், இத்தொகை நூல்களில் வரும் பாடல்கள் எல்லாம் ஒரு தகையனவேயாம்; இவற்றில் ஏற்றத் தாழ்வு கூறுவதற்கு இல்லை.

இவற்றை ஆசிரியர் முறையாகத் தொகுத்துச் 'சைவ சித்தாந்த சமாசம்' நமக்குப் பெரியதோர் உதவி புரிந்திருக்கிறது. இப்போது தமிழுக்கு வந்துள்ள நல்ல காலத்தையே ஈதும் குறிக்கிறது. நற்றிணை நூல் பலர் கையிலும் பரவிக் கூத்தாடுமாறு செய்து, அதன் பொருளையும் விளங்க எழுதி உதவிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரை நாம் மறக்கப்போமா? அவரோடு பழகிய மறைமலையடிகள், திரு. வி. க. முதலியவர்கள் அவருடைய சிறந்த தமிழன்பையும் உயர்ந்த ஆராய்ச்சியையும் புகழக்கேட்டுள்ளேன். இந்நூல் அச்சாகி வெளிவருவதைக் காணுமலே அப்பெரியார் போனது மிகவும் மனத்தை வருத்துகின்றது. அவர் செய்த உரையினும் சிறந்த உரை சில பாடல்களுக்குச் சொல்லுதல் கூடும். ஆனால், நற்றிணை என்ற தமிழ்ச் சுவைப்பேழையை முதல் முதல் தம் உரையாம் திறவுகோல் கொண்டு திறந்தவர் அவரே என்பதனை நாம் மறத்தல் ஆகாது. முகம்புகு கிளவியின் பெருமையில் ஈடுபட்டும், உள்ளுறை இறைச்சியின் வேறுபாட்டைப் புலப்படுத்தியும், வரலாற்று ஆராய்ச்சியோடு இயைந்தும் எழுதிப் போகும் அவர் உரை நுட்பம் பெரிதும் பாராட்டத் தக்கதேயாம். முன் எல்லாம் தமிழ்ப் பெரியார் ஒவ்வொரு நூலையே வாணுள்வரை ஆராய்ந்து வருவார்கள்; பிற நூல்களைத் திறம்பெறக் கற்பதெல்லாம் தம் நூலை ஆராய்வதற்கென்றே முடியும். அத்தகைய

ஆராய்ச்சித் திறமெல்லாம் நற்றிணையுரைக்குப் பயன்பட்டிருப்பது நன்கு தெளிவாகிறது. இந் நாளைய தமிழ்ப் புலவர்கள் அந்த வழியே செல்வார்களானால் மிகமிகப் பயன் உடையதாகும் என்பதில் என்ன ஐயம் ?

அகத்திணை என்பது அன்பு வரலாறு. கடவுளும் காதலும் அன்றித் தமிழில் வேறென்ன இருக்கிறது எனச் சிலர் எள்ளி நகையாடுகிறார்கள். அவர்கள் உண்மை காணாதவர்களே. கடவுளும் தமிழ்க் காதலிலே ஒடுங்கி நிற்பதை அறிந்தால் பெருஞ் சிரிப்புச் சிரிப்பர் போலும் ! அன்பே சிவம் என்பதற்குக் காதலே கடவுள் என்பதன்றோ பொருள் ? கடவுளைச் சுட்டினொடு காட்ட வந்த சம்பந்தர் ஆண்நிலை மாறிப் பெண்ணாய்க் கடவுளாம் காதலன்மேல் வெறிகொண்டு 'இறை வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்' என்றன்றோ பாடுகிறார்! ஆழ்வார்களும் மற்றைய முதலிகளும் அத்தகைய கடவுட் காதல் கொண்டவர்களே யாவர். திருவள்ளுவர் கூறிய காமத்துப்பால் ஒப்புமை வழியாக வீட்டுப்பால் கூறியதே என்று கொள்ளுவோரும் உண்டு. அன்பை வளர்த்து உலகோடு ஒட்ட ஒழுகி ஒன்றாய் விடுவதே நீக்கமற நிறைகின்ற பெருவாழ்வாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்வது இந்த முறையில்தான்.

இவ்வாறு, அன்பாக உலகத்தோடொட்ட ஒழுகும் போது, பிறர் செய்யும் பெருந்தீங்கையும் மறந்து வாழ்கிற நிலை வளருதல் வேண்டும். பிறன் நஞ்சு வைத்தாலும் நாம் நஞ்சென உணர்ந்ததை அவன் அறியின், அவன் மனம் நடுங்குமன்றோ என அவனுக்கிரங்கி அந்நஞ்சையும் உண்பதே நாகரிகமாம். திருவள்ளுவர்கண்ட புது நாகரிகமாகும் ஈது.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (திருக். 580)

இக் கருத்தை அகப்பொருட்சுவை ததும்ப நற்றிணைப் புலவர் ஒருவர் பொன்னேபோற் போற்றிப் பாராட்டுகின்ருர். நாகரிக உலகத்தில் குழவி யுலகமே தோன்றுவதும் காண்க.

" புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை
முலைவா யுறுக்கும் கைபோற் காந்தள்
குலைவாய் தோயுங் கொழுமடல் வாழை
அம்மடற் பட்ட அருவித் தீநீர்
செம்முக மந்தி ஆரும் நாட
முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்
அஞ்சில் ஓதிஎன் தோழி தோள்துயில்
நெஞ்சின் இன்புருய் ஆயினும் அதுநீ
என்கண் ணேடி அளிமதி
நின்கண் அல்லது பிறிதுயாதும் இலளே " (நற். 355)

என வருதல் காண்க.

மக்கள் மட்டும் அல்லர் ; விலங்குகளும் பறவைகளும் அன்பாய் வாழ்கின்ற நிலையையும் மக்களது அன்பு வாழ்க்கைக் கெதிரே புனைந்துரைத்துப் போவதை இந் நூலுள் எங்கும் பார்க்கின்ருேம்.

" வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி ஓங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை ஈன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம் " (நற். 384)

என்று முட்டையிட்ட பெண் புருவிற்காகப் பாழடைந்த பாலையாய ஊர்களிலுள்ள நெல்லைக் கொண்டுவரும் ஆண் புருவின் அன்பைப் புனைந்துரைத்தல் வாயிலாகப் பாலையின் சிறப்பை உணர்த்திய நயமும், தலைவன் சென்று

இல்லறம் நிகழ்த்தப்போகிற பெருமையை இதன் வழியாக இறைச்சிப் பொருளாக உணர்த்தும் குறிப்பும் பாராட்டத் தக்கன. பெண் புலியின் பசிக்கு வருந்திய ஆண் புலி, யானையைக் கொல்வதாக மற்றொருவர் கனாக் காண்கிறார் :

" கல்லயற் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை அன்ன குருளை
வயப்புனிற் றிரும்பிணப் பசித்தெனை வயப்புலி
புகர்முகஞ் சிதையத் தாக்கிக் களிறட்(டு)
உருமிசை உரறும் உட்குவரு நடுநாள் " (நற். 383)

எனக் கொடிய விலங்குகளிடத்தும் அன்பு திருக்கூத்தாடு வதைக் காண்க. இத்தகைய பாடல்கள் பலப்பல.

ஓரறிவு உயிர்களையும் உடன் பிறந்தாராகக்கொண்டு வாழும் உயர் நிலையையும் இங்குக் காண்கிறோம். சகுந்தலை, கண்ணுவரை விட்டுப் பிரிகையில், அங்கே, தான் நீரூற்றி வளர்த்த செடிகளோடுஎல்லாம் உறவு கொண்டாடு வதைக் கேதே என்ற ஜர்மன் பாவாணர் பெரிதும் பாராட்டி இயற்கையனைத்தையும் உறவாகக் கொள்ளுகிற இந்திய ரின் பேருள்ளத்தை எண்ணிஎண்ணி வியக்கின்றார். அத் தகைய பேருள்ளம் தமிழ்ப்பேருள்ளமேயாகும். நீரூற்றி வளர்த்தாள் சகுந்தலை. பாலூற்றி வளர்த்தாள் தமிழ் மகள் ; அவ்வுறவைத் தான்மட்டு மன்றித் தன் மகளும் கொண்டாடுமாறு வாழ்ந்துவந்தாள். மணலில் கொட்டை முதலியவற்றை மறைத்து வைத்துப் பின் மணலை வரிந்து இருகையையும் கோத்து வரிமணல்மேல் வைத்து ஒருத்தி இருப்பப் பிற மகளிர் அக் கொட்டையிருக்கும் இடத்தில் கை வைத்தெடுக்கும் விளையாட்டு இன்றும் தமிழ்ச் சிறுமி கள் மிகமகிழ்ந்து விளையாடுவது ஒன்றாகும். அவ்வாறு விளையாடிய தமிழ் மகள் ஒருத்தி புன்னைக் கொட்டையை மணலிலேயே மறந்துவிட்டுச் சென்றாள் ; அது முளைவிட்டு வளரத் தொடங்கியது; தன் குழவி எனப் பேசத் தொடங்கி

ளுள்; பாலும் நெய்யும் ஊற்றி வளர்த்தாள்; பின்னே மண மகளானுள்; மகளிரையும் பெற்ருள்: இம் மகளிரோ புன்னையே போல விட்ட இடத்திலே ஆர அமர நில்லாமல், ஓடிஆடிப் பானையை உடைத்தும் பாலினை உருட்டியும் பிற குழவிகளை அலைக்கழித்தும் வந்தனர். அந்நிலையில் அவர்கள் மேல் சிறிது சினந்தோன்ற நிற்பவள், தன் முதற்குழவி யான புன்னை, விட்ட இடத்திலேயே வேரூன்றியதைப் புகழ்ந்தாள். இவ்வாறு பன்முறை வற்புறுத்தியதைக் கேட்ட மகளும், அப் புன்னையைத் தன் தமக்கையாகவே நம்பி வாழ்ந்தாள்; பின்னொரு நாள், தன் தலைவனேடு கூட வருகையில் அப்புன்னை தன் தமக்கையாகலின் அப் புன்னை நீழலில் தலைவனேடு நகையாடவும் நாணிநின்ரு ளாம். உறவாடுதல் எத்தனை தொலைவு சென்றுள்ளது கண்டீர்களா !

"விளையா(டு) ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகும்"என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மோடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்க நீநல்கின்
நிறைபடு நீழல் பிறவுமார் உளவே" (நற். 172)

என்ற பாட்டில் உயிர்களை எல்லாம் உறவாய்க்கொண்டு பாராட்டும் உயிரன்பின் ஒருமைப்பாட்டை யாரே வியவா தவர் !

இவர்கள், செல்வம் எனக் கொண்டதும் இவ் வுயிரன் பின் ஒருமைப்பாட்டுக்கொத்ததே யாம்.

" நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம்என் பதுவே " (நற். 210)

என வருவதன் உயர்வைத் தமிழர் அறிந்தின்புறுவாராக!

அன்பு என்றால் வெறுங் காதலன்று ; உணர்வும் அறிவும் உணர்ச்சியும் இயைந்ததோர் நிலை ; அன்பாயினார் ஒன்றாகின்ற நிலை. நிலத்திலே பொழிந்த மழைநீர் அந்த நிலத்தின் நிறமும் சுவையும்பெற, நிலமும் நீரின் தன்மை பெற்று நெகிழ்ந்து குழைகிறது. காதலனும் காதலியும் அவ்வாறு ஒன்றுபடுகின்றனர் எனச் செம்புலப்பெயல் நீரை ஒரு புலவர் உவமை கூறினர். அவ் வுவமையினும் இன்சுவை மிக்கதும் நறுமணங் கமழ்வதுமான ஒருவமையைக் கபிலர் பெருமான் நற்றிணையிற் கூறுகின்றார். தாமரை எங்கோ நீரில் பூக்கின்றது. அதன் தேன் அம் மணமும் இனிமையும் பெறுகிறது. சந்தன மரம் எங்கோ காட்டில் வளர்கின்றது. இயற்கை இவ்விரண்டின் தாதையும் ஒருங்கு கமழவைக்கச் சந்தன மரத்தில் தேன்கூடு கட்டுதல் அமைகின்றது. சந்தனத்தின் நறு மணமே தேனின் மணமாகிறது ; ஆனால், சுவையோ தேனின் சுவையே. இவ்வாறு இயற்கை வழியே தலைவனும் தலைவியும் ஒன்றாகி ஒருவர் இயல்பு ஒருவரதாக இருவரும் ஒருவராகின்றனர். ஒருவரை விட்டு ஒருவர் வாழ்தல் எங்ஙனம் கூடும் ?

" நின்ற சொல்லர் நீடுதோன்(று) இனியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்தா(து) ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை

நீரின் றமையா உலகம் போலத்
தம்மின்(று) அமையா நம்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே !'' (நற். 1)

இத்தகைய வாழ்க்கை இக்காலத்திற்கும் ஏற்றது அன்றோ?

இப் பிறவியில் மட்டுமன்று அவர்கள் ஒன்ருக வாழ விரும்பியது. "யான் இறப்பதற்கு அஞ்சவில்லை ; ஆனால் மறுபிறப்பில் தலைவனை மறப்பேனே என்றுதான் அஞ்சுகின்றேன்" என்று கூறும் தலைவியின் கற்பு நிலையை என்னென்று புகழ்வது ?

" தோளும் அழியும் நாளும் சென்றன
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணுங் காட்சி தவ்வின ; என்நீத்(து)
அறிவு மயங்கிப் பிரிதா கின்றே !
நோயும் பேரும் மாலையும் வந்தன்(று) ;
யாக்(கு) ஆகுவென்கொல் யானே ? ஈங்கோ
சாத லஞ்சேன் ; அஞ்சுவல் சாவிற்
பிறப்புப்பிறி தாகுவ தாயின்
மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே " (நற். 397)

எனவரும் பாடலைக் காண்க.

இவ்வாறு இருமனமும் ஈருயிரும் ஒன்ருகித் தம்மையே மறந்து முனைப்படங்கி இறை பணி நிற்குந் தூய இன்ப வாழ்வை மறந்து ஊற்றின்ப வாழ்வையே காதலெனக் கொண்டு உணர்வு நுட்பம் ஒன்றுமின்றி நிற்கின்ற காலம் வந்தது. அப்போதுதான் " காமம்......இழித்திடப்பட்ட தன்றே " என்று சிந்தாமணி பாடத் தொடங்கியது. அது முதல் தமிழன் கெட்ட நாள் தொடங்கியது ; அடிமை வாழ்வுந் தொடங்கியது. தூய இன்ப வாழ்வைத் தமிழன்

தானும் வாழ்ந்து உலகிற்கும் வழிகாட்டி வாழ்ந்து உதவ் வானாக !

மற்றும், நற்றிணை ஆராய்ச்சியால் தெரியவரும் வழக்கங்கள் பல; வரலாற்று நூல் உண்மைகள் பல ; இயற்கை அழகுகள் பல ; இலக்கண மரபுகள் பல. ஆனால், அவற்றை எல்லாம் ஆசிரியர் முறையாகச் சங்க நூல்கள் அனைத்தும் கொண்டு கோவை செய்தல் வேண்டு மாதலின் இங்கு விரித்தலிற் பயனில்லை.

அகத்திணையில் பல சுவையும் வரக் காண்போம். போசன், 'சிருங்காரம் எனும் உவகைச் சுவை ஒன்றே உளது ; அதன் வகைகளே மற்றைய சுவைகள் அனைத்தும்' என்று வடமொழியில் வற்புறுத்தியுள்ளான். இக்கொள்கையின் உண்மையைப் பிற அகத்திணை நூலிற் காண்பது போல நற்றிணையிலும் காண்கின்றோம். குறிஞ்சி நெய்தல் முல்லை பாலை மருதம் எனப் பகுத்துப் பார்க்கும்போது இவ்வுண்மையைக் காண்போம்.

இனிக் குறிஞ்சி முல்லை என வகுத்தவற்றை உரிப் பொருள் அளவில் கொள்ளாது, பிற இடத்தும் அவ் வரையறைகளைக் கொள்வது குருட்டு வழியே யாகும் என் பதனை உணர்ந்த நற்றிணைப் புலவர்கள் அக்கட்டுப்பாட்டை மீறியும் பாடிப் புதுவழி கண்டுள்ளார்கள்.

"சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை
ஏதில் ஆளனும் என்ப.....................
கண்டல் வேலிய ஊர்அவன்
பெண்டென அறிந்தன்று பெயர்த்தலோ அரிதே." (நற். 74)

"பாண ! பரத்தையோடு கூடினான் தலைவன் என் பதனை நீ மறுத்துரைத்து என்ன பயன் ? ஊரெல்லாம் அவளை அவன்பெண்டு எனக் கூறுகின்றதே" எனத் தலைவி பாணற்கு வாயில் மறுத்தது மருதத்துக்குப் பொருந்துவ தாகக் கூறவேண்டுவதை நெய்தற்குப் பொருந்தக் கூறியது

காண்க. மற்றொரு பாடல் அவர் கூறும் பெண்களின் இயல்பை மிக அழகாக எடுத்துரைக்கின்ற தாதலின் முழுவதும் கூறுதல் பொருத்தமாகும்.

“ சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினல் யானே
அலர்சுமந் தொழிகஇவ் வழுங்க லூரே. ” (நற். 149)

இப்பாட்டு உடன்போக்குக் கூறுதலின் பாலை யுரிப் பொருட்கு ஏற்ற பாலைத் தலைமகனைக் கூறுது கொண்கன் என நெய்தல் நிலந் தோன்றக் கூறுதல் காண்க. இத்தகைய பாடல்கள் இன்னும் பல. ஆகவே, தமிழ்ப் புலவர்கள் கண் மூடிகளாய்ப் பழைய வழக்கிலே சிறைபட்டுக் கிடந்தவர்கள் அல்லர் என்பதனை நாம் உணர்தல் வேண்டும். இடைச் சங்கத்தில் உள்ளவர் எனக் கருதப்பெறும் தொல்காப்பியர் நற்றிணைப் புலவர்க்கு மிக மிக முந்தியவர் என்பது இதனால் வலியுறுதல் காண்க. திணைமயக்கிற்குஇடமமைத்த அவரும் குருட்டு வழியை நிலைநாட்டினர் அல்லர். இடைச் சங்கம் அழிந்த காலத் திருந்தவனாக இறையனாரகப் பொருளுரை கூறும் முடத் திருமாறனுடைய பாடல்கள் இரண்டு (105, 228) நற்றிணையில்தான் அமைந்துள்ளன. அப்பெருமையும் இத்தொகை நூற்குத்தான் பொருந்துகிறது.

———

12. இலக்கிய மரபு

யாப்பு

'நாலு பேர் போன வழியே நல்ல வழி' என்பது பழமொழி. தேய்ந்த வழியிலே போவதுதான் உலகின் இயல்பு; உயிர்களின் இயல்பு. ஒவ்வொரு முறையும், ஒவ்வொருவரும், தத்தமக்கென ஒவ்வொரு வழியை அமைப்பது என்றால், உலகத்தில் வாழ முடியாது. ஓடி வருகிற தண்ணீர் வெள்ளமும், பழைய வழியில்தான் ஆண்டு தோறும் ஓடுகிறது: அதனால் அல்லவா ஆறுகள் என்று பேச இடம் ஏற்படுகிறது! அப்படியே, புலவர்கள் பாட வரும்போதும், முன் கையாண்டு பழகிப் பயன்பெற்ற முறையைக் கையாள்வதே இயல்பு. எந்த நாட்டிலும், ஏறக்குறைய ஒரே வகையான பாட்டு முறையே வழங்கிவருகிறது. இதனாலேயே, இலக்கிய மரபு, கவி மரபு என்று பேச இடம் ஏற்படுகிறது. தேய்ந்த வழியில் போவதுபோலப் பழகிய மரபினைப் பின்பற்றுவதால் வீண் வருத்தம் இல்லை; வீண்பொழுது போக்கும் இல்லை; எளிமை உண்டு; விழுமை உண்டு; எல்லாம் திறந்த பாட்டையே; முன் நடந்த வழிதானே என்ற ஊக்கமும் உறுதியும் உள்ளக் கிளர்ச்சியும் பொங்கும்; நம் முயற்சியைப் புது வழியில் செலுத்தி வெற்றியும் இன்பமும் பெற வாய்ப்பும் உண்டு.

ஆனால், பழைய வழியின் அருகே புதிய வழியும், சென்று பழகி இருந்தால், அதிலே போக மறுப்பவர் உண்டோ? பழமைவெறி கொண்டவர்கள் அவ்வாறு மறுப்பதும் உண்டு. போகாத வழியில் போக அஞ்சுவதும் இயல்புதான். அஞ்சுபவரை வீணே வெருட்டுவதால், ஆவது ஒன்றும் இல்லை. பழைய வழி நல்ல வழியானால், அதிலே போக மறுப்பதும் வெறியே ஆம். ஆனால், அந்தப் பழைய வழி, போவார் அற்று முள் மூடிப்போனால், கால் நோவ உடல் நோவ, பழமை ஒன்றே நாட்டமாய், அதிலேயே போக முயல்வதும் பெருவெறியாம். முள்

முதலியன களைந்து, நல் வழியாக்கி உதவுவது பெரிய தொண்டாகும். வழிக்குச் சொன்னதெல்லாம் இலக்கிய மரபுக்கும் ஒத்ததே ஆம். புதிய கவிமரபுகள் எழலாம்; பழைய கவிமரபுகள் திருத்தம் பெறலாம். புதுமை என்பதொன்றே கொண்டு போற்ற இடம் இல்லை; பழிக்கவும் இடம்இல்லை. அவ்வாறே பழமை என்பதொன்றே கொண்டு பழிக்க இடம் இல்லை; புகழவும் இடம் இல்லை. இலக்கிய இன்பமாம் பயன் ஒன்று கொண்டே பழிக்கவோ புகழவோ வேண்டும்.

பாட்டிற்குக் கணக்கற்ற இலக்கணங்களும் அணிகளும் கூறியவர்கள் வட நூலார்களே. அவர்களும், முடிவில் 'சஹ்ருதயன்மாருக்கு ஆஹ்லாதகரமாவதே பாட்டு என்பதாயிற்று' என்றார்கள். இதனைத்தான், 'உணர்வினில் வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்' என்றார் பவணந்தியார். ஆதலால், கவிமரபு என்பது காவிய முறையை அறிய ஓர் எளிய வழியே அன்றிக் காவியம் செய்யும் வழியாகாது. தருக்கம் கற்று வாதம் செய்யக் கற்றவரும் இல்லை. இலக்கணம் கற்றுக் கவிபாடக் கற்றவரும் இல்லை. ஒரு பெண்ணின் நெற்றி இவ்வளவு அகலம் இருக்க வேண்டும்; கை இவ்வளவு நீளம் இருகக வேண்டும்; இடுப்பின் சுற்றளவு இவ்வளவு இருக்க வேண்டும் என்றெல்லாம் அறிந்து ஒரு பொம்மை பண்ணலாம். ஆனால், அந்தப் பொம்மைக்கு உயிர்கொடுக்க முடியுமா? உயிர் இயங்குதற்குத்தானே கையும் காலும்! உயிர் இல்லையானால், இத்தனையும் இருந்து யாது பயன்? இலக்கணம எல்லாம் தவறுதுவரக் கவி பாடினாலும் பாட்டு என்ற உயிர்நிலை இல்லையானல் உயிரில்லாப் பாட்டே வரும்; பொம்மையே மிஞ்சும். பாடுபவன் உண்மைப் பாவலனாதல் வேண்டும். உள்ளே காட்சி எழுதல் வேண்டும். அந்த உட்பாடு வெளிப்பாடாவதே கவி. உள்ளே ஒன்றும் இல்லையானல் வெளியே என்ன வரக்கூடும்? சீர், தளை தட்டாமல் பாடினால் மட்டும் பாட்டாகி விடுமா? பதும பந்தம், பாடை பந்தம் முதலி

(1) The poet is [illegible] is not made.
(2) யாப்பெருங்கலக்காரிகை – இலக்கணநூல்

யன எல்லாம் பாட்டாகி முழங்குமா? பல வகை அணி-களைக் கூறும் சந்திராலோகம், தண்டியலங்காரம் முதலிய நூல்-களைக் கற்றுப் பாடினால் பாட்டாகி விடுமா? 'காக்கைபோற் கரிய கூந்தல் என்ற உவமையில் அணி இலக்கணக் குற்றம் இல்லை; இருந்தாலும் பாட்டாகுமா?' என்று கேட்கிறார் பேராசிரியர். 'கருவிலே திருவுடையவர்களே கவிகள்' என்பது பழமொழி. தாம் கண்ட மெய்ப்பாட்டோடு தாம் கண்டதனைக் காட்ட வல்லவர்களே கவிகள். அந்த ஆற்றல் இல்லையானால், பாட்டெல்லாம் வெற்றுரவாரமே ஆகும். இலக்கணம் கற்றுப் பயன் இல்லை. 'காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்ற பழமொழி இதனாலேயே எழுந்தது.

கவியுணர்ச்சி ததும்பி வழியும்போது, அதனை வெறும் உணர்ச்சி வெள்ளமாக ஓடிப் பாழாய் ஒழியவிடுதல் ஆகாது. வெள்ளத்தினை அணைகட்டி மடைவழியே வயலிற் பாய்ச்சினால், நீண்ட நாள் அதன் பயனைப் பெறலாம். குதிரையை ஓட விடுவோர், அது போகுமிடம் எல்லாம் போக விடுவதில்லை; கடிவாளமிட்டுச் சேணமிட்டு அதன் ஓட்டத்தினை ஒரு முறைப்படுத்தித் தாம் விரும்பியபடி ஓட்டித் தாம் விரும்பும் இடம் போய்ச் சேருவர் அப்படியே கவி வெள்ளத்தினை அணைகட்டித் தேக்கி, மடையிற் பாய்ச்ச வேண்டும். இலக்கியக் குதிரை ஓர் ஒழுங்கிற்கு அடங்கி வரும்படி, இலக்கணக் கடிவாளம் இட்டு ஓட்டிக் கவி இன்பமாம் முடிவிடம் சேரவேண்டும். யாப்பிலக்கணம் முதலியன இத்தகைய கடிவாளங்களாகும். சீர், தளை முதலியனவே கவிவெள்ளத்திற்குக் கட்டும் அணைகளாம்: மடைகளாம். ஆனால், குதிரையின் வயதிற்கும் வன்மைக்கும் தக்கபடி கடிவாளம் இடுதல் வேண்டும். எளிய, மெலிந்த குதிரையின்மேல் தாங்க முடியாத சேணம் இட்டால், கால் எடுத்து வைக்கவும் முடியாமல் அது தரைமேல் அழுந்திவிடும். பின் ஓட்டம் ஏது? போருக்குப் போகும்போது போடும் சேணத்தை, உலாப்

போகும்போது போடுவது உண்டோ? அதுபோலப் பாவலன், தான் பாடவரும் பொருளுக்கும் இடத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி யாப்பிலக்கணத்தினை அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஆனால், ஓட இடம் இருந்தால் அன்றோ, பின் அதனை ஒழுங்குபடுத்த இடம் உண்டு? ஓட முடியாதபடி கட்டு திட்டங்கள் எழுந்தால் பின்னர் எதனை ஒழுங்குபடுத்துவது? வெள்ளமே இல்லாத கட்டாந்தரையில் அணை கட்டியாது பயன்? பாட்டு வெள்ளம் பாயும்போது அது பாய உரிமை வேண்டும். அப்படிப் பாயவிட்டபின், அஃது ஒழுங்கிற்கிணங்கப் பாயுமாறு மடை கோலவேண்டும். உரிமை இன்றி, ஒழுங்கு எழ இடம் இல்லை. ஒழுங்கு இல்லையானல், உரிமை எல்லாம் வீணே பாழாகும். ஆதலின், ஒழுங்கும் கட்டு திட்டமும் இருந்தால்மட்டும், பாட்டு, வளங் கொழித்து இன்ப மூட்டும் என்பதும் சரி அன்று. கட்டு திட்டம் இல்லாத பாட்டே சிறந்தது என்பதும் சரி யன்று. முன் எல்லாம் ஒழுங்கினையும் யாப்பிலக்கணத்தினையும் வற்புறுத்திவந்தனர்; உயிர் போனதும் அறியாமல் பிணத்தை மூடிப் பேணிவந்தனர். இது கண்ட பின்னோர், உணர்ச்சி ஒன்றனையே பொருள் எனக் கொண்டு கட்டுதிட்டம் இல்லாத பாட்டே உண்மைப் பாட்டு என மன்ருடத் தொடங்கினர். இந்த இரு வகைக் கொள்கைகள் எவ்வாருனாலும், இவர்களில் சிறந்தவர்களுடைய பாடல்களை உற்றுநோக்கினல், உரிமையும் ஒழுங்கும் ஒத்து நடக்கக் காண்போம். கட்டுதிட்டத்திற்கடங்காத பாடல்கள் எனப் பாரதியார் பாடலையும் பாரதி தாசனர் பாடலையும் ஒருசிலர் கருதுகின்றனர். உண்மையில், அவை யாப்பிலக்கண அமைதியோடு இலக்கிய உரிமைச் சுவையும் பெற்று விளங்கக் காணலாம். யாப்பிலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாகப் **பல் சந்தப் பரிமளம்** பாடிய **பாம்பன்சுவாமிகள்** பாடல்கள் கட்டுதிட்டத்திற் கடங்கிய பாடல்கள் எனப்

பலர் கருதுகின்றனர். ஆனால், அவர், தம் பாடல்களில் பல பல வேறுபாடுகளோடு அவற்றின் உரிமையை வளர்ப்பதனை அவரே பல இடங்களில் காட்டியுள்ளார்.

இங்கு ஒன்று விளக்க வேண்டும் ; ஒவ்வொரு கவியின் பாடல்களையும் பாடி, அவற்றின் இலக்கணத்தினை அறிய வேண்டும். ஏதோ ஓர் இலக்கணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு, அதன்படி பாடல்கள் இல்லை எனக் கூறுதல் அடாது. சிலப்பதிகார ஆசிரியர் வரிப்பாட்டுக்களாம் இசைப் பாட்டுக்களை இலக்கிய உலகில் வழங்கவிட்டு விருத்தங்களுக்கு வித்திட்டார். சிந்தாமணி ஆசிரியர், புதிய சில விருத்தங்களை வளர்த்தார். ஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் மாணிக்கவாசகரும் ஆழ்வார்களும் வளர்த்த விருத்த வகைகளும் உள்ளன. கட்டளைக் கலித்துறையின் மிடுக்கினை என் என்பது ? சயங்கொண்டார் தாழிசைகளில் பரணி பாடினார். கம்பன் வரைந்த வகைகள் பல. சேரமான் பெருமாள் கலிவெண்பாவை உலாக் காப்பியத்தில் ஓடவிட்டார் ; திருமங்கை மன்னர் திருமடலில் ஓடவிட்டார் ; சேக்கிழார் விருத்தத்தில் எளிமையைப் புகுத்தினார் ; பேச்சு நடையோடு தொடர்பு ஏற்படுத்தித் திருமுறை நடையை உயிர்ப்பித்தார். வில்லியார் புகுத்திய சந்தங்கள் பல. அருணகிரியார் திருப்புகழும் திருவகுப்பும் வண்ணப்பாக்களின் சீரிய நிலையை விளக்குவன. திருப்புகழ் பின்னர்க் கீர்த்தனைகளாக மாறின. அருணாசலக்கவிராயர், முத்துத் தாண்டவர், வேதநாயகம் பிள்ளை, கோபால கிருஷ்ண பாரதியார் முதலியோர் இந்த வகையில் பெருந் தொண்டு செய்துள்ளனர். பலவகையான சிந்துகள், தருக்கள் முதலியவற்றை வளர்த்தவர்கள் திரிகூட ராசப்ப கவிராயர், அண்ணாமலை ரெட்டியார், சிவக்கொழுந்து தேசிகர், இராமச்சந்திர கவிராயர், பாரதியார், பாரதிதாசன் முதலியோர். இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பொது மக்கள் மனத்தைக் கவரும்படி செய்தவர் தாயுமானவர். எண்சீர் விருத்தத்தின் பெருமையை அருட்பாவிலும் சித்தர்

பாடலிலும், பாரதிதாசன் பாடலிலும், திரு. வி. க. பாடலிலும், காணலாம். புகழேந்தியார், வெண்பா ஓசையை நீட்டிக் காவியமாக வரும்படி செய்தார். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பாவும், இராகவையங்காரின் பாரி வெண்பாவும் இந்த நூற்றாண்டில் எழுந்தவை. பெண்கள் விரும்பிப் படித்துவரும் அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, தேசிங்குராசன் கதை முதலியவை தாழிசை ஓசையோடு புது இலக்கியமாக எழுந்தவை. தமிழிலக்கியத்தில் சிறந்த பாவலர்கள் எனப் பெயர் பெற்றவர் எல்லாம் புதிய புதிய வழியை அமைத்தவர்களே எனலாம். ஆனால், இவை அனைத்தும் பழைய பாக்களாக அடங்கிவிடும்; பழைய மரபு சிதைந்தது என்பதற்கு இல்லை.

"உணர்ச்சி, வெள்ளமாய்ப் பொங்கி வழியும்போது, வாயில் வந்தபடி பாடினால் அன்றோ உள்ளதனை உள்ளபடி கூறியதாகும்?" என ஒரு சிலர் கேட்கின்றனர். பொங்கி வழிந்தாற் போதாது; அது நம்முடைய மனத்தையும் இயக்கவேண்டும். நீராவி வண்டியில், நீராவி பொங்கி வழிந்தால், வண்டி ஓடுமா? அஃது ஒரு வடிவம் பெற வேண்டும். எப்படி ஓர் அறையில் அடையுண்டு வருவதால், அஃது உரத்தோடு உந்தி, வண்டியை ஓட்டுமோ, அப்படியே, பாவலன் உணர்ச்சியும் சிதறுண்டு போகாது ஓர் ஒருப்பாட்டு வடிவம் பெறவேண்டும். அப்போதுதான் அவன் மனத்தில் எழுந்த ஒற்றுமைக் காட்சி நம் மனத்திலும் ஒற்றுமைக் காட்சியாய் இன்பம் ஊட்டும். தான் கண்ட காட்சியினைப் புலவன், சொற்களைக் கொண்டு நம் மனத்தில் தீட்டுகின்றான். நம் மனத்தில் ஒருப்பாட்டு வடிவம் தோன்ற வேண்டாவா? ஓவியம் எழுதும்போது ஒற்றுமை நயம், நிறங்கள் வழியே தோன்றும்; காவியம் எழுதும்போது, இந்த ஒற்றுமை நயம், சொல்லமைப்பில் எழும் ஓசை நயத்தின் வழியே தோன்றும். இந்த ஓசை நயத்தினை Rhythm என்பர் மேனாட்டார். இந்த ஓசை நயம் மாறிமாறிச் சிதறாது

ஒருபடித்தாக வரவேண்டும். 'ஆராரோ ஆரரிரோ' என்று தாலாட்டும்போதும், இந்த ஓசை நயத்தின் ஒருமைப் பாடு நன்கு விளங்கவில்லையா? ஒப்பாரி வைத்தழும்போது இயல்பாகப் பாட்டு அமைவதனைக் காணலாம். 'தம்படி கொடுங்களேன் தருமதுரைகளே' எனத் தெரு ஓரத்தி லிருந்து பிச்சை கேட்கும் குருடனுக்கும் இயற்கையாக இந்த ஓசை நயம் விளங்கிவிடுகிறது. தாளம் போடுவது போல ஓசை அமையவில்லையா? தாளத்திற்குச் சீர் என்று பெயர். இந்தச் சீர் அமைப்பு உலகத்தின் இயற்கை; நமது இயற்கை. நாம் மூச்சு விடுவதும் தாளம் போடுவது போலத்தான். நமது இரத்தம் துடிப்பதும் ஒரு சீரமைப் பைப் பெற்றுத்தான். ஆதலின் நமது பாட்டில் சீர்கள் அமைவது வியப்பன்று.

இந்தச் சீர் அமைப்பால், பாடலைக் கேட்பாரது உள் ளம் மட்டுமே அன்றி, உடலும் பாட்டோடு ஒத்துத் துள் ளத் தொடங்குகிறது; அவர்கள் அறிவினை ஓயவிட்டு அமைதியாக்கித் தூங்கச் செய்கிறது. தாலாட்டுப் பாட்டு இப்படிச் செய்வதனைக் குழந்தை முதல் கண்டிருக்கிறோம் அன்றோ? 'அறிவு தூங்கும்போது பாவலன் கூறுவதனை எல்லாம் நம்பத் தொடங்கி விடுகிறோம்' என்கிறார் பொக்கான் என்ற பெரியார்.

நமது நெஞ்சு, நாம் சிரிக்கும்போது துடிப்பது வேறு; அஞ்சி நடுங்கும்போது துடிக்கும் தாளவகை வேறு; கோபம் பொங்கும்போது துடிக்கும் சீர் வேறு; நளிர் சுரத் தில் ஓடும் ஓசைநயம் வேறு. அவ்வாறே, பாட்டும், பல பல சுவைக்கும், இடத்திற்கும் தக்கபடி வெவ்வேறு சீரோடு வெவ்வேறு ஓசைநயம் பெற்று வரும்; சிலபோது துள்ளிக் குதிக்கும்; அகவிப் புலம்பும்; தூங்கி விழும்; செப்பிப் போகும். பரந்து சென்று, தொலைவில் இருப்பாருக்கும் கேட்பது இந்த ஓசை நயமே ஆம். எழுத்துக்கள் திருத்த மாகக் கேளாதபோதும் இந்த மனநிலையிற் பாடுகின்றான்

பாவலன் என உணர்த்துவது இந்த ஓசைநயமே ஆம். இதனையே பா என்பர் தொல்காப்பியர். இதுதான் தமிழ்ப் பாக்களின் அடிப்படை. இதனை அறியவே யாப்பிலக்கண ஆராய்ச்சி எல்லாம் எழுந்தது. அந்த ஆராய்ச்சியில் இதனை மறத்தலாகாது. முன்னோர், பாவை அடிகளாகப் பிரித்துப் பார்த்தனர்; அடியைச் சீர்சீராகப் பிரித்தனர்; இப்படிப் பிரிப்பதற்கு எதுகையும் மோனையும் இயல்பாக அமைந்த நுட்பத்தை வியந்தனர்; சீர்கள் ஒன்றோ டொன்று பல வகையில் தளைகளாகப் பின்னிக்கொண் டிருக்கின்ற அழகினைக் கண்டனர்; இந்தச் சீர்களின் சிறப்பியல்பை அறிய, அதை அசைஅசையாகப் பிரித்து வழங்க வேண்டுவதாயிற்று; அசையின் இயல்பினை அறிய எழுத்துஎழுத்தாகப் பிரித்து, உண்மை கண்டனர். ஓசைநயத்தின் உண்மை இயல்பினை அறியவே இத்தனையும் செய்தனர் என்பதனை நாம் மறத்தலாகாது. எழுத்துக்கள் நீண்டோ குறுகியோ ஒலிப்பதும், அசைகள் சீராய் இயைந்து வருவதும், சீர்கள் பின்னிக்கொண்டு அடியாய் வருவதும், அடிகள் சிறியனவாகவோ பெரியனவாகவோ வருவதும் எல்லாம் எதற்காக? பாவலன் மனக்கண்ணில் கண்ட காட்சியைப் பிறரும் காணும்படி செய்விக்கவே ஆம். எல்லாம் இந்த நோக்குடையனவே. இந்த நோக்கினை விட்டு, எழுத்திலும் சீரிலும் எதுகையிலும் மோனையிலும் ஈடுபடுவது பாட்டினைக் கொல்வதாக முடியும். நோக்கு என்பதே பாட்டில் எல்லாவற்றினையும் அடக்கியாள வேண்டும் எனத் தொல்காப்பியர் வற்புறுத்துகின்றார்.

பாவலன் கண்ட மனக்காட்சி அதே வடிவத்தில் நம்எதிர் தோன்ற வேண்டும் என்பதே நோக்கம். மனக்காட்சியின் ஒற்றுமை பாட்டிலே பாவின் ஒற்றுமையாகத் தோன்றவேண்டும். ஆனால், நமது நா ஒரே சுவையைச் சுவைக்க விரும்பாது, பல சுவைகளையும் சுவைக்க விரும்புவது போல, நம் காதும் கருத்தும் பல வகை ஓசைகளைக் கேட்கவே

விரும்புகின்றன. ஆதலின், பாவின் ஓசை நயத்தின் ஒற்றுமையினிடையே, வேற்றுமையும் தோன்றவேண்டும். தமிழ்ப்பாக்கள் எத்தனை நூறு வகை! ஒவ்வொன்றிலும் எத்தனையோ மாற்றங்கள் எழலாம். ஆதலின், ஒரு வகையாகத்தான் வரவேண்டும் எனக் கருதுவது அறியாமையே.

முதல் அடியும் கடைசி அடியும் அடிப்படையான ஓசை நயத்தினை விளக்கிநிற்கும். இடைஇடையே பொருளின் போக்கிற்கு ஏற்பச் சிறிய மாறுதல்கள் வருதல் இன்பமூட்டும் வழியாம். ஒற்றுமையில் வேற்றுமை இவ்வாறு வரும். ஆசிரியப் பாவே ஆயிரம் அடிவரையில் பழைய நாளில் நீண்டு செல்லக்கூடியது. இதில் இணைக்குறள் ஆசிரியப்பா என்ற வகை இவ்வாறு பலபல வேற்றுமையுடன் அடிகள் சிறுத்தும் பெருத்தும் வர அமைவதனைத் திருமுருகாற்றுப்படையில் காணலாம்; திருவாசகத்தில் வரும் திருவண்டப் பகுதியில் காணலாம். 'தூங்கு கையான் ஓங்கு நடைய' என்ற பாட்டு ஆனை அசைந்து நடப்பது போலத் தூங்கி அசைகிறது. இந்த வஞ்சி ஓசையில் பட்டினப் பாலை பலவகை ஓசை மாற்றங்களோடு வருகிறது. ஆனை நடையில் ஓர் அழகு உண்டு. இஃது ஆழ அழுத்திப் பதித்துப் போகும். நாட்டு வருணனை வஞ்சியோசையில் அழகாக அழுத்தம் திருத்தமாக அமைந்து வரப் பத்துப் பாட்டில் காண்கிறோம். வஞ்சிப் பாட்டும் ஆசிரியப் பாட்டும் ஒருவகையால் ஓரினமாகும். இந்நாளில் ஆசிரியப் பாவால் சுந்தரம் பிள்ளை மனோன்மணீயம் என்ற தலைசிறந்த நாடகத்தை ஷேக்ஸ்பியர் நாடக நடையில் இயற்றியுள்ளார். பண்டைக் காலத்து உறழ்கலிபோல இங்கு ஆசிரியப்பா இருவர் பேச்சுக்கு ஏற்றவாறு இந்த நாடகத்தில் அமைவது ஒரு சிறப்பாகும். பாரதியார் பாடிய பாஞ்சாலி சபதமும் அகவலே. பின்னே தாழிசை ஓசையோடு பெண்கள் மிக விரும்பிப் பாடும் அல்லியரசாணிமாலை முதலிய புது நயங்கள் இங்கிருந்து வளர்ந்துள்ளன. இதிலே குதிரையோட்டமும்

பி.எ. 8

போராட்டமும் ஒலிக்கும்படி தேசிங்குராசன் கதை சந்தப் பாட்டே போல ஓடும் புதுமையையும் காண்கிறோம்.

சங்க காலத்துப் புலவர்கள் பாவின் அமுத வெள்ளத்தினை வடித்துத் திரட்டி எடுத்துச் சிறிய அளவில் அமைத்துத் தர முந்தினர். சிறு சிறு பாடல்கள் புகழ்பெற்றன. பாடல்களின் அடிகளை எண்ணியே குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்று நூல்களைத் திரட்டினார்கள். வெண்பா தனிப்பாட்டாகவே சிறக்கும். முத்தொள்ளாயிரம் முதலிய நூல்களில் இந்த அழகினைக் காணலாம். சிறந்த கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகச் சூத்திர நடையில் திட்பம் நுட்பம் செறிய உபதேசம் போலச் சொல்வதற்கு வெண்பா மிகமிக உதவியது. நாலடியார் போன்ற நூல்களைப்பற்றிச் சொல்லவேண்டுமா? திருக்குறள் இரண்டடியில் பெரிய மந்திர வித்தை செய்கிறது. உபதேசப் பொருளின் விரிவுக்கு ஏற்பக் குறளாகவும், சிந்தாகவும், பஃறொடையாகவும் வெண்பா வரும்; எடுத்தும் படுத்தும் அழுத்தியும் திருத்தியும் பொருள்களை விளக்குவதற்கு ஏற்ப, நேரிசையாகவும் இன்னிசையாகவும் வரும். இந்த வெண்பாவை ஒருசேர நீட்டிப் பாடிப் புலவர் கலிவெண்பா வாக்கினர். உபதேசம்போல வரும் தனி வெண்பாக்களையும், நீட்டிப் பாடிக் கலியோசையூட்டிப் பொருள் தொடர் நிலைச் செய்யுளாம் காவியம் பாடினர் நளவெண்பா இயற்றிய புகழேந்தியார். இந்த வெண்பாவின் சூத்திர நடையைப் பயன்படுத்திக் குணவீர பண்டிதர் நேமிநாதம் என்ற இலக்கணம் பாடினர். ஆனால், அவர் முயற்சி வேர் கொள்ளவில்லை.

அகவலோசையையும் செப்பலோசையையும் ஒன்றாய்க் கலக்க முயன்று பார்த்தனர் தமிழர்; பெரு மருட்சியாகத் தோன்றியது. கைக்கிளைக் காமம் புறநிலை வாழ்த்து முதலிய பொருள்வகைகளில் வரும் இருமனப் பான்மைக்கு

ஏற்ப இந்த இரண்டு ஓசைகள் அமைந்துவந்தன. மருட்பா என்று, இதில் ஈடுபட்டவர் இதற்குப் பெயரிட்டனர்.

கலிப்பா என்பது ஒருவகையால் வெண்பாப் போன்றது; ஆனால், குதிரைபோலத் துள்ளியோடுவது. இது, காதற்சுவையைப் பாட மிகமிகப் பொருத்தமானது; Sonnet என்று ஆங்கிலத்தில் கூறுவதுபோன்று கட்டு திட்டம் மிக்கது. முதலில் பொருளைச் சுருக்கமாக அறிவிக்கும் முன்னுரையே தரவு. பின் அதில் உயிர்நிலையான கருத்தினை மூன்று முறை சுவை ததும்பப் பன்னிப் பன்னிப் பலவகையாகப் பேசுவதே தாழிசை. முடிந்த முடிவினை விளக்குவதே சுழிக்கப் பாயும் சுரிதகம். தொடங்குவது, பின் கதை சிக்கலுறுவது, அதன்பின் சிக்கலவிழ்ந்து முடிவது—இந்த மூன்று நிலையையும் இப்படிக் கலிப்பா விளக்கியது: நாடக வழக்கிற்கு எடுத்த பா எனத் தொல்காப்பியரே கூறுவர். இதிலே எத்தனையோ வகை: பேச்சும் விடையுமாக வருவது உறழ்கலி. மிடுக்கோடு சந்தக் குழிப்புப் போல வரும் அராகமும் இதில் உண்டு. கருத்தினைப் பாரிக்கும்போது, அலைபோலத் தாழிசை அடியின் அளவிலிருந்து மெல்லப் பாதிப் பாதியாகக் குறைந்துகொண்டே வந்து ஒவ்வொரு சீரே ஒவ்வோரடியாகவும், ஒவ்வொரு சொற்றொடராகவும் வருகிற அம்போதரங்க அழகும் இதில் வரும். துணியைக் கட்டுவார் வைக்கும் கொய்சகம் போல இவை எல்லாம் உறழ்ந்தும் பிறழ்ந்தும் கொச்சகமாக வருவதும் உண்டு. வெண்பாவே தொடர்ந்து பல அடிகளாகப் பன்னிரண்டுக்கு மேற்பட்டு வந்தால் கலியோசை பெற்றுக் கலிவெண்பாவாக அமைவதனைக் காணலாம். இந்தச் சங்க காலத்தில் இசையோடு பாட்டுக்கள் வழங்கியதும் உண்டு; பரிபாடல்கள் அத்தகையனவே. அவையும் நாடகத்திற்குரியனவாம்.

கலித்தொகைக்குப்பின் கலிப்பாவாகப் பல பாக்கள் வரக் காணோம். கட்டளைக் கலித்துறை என்பது 7-ஆம்

நூற்றாண்டில் திருநாவுக்கரையர் கையிலும் நம்மாழ்வார் கையிலும் சிறப்புற்று வளர்ந்தது. விருத்தம் என்பது அந்நாளைய பெயர் ; நல்ல மிடுக்குடையது. இந்தப் பாட்டு, கோவைகளில் நாளுக்குநாள் நயமுற்று விளங்கி வளர்ந்து வந்துள்ளதனைக் காணலாம். அந்தாதி, மாலை முதலிய சிறு பிரபந்தங்களும் இந்தக் கட்டளைக்கலித்துறையில் வந்தனவேயாம். ஆனால் அது, கட்டுதிட்டம் நிரம்பியது. எழுத்து எண்ணியன்றோ பாட வேண்டும் ? கட்டுதிட்டங்களுக்கிடையே பாட்டின் வளம் சுரப்பதற்கு இந்தப் பாட்டை எடுத்துக் காட்டலாம். அகத்தெழும் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்குச் சிறப்பாக அமைந்தது இஃது ; உணர்ச்சிக் குதிரைக்குக் கடிவாளமிட்டு உலாப் போகவிடுகிறது.

கொச்சக வகைகள்தாம் பின்னாளில் விருத்தங்களாக வளர்ந்தன என்பது நச்சினார்க்கினியர் கொள்கை. 7-ஆம் நூற்றாண்டில் இப்போது விருத்தங்கள் என நாம் வழங்குபவை பல வகையாக எழுந்தன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமணபுத்தப் பாவாணர்களும் பலபல விருத்தங்கள் பாடிப் பார்த்து அவற்றினை நிலைநாட்டினர். இதற்கு முன்னர்ப் பொதுமக்கள் இசையோடு பாடிய பாக்கள் இந்த விருத்தங்கட்கு வித்திட்டன என்பதனைச் சிலப்பதிகாரம் படித்தவர்கள் அறிவார்கள். தாழிசை என்றால் தாளம் பட்ட ஓசை. பலவகைச் சீர்களையும் பலவகையாகச் சேர்த்துப் பல தாள வகைகளுக்கு ஏற்பப் பாடலாம். அப்படி வரும் தாழிசையடியை நான்கடியாகப் பாடினால் விருத்தமாம். ஆயிரக் கணக்கான விருத்தவகைகள் எழுவதற்கு வழி இதுதான். எவ்வளவு நீளமாகவும் ஓடிவரலாம் போலும் ! திருவருட்பாவில் பார்க்கவில்லையா ? ஆனால் நம் மனம் மிகப் பெரிய அடியை ஓரடியாக உளங்கொள்ள முடியுமா ?

ஆதலால், விருத்தங்கள் வடமொழிச் சார்பால் எழுந்தவை என்பது உண்மை அன்று. எனினும், இவற்றை வடமொழிக் கண்கொண்டு பின்னாளில் இலக்கணப் புலவர்கள்

ஆராய்ந்தனர்; வடமொழியை ஒட்டியே, சென்ற நூற்ருண்டில் எழுந்த விருத்தப்பாவியல் ஆராய்ந்தது. ஆனால், வெண்டளை வந்து ஒலியை நிரப்புவதனைக் கண்டால் வடமொழியையே புகலிடமாக அடையமுடியாது என்பது தெளிவாம். சந்த விருத்தம், தாண்டகம், எழுத்தொத்த அடிகள் வரும் விருத்தம், மாத்திரை ஒத்த அடிகள் வரும் விருத்தம், சீர் ஒத்த அடிகள் வரும் விருத்தம் எனப் பல வாறு விருத்தங்கள் பெருகின. இவற்றிற்குப் பெயரிடு வதிலும் குழப்பம் பெருகியது. கட்டளைக் கலித்துறைக் குப் பெயராக அமைந்த விருத்தம் என்பது, பின்னர் இவற்றிற்குப் பெயராக அமைந்தது. யாப்பருங்கலமே யாப்பிலக்கணத்தினைத் தெளிவாகக் கூறியதால் அதில் கூறிய வழக்காக இவை துறை தாழிசை விருத்தம் என நிலைபெற்றுவிட்டன. ஒவ்வொரு பாட்டு வகைக்கும் உதாரணம் செய்து நூலாக வழங்கும் வழக்கம் வந்தது. குமரகுருபரர் பாடிய சிதம்பரச் செய்யுட் கோவை என்ற நூலும், இரத்தின கவிராயரது மாறன்பாவும் பாவினமும் என்ற நூலும், இந்த நூற்ருண்டில் பாம்பன் சுவாமிகள் பரக்கப் பாடிய பல் சந்தப் பரிமளம் என்ற நூலும் இந்த வழக்கினை நன்கு விளக்குகின்றன. தனிப்பாக்கள்போலத் தொடர்நிலைச் செய்யுள்கள் என்ற காப்பியங்கள் எழுந்தன. கம்பனுடைய இராமாயணத்தில் விருத்தப் பாவின் உயர்நிலையைக் காணலாம்.

இடைக்காலத்துப் புலவர்கள் அடி எதுகையும், பொழிப்பு மோனையும் எல்லாப் பாக்களிலும் வரப் பாடு வதில் வல்லவராயினர். அதனால், பின்னே வந்தவர்கள் அவ்வாறு பாடுவதுதான் இலக்கணம் எனக் கருதிவிட்டார் கள். ஆனால், எந்த யாப்பிலக்கணமும் அவ்வாறு வற்புறுத்த வில்லை என்பதனை நாம் மறத்தலாகாது. பாம்பன் சுவா மிகள், பெரியோர் பாடல்கள் தவறிய இடங்களைப் பரக்க எடுத்துப் பேசியுள்ளார். அவ்வாறு தவறு என்று கொள்

வதிலும் வேற்றுமை நயம் தோன்றப் பலவகையாகப் பாடும் உரிமை பாவாணர்க்கு இருந்து வந்த மரபினையே அந்த இடங்கள் குன்றின் மேலிட்ட விளக்கெனக் காட்டுகின்றன என்று கொள்வதே மேல். படைப்புக் கடவுளுக்குக் கை விலங்கு இடுவார் யார்? வெற்றி பெற்றால் என்றும் வாழ்வர்; தோற்றால் இருந்த இடம் இன்றி மறைவர். இவ்வாறு எதிர்காலம் தோன்றாத உலகில் உறுதியாக முன் பின் பாராது குதிக்கின்ற தறுகணாளரே தமிழ்ப்பாவாண ராவர்.

சங்க காலம் முதல் இசைப் பாடல்கள் பொதுமக்க ளிடையே பரவிவந்தன. விருத்தம் இதன் வழியே வளர்ந்த வரலாற்றினையும் கண்டோம். சிந்து என்று இப்போது வழங்குவன இந்த வகையைச் சேர்ந்தவையே ஆம். தத்துவ ராயர் பாடுதுறையில் நாடோடிப் பாடல்வகைகள் பலவற் றைக் காணலாம். பாரதியார் பாடல்கள் எனச் சிறப்பிக்கப் பெறுவன சிந்துகளே. இதனைப் பெரிய பாட்டாக நொண்டிச் சிந்தெனப் பாடி வருவதனையும் சுவைக்கின்றோம். இது வருணனைக்கு மிக ஏற்றது. வில்லியார் சந்த விருத்தம், அருண கிரியார் திருப்புகழ், திருவகுப்பு, பிறர் கீர்த்தனை முதலியன சந்த விருத்தங்களே ஆம். ஆதலின், புதியனவாக ஒருவகைப் பாடலும் இப்போது வழங்கவில்லை. புதுப்புது வகையில் சிந்துகளைப் பாட முயல்வதே புதுமை. சினிமாப் பார்த்து வரும் குழந்தைகளும், தாம் கேட்ட சிந்து வகையில், புதிய பாடல்கள் இயற்றுவதனைக் கேட்டுள்ளேன்; தேமாங் காய் புளிமாங்காய் என அறியாமலே பாடுகின்றனர். இது வும் புதுமை அன்று. தொல்காப்பியர் நாள்முதல் இன்றைய சிறுவர்கள் நாள் வரையிலும் ஓசை நயமே தமிழ்ப்பாட் டின் சிறப்பியல்பாகும்.

யாப்பு ஒரு கலை. அதில் பழகுதல் வேண்டும். தேமாங் காய் புளிமாங்காய் முதலிய வாய்பாடுகள், தன்னதன முதலிய சந்தக் குழிப்புகள்—இவை எல்லாம் அவ்வாறு

பழகுதற்கு உதவுவன ; பாட்டு வெள்ளத்தில் நீந்த உதவும் சுரைக் குடுக்கைகள். பழகியபின் புது வழிகள் தோன்றும். பழகாமலே பழமையில் குற்றம் கூறத் தொடங்குவது எட்டாத பழம் புளிக்கும் என்ற நரியின் வரலாருக முடியும். இந்தக் கலையிற் பழகப் பழகப் பாட வாராமற் போனுலும் பாடிய பாவலர்களின் யாப்புக் கலையின் நுணுக்கங்கள் விளங்கவிளங்கப் பேரின்பம் துளிர்க்கும். இதற்கேனும் இலக்கிய யாப்பு மரபினை அறிவது நல்லது. அதனுல், கவி பாடுவதற்கு வழி துறையும் தெரியும்.

13. பாட்டின் நற்செய்தி

பாட்டுப் பாடுகிறோம்; பாடக் கேட்கிறோம்; கேட்க மிகமிக விரும்புகிறோம். நாட்டுப்புறத்தில், குறத்தி பாட வந்தாலும் பெண்கள் கூடிவிடுகின்றார்கள். பாரதப் பிரசங்கம் என்றால் பெரிய திருவிழாத்தான். தெருக் கூத்து என்றால் எள்ளி நகையாடாது, ஆணும் பெண்ணும், அறுபதாண்டைய கிழமும், ஐந்தும் முடியாத குழவியும் ஊர் முழுதும், திரண்டு வருகின்றன; விடிய விடியக் கேட்கின்றன; பார்க்கின்றன. பழையபழைய பாடல்களே! இருந்தாலும், ஒவ்வொரு முறையும் புதுமை யாகக் கேட்டுத் தம்மை மறக்கின்றனர் மக்கள். நேற்று உண்ட சோறுதானே என்று, இன்றும் சோறு உண்ணாமல் இருக்கின்றோமா? இதனை இயற்கை என்று சொல்லாமல் என்ன என்று சொல்லுவது? உடலுக்கு உணவு இன்றி யமையாததுபோலப் பண்பாட்டு வாழ்க்கைக்குப் பாட்டு இன்றியமையாதது. வயிற்றுப் பசியைத் தீர்ப்பது சோறு; உள்ளப் பசியைத் தீர்ப்பது பாட்டு. குறைமனம் நிறைமன மாகிறது: இந்த நிறைநிலையே பாட்டின் நற்செய்தி. துண்டு துணுக் காய் இருக்கும் உலகம், கலங்கிக் குழம்பிக் கிடக்கின்ற உலகம் நிறை நிலையாய்த் தெளிந்து உயிர் பெற்று ஒளிர்வது பாட்டில்தான்.

ஆதலின், பாட்டு வெறும்பொழுது போக்கன்று; துன்பத்தை மறக்க உட்கொள்ளும் கள் அன்று; இன்பக் கனவு காண உண்ணும் அபினியும் அன்று. வாடி வதங்கிய நெஞ்சம் அள்ளிக் குடிக்கும் தெள்ளிய நீர் இது; கவலையின்றி உலகினைப் பார்த்துக் களிக்கும் இன்பப் பலகனி; உள்ளத்தினை முழுநிலையில் வைத்து உலகத்தினை யும் முழுநிலையில் காட்டும் உணர்வு விளக்கு. உழையாத உடம்பு, ஊளைச் சதை. பாடாத உள்ளம், பாழான பள்ளம்; நோய் பிடித்த நெஞ்சம். உடற்பயிற்சியினாலே உடலை வளர்த்தால்

போதுமா? உள்ளமும்வளரவேண்டும். அதுதான் உண்மையான உயிர் வளர்ச்சி. உள்ளமோ பல வகையாக வளர்கிறது. உலகப் பொருள்களை இன்னதுஇன்னது என வகைசெய்து அறிகின்றோம். அறிவு வளரவளர, நுட்பமாக ஊன்றிப் பார்த்து, மேலும் பலவற்றை ஆராய்ந்து வகை செய்தறிகின்றோம். வெறும் மனிதன் பூவெனக் கண்டு போகின்றான்; அறிஞனோ பூவின் நுட்பப் பிரிவினை எல்லாம் அறிகின்றான்; உள்ளம் விஞ்ஞானமாக வளர்ந்தோங்குகிறது. அறிவு கொண்டு உலகினை ஆள்கிறோம். இதில் ஓர் அழகுண்டு. கல்வி அழகே அழகு என்கின்றோம்.

பார்த்துக்கொண்டு இருந்தால் போதுமா? உலகோடு ஈடு கொடுத்தாகவேண்டும். பல செயலும் செய்து வாழ்கின்றோம். நடத்தையும் ஒரு கலை, பலர் பல வகையாகத் திறம்பட நடத்துகின்றனர்: ஹிட்லர் ஒரு புறம்; கோட்சே ஒருபுறம்; அண்ணல் காந்தியார் ஒரு புறம்; அடிகள், ஒழுக்கத்து அழகால் உயர்ந்து என்றென்றும் விளங்குகின்றார்.

இவற்றை அழகு என்று பேசும் பேச்சே புத்துலகப் பேச்சு; மக்கட் பேச்சு. மக்கள் மனத்திலேதான் இந்த எண்ணம் துளிர்க்கிறது. எறும்பு, தேனீ முதலியவற்றின் சமுதாய வாழ்க்கையினை ஒழுக்கம் எனப் பேசுவார் இல்லை. அந்த வாழ்க்கை எல்லாம் அவற்றின் உடலில் தலைமுறை தலைமுறையாக ஊறிவிட்டுள்ளது. கதிரவன் ஒளி இன்றியமையாதது என அறிந்த செடி, நிழலில் தலைகீழாக அமைக்கப்பெற்றிருந்தாலும், கீழிரங்கி வளைந்து, பின் தலையைத் தூக்கிக்கொண்டு வளர்ந்து, கதிரவனை நோக்கித் தலையை நீட்டுகிறது; இதனைக் காண்கின்றவர் இந்தப் பச்சைச் செடியின் பச்சை விஞ்ஞானத்தினைப் பாராட்டாது இருக்கமுடியுமா? ஆனால், இதுவும் அதன் பச்சை இரத்தத்தில் ஊறியதே அன்றிப் பகுத்தறிவால் வகை செய்து கண்ட உண்மை அன்று. அறிவுக் காதலும்

அறக் காதலும் மக்களுக்கே உண்டு. அறிவு வெறிகொண்டு வானத்திற் பறந்தோ, வடமுனை தென் முனையிற் சென்ருே, இமயமலையின்கொடுமுடிமேல் ஏறியோ உயிரையும் பொருள் படுத்தாது உண்மை காண முயல்வோர் மக்களே. அணு ஆராய்ச்சி செய்வோரும் மக்களே. ஒழுக்க நிலையில் நின்று உயிரினையும் இழப்போர் காந்தியார் போன்ற பெருமக்களே. அறிவினையும் அறத்தினையும் அழகினையும் பெருஞ்சுட்டாக மதிப்பது மக்களது சிறப்பியல்பாகும். மக்கள் மனத்தே அவை பெறும் சிறப்பே அவற்றின் சிறப்பாகும். கடவுட் படைப்பில் சிறந்த மனிதன் படைக்கும் கடவுட் சிறப்பே இவை எனலாம். இவை அனைத்தினையும் சிறுநிலை முதல் பெருநிலை வரை அழகாகக் கண்டு களிப்பதும் மக்கட் சிறப்பே ஆகும். இந்த அழகு காட்சிதான் புலவர் காட்சி. ஆண் மயிலின் தோகை பெண் மயிலின் காதலைத் தூண்டுகிறது. சிலந்தி பசியாறும் ஊட்டுப்புரையே சிலந்திக்கூடு. தேனீ உழைத்துவரும் தொழிற்சாலையே தேன்கூடு. இவற்றினைக் கண்டு இன்ப அழகு எனப் பாராட்டுபவன் மனிதனே அன்றி இவை அல்ல. எங்கும் இதனைக் கண்டு இதனை நற்செய்தியாகக் கூற வருவதே பாட்டின் பண்பாகும்.

மனிதனும் முக்கண்ணன்தான். அறிவு ஒரு கண்; அறம் ஒரு கண்; அழகுதான் நெற்றிக்கண். இன்ப அனுபவமே இந்த அழகு. கற்கண்டினை நாவிலிட்டுச் சுவைப்பது போலத் தன்னலமான அனுபவம் அன்று இது. கற்கண்டு தின்பதெல்லாம் கலையனுபவமாகாதது இதனுல் தான். நளவீமபாகம் எல்லாம் விலங்கின் கலையே அன்றி மக்கட் கலை அல்ல. ஆனுல், விலங்கும் அறியாத விலங்கின் கலை, மக்கள் வளர்த்த விலங்கின் கலை. பாட்டிலே அழகன்றி வேறு ஒரு நாட்டமும் இல்லை; அறிவு நாட்டமும் இல்லை; பயன் நாட்டமும் இலலை; ஊதிய நாட்டமும் இல்லை; காண்பதனைக் கண்டு களிப்பதே உண்டு. களிப்பது உடல்

மட்டுமன்று; மகிழ்ச்சி, உள்ளத்திலும் ஊறுகிறது; இன்பம், உயிரிலும் பாய்கிறது. அனைத்தும் ஒன்றான அமைதி ஒளிர்கிறது. முழுநிலை அனுபவம் அது.

அந்த அனுபவம் சீனி தின்பதுபோல வெறும் நுகர்ச்சியாக இருந்தால் வெறும் கனவாகும். பாட்டு எழுவது எங்கே? உள்ளே எழும் அனுபவம் பொறுக்க முடியாததாகிறது; வெளியிட்டால்தான் ஆறுதல் உண்டாகும் போலத் தோன்றுகிறது: பாடுகின்றான் பாவலன். பாவாணரது அனுபவம் இவ்வழியாக நமக்கும் இன்ப அனுபவமாகிறது. அனுபவ நிலை எப்போதும் ஓர் உணர்ச்சி நிலையே ஆம். ஆதலின், உணர்ச்சி ததும்புவதே பாட்டு. உணர்வின் வல்லார் அணிபெறச் செய்வதே செய்யுள்; வெறும் அறிவு அன்று; சுவைஞரது அனுபவத்தில் தோய்ந்த ஈர நெஞ்சின் ஒளியே உணர்வு. அந்த உணர்வின் வல்லோரே பாவாணர். ஆனால், உணர்ச்சி மட்டும் பாட்டாகாது. மகன் இறந்தது கேட்ட தாயின் மனத்தில் துன்ப உணர்ச்சி பொங்குகிறது; அழுகை அடைத்துக் கொண்டு வருகிறது; அழாது இருக்க முடியவில்லை; அழுகிறாள். இது பாட்டா? இது வெறும் அழுகை. அழுகை வேறு, அழுகைப் பாட்டு வேறு. அணி பெறச் செய்வன செய்யுள். கலைத் திறம் வேண்டும். இதுதான் வெளிப்பாட்டுத் திறம்; செய்யுளியற்றும் ஆற்றல். அடித்துக்கொண்டு அழுவதில் அழுகையின் கொந்தளிப்பே உண்டு. பொன்னைக் காய்ச்சி உருக்கிவிட்டால் போதுமா? அஃது ஒரு வடிவம் கொள்ளுமாறு வார்க்கவேண்டும். உணர்ச்சியும் ஒருப்பாட்டு வடிவம் பெற்றுப் பாட்டாக வெளிவரவேண்டும். உணர்ச்சியை அமைதி நிலையில் திரும்ப நினைப்பதே பாட்டு என்பர் பெரியார். அழுகையில் ஒரு முறையும் ஒழுங்கும் புகுமானால் அஃது ஒப்பாரிப் பாட்டாக அமைகிறது; அணிபெறச் செய்த செய்யுளாகி விடுகிறது.

செய்யுள் பொருளுக்கு இடமாம். பொருள்தான் உயிர் நிலை. எந்தப் பொருள்? பசு என்றால் எல்லாப் பசுவுமே நினைவுக்கு வருகின்றன. நம் சொல் எல்லாம் இப்படிப் பொதுவான நிலையையே சுட்டும். செய்யுள் உலகில் பசுவென்றால் தனி நிறமும் தனி வடிவும் தனி இயல்பும் தனி இடமும் பெற்றுச் சிறந்து விளங்கும். காமதேனு எனக் கூறி அதற்கு இறக்கையும் படைத்துவிடுவான் பாவலன். மனிதன் எனப் பொதுவாகவா பேசுகின்றனர் பாவாணர்? இராமன், கோவலன், சீவகன் என்றே பாடுவர். இராமன் என்ற பெயரைக் கேட்டு மயங்குதலாகாது. வால்மீகி இராமன் ஒரு சிறந்த மனிதன்; துளசிதாசர் இராமன் ஒரு கடவுள்; கம்பர் இராமன் கடவுள்ஞானி. அவரவர் அனுபவம் அவரவர்க்கே உரியது. ஆகையால் சிறப்பு நிலைக் காட்சியே இங்குண்டு; பொதுக்காட்சி இல்லை.

பொதுவேட்கையில் திளைக்கின்ற நம்முடைய புது உலகம் இதனைக் கொள்ளுமா? மாறுபட்டுச் சீறி நிற்கும் தனி நாடுகளும் ஒன்றாகவேண்டும் என உழைக்கும் உலகம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு காட்சி கண்டு போராட விடுமா? காட்சி என்றால் தனித்தனிக் குறும்பாகாதா? தனித்தனிக் கிறுக்காகாதா? ஆகாததுதான் இங்குள்ள வியப்பு. மக்கள் அனைவர்க்கும் அடிப்படையானதொரு விருப்பே பாட்டாம். அனைத்தினையும் ஒன்றாக்கும் முழு அனுபவமானால் அங்கே வேறு வேறு பிரிந்து நிற்பது எங்கே? பொதுமை என்பதில் என்ன பொதுமை? ஆயிரம் செங்கல்லை எண்ணி ஒரு சிறு கல்லை அடையாளமாக வைப்பார்கள். அதுபோலப் பல்லாயிரக் கணக்கான பசுக்களையும் சுட்டும் வெறும் அடையாளமாகப் பசு என்ற சொல்லை வைக்கின்றனர். அடையாளத்தினை முதற் பொருள் என மயங்குவதால் வரும் கேடுகள் பல. இந்தக் கேட்டினைத் தடுத்து நம்மைக் காப்பது முதற் பொருளை முழு நிலையில் காட்டும் பாட்டே

ஆம். காண்பானும் காட்சியும் வேறு நில்லாது ஒற்றித்த தனி அனுபவமே பாட்டு ஆதலின், அனைவர்க்கும் ஒத்த அனுபவமே அஃது ; உப்புச் சப்பற்றதன்று ; தனித்தனிச் சிறப்புநிலைச் சுவையோடு விளங்குவது என்பதனைக் குறிக்கவே பொதுமை இல்லை என்றோம். சுவை அற்ற நிலை இல்லை ; சுவை ததும்பி வழிகிறது. சிறப்புநிலையில் வைத்துப் பொதுமையின் பரப்பெல்லாம் சுவைக்கலாம். பலபல பலகணி வழியாக உலகினைக் காணலாம். காண்பது உலகம் முழுதினையேதான் ; உலகத்தின் அடிப்படையாக வெள்ள மிடும் அழகினைத்தான் ; ஆனால், காணும் இடத்திற்கேற்ப அழகுகளும் சுவைகளும் வேறுவேறாய்த் தோன்றி இனிக்கும். ஒரே பொன்னில் செய்த பலவகை அணிகள் என்போமா ? ஒரே வெல்லத்தில் செய்த பலவகை அப்பம் என்போமா ? காண முடியாதவற்றையும் காணுமாறு செய்கின்றான் பாவலன். தொலைநோக்கியில் தோன்றும் கண்ணாடி வில்லை போலத் தொலைவில் உள்ளனவற்றை அருகே கொண்டு வந்து காட்டுவது பாட்டு. கண்ணுக்குப் புலனாகாத நுண் பொருள்களைப் பெரியவாக்கிக் காட்டும் பெருக்காடிபோல வும் பாட்டுக் காட்சி அளிக்கும்.

அவ்வாறு முறுகி எழும் அனுபவம் சொல்லுக்கு எட்டாது. அதனைச் சொல்லிலேற்றி நம் மனத்திலே அப்படியே பாயும்படி செய்து நாமும் அனுபவிக்குமாறு செய்கிற வியத்தகு செயலே பாட்டு. வெளிப்பொருளை உள் அனுபவத்தில் வைத்துப் புடம்போட்டு உருக்கி வார்த்து அதற்குத் தன் உயிரையே கொடுத்துப் பாட்டாக உலவ விடுகின்றான் பாவாணன். வெறும் சடமான கல்லை, அறிவு ததும்பும் நெற்றியோடும் உறுதியூன்றிய மோவாய்க்கட்டை யோடும் இன்ப அன்பு பூக்கும் முறுவலோடும் கடவுளுரு வாக்கிவிடுகின்ற படைப்புச் செயலாம் சிற்பக் கலையைக் காணாத தமிழனும் உண்டா ? பாவலனும் ஒரு சிற்பி : சொல் கொண்டு செதுக்குபவன் பாவாணன்.

என்ன செய்கிருன்? 'கா்கா்' எனக் கூவித் தன் இனத்தினைக் காக்கை அழைக்கிறது. அதனைவிடத் தருக்காகப் பேசி ஏமாற்றித் தான் விரும்புவதனையும் வெளிப்படுத்தி உலகினை வேலை வாங்குகிருன் மனிதன். இந்தப் பேச்சாளியின் திறம் நாம் அறிந்தது ஒன்றே. இந்தப் பேச்சினைப் பாட்டாக்குகின்ருன் பாவலன்; சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் புதிய சொற்ருெடர்களை அமைக்கின்ருன்; ஓசை நயத்தை வல்லென்றும் மெல்லென்றும் பலபல வகையில் அமைக்கின்ருன். ஓட்டமும் நடையும் வேண்டியவாறு வருகின்றன. பசு என்ருல் பொதுவான நிலையே மனத்தில் எழுகின்றது; பால் சூடிக்கும் இன்பமும் நினைவுக்கு வருகிறது. புது மழையில் மண் குளிர்ந்து மணம் வீசப் புல்லின்மேல் மழைத்துளி முத்துப்போல் வெயிலில் மிளிர, எருதோடு காராம்பசு மாலையில் புல்லாங்குழலிசைவழியே தன் கன்றினை எண்ணி வீடு திரும்புகிற காட்சி புலவர் மனத்தில் தோய்ந்து அவர் வாழ்க்கையின் போக்கிற்கேற்ப உருக்கொண்டு பாட்டாக மலர்கிறது. உவமைகள் அடைகள் முதலியன புலவன் செய்யும் கண்கட்டு வித்தைக்கு உதவுகின்றன. தான் அனுபவித்த அனுபவமே பாட்டைக் கேட்கின்றவன் மனத்திலும் எழுமாறு செய்துவிடுகின்ருன் புலவன். பொருளை அறிவிக்கும் ஆற்றலும், இன்பமூட்டித் துய்ப்பித்து அனுபவம் ஊட்டும் ஆற்றலும், செயற்படுத்தி வேலை வாங்கும் ஆற்றலும் சொல்லுக்கு இருப்பதுபோல, வேறு பல கருத்துக்களை இடத்திற்குத் தக்கவாறு குறிப்பாக நினைப்பூட்டும் ஆற்றலும் உண்டு. அந்தஅந்த ஆற்றல் அந்தஅந்த வகையில் எழுமாறு, சொற்களை இழைத்துச் சாணை பிடித்து மின்னிப் பொலியச்செய்து கோக்கின்ருன் புலவன். இவை எல்லாம் கைத்திறம்; செய்திறம்; பழக்கத்தால் பாட்டு இழும் என ஓடும். ஆனுல், இயற்கைத் திறமும் வேண்டும். கருவிலே திருவுடையார்க்கே பழக்கம் பயன்படும். இல்லையானுல்,

'காரிகை கற்றுக் கவிபாடுவதைவிடப் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று.' ஓசை எழுத்து சொல் அடி பா பொருள் என்பன வெவ்வேறு நிற்பதில்லை. கொற்றன் சுவர் எழுப்புவதுபோலப் பாவலன் இவற்றை ஒன்றன்மேல் ஒன்றடுக்கிப் பாட்டுப் பாடுவதில்லை. பாட்டு ஒரு கட்டுத் தறி அன்று; உயிருள்ள உடல் போன்றது. உடலில் உறுப்புக்கள் உயிரோடு ஒன்ருக வளர்வதேபோல இவை எல்லாம் ஒன்ருக முதலிலிருந்து பாட்டின் கற்பனு சக்திக் கேற்ற உருக்கொண்ட நோக்கத்திற்கேற்ப வளர்ந்து முற்றிவரும். புலவன் கண்டதனைக் கண்டபடி காட்டும் கண்கட்டே பாட்டு. புகைப்படம் பிடிப்பதுபோலக் காட்டுவது அன்று; நெருப்பில் விட்ட நெய் நெருப்போடு நெருப்பாகிக் கொழுந்துவிட்டு எரிவதுபோலப் புலவன் காணும் காட்சியும் புலவனெடு ஒன்ருகி ஓங்கி வளர்கிறது; பாட்டாக வழங்குகிறது.

ஐன்ஸ்டைன் போன்ற விஞ்ஞானிகளின் அறிவு அனுபவமும் உண்மையே; காந்தி அடிகள் போன்ற அறவாணர் அறஅனுபவமும் உண்மையே. அவ்வாறே கம்பன் போன்ற பாவாணர் அழகு அனுபவமும் உண்மையே. இந்த மூன்று அனுபவமும் முகிழ்த்து நிற்பதே பாட்டனுபவம் எனலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த மூன்று வேறு கண்கொண்டு உலகினைக்காணும் ஆற்றல் உண்டு. ஆனல், ஒருசிலரிடத்தே ஒவ்வொன்று முனைந்து நிற்கும். வேறு நின்று மாறுபட்டுச் சிறி விழுகிற இந்த உலகில் ஒற்றுமைக் காட்சியை வெறுஞ் சொல்லாரவாரமாக அன்றி, இன்ப அனுபவமாகக் காட்ட வேண்டும். உலகக் காட்சியைக் கடவுட் காட்சியாக அறவண வடிகள் கண்டாலும், அதனைப் பாட்டாகப் பாடிக் காட்டினல் அன்றி, அந்த அனுபவம் மக்களது பொதுஅனுபவ மாதற்கு வழி இல்லை. மனிதனது சிறப்பியல்பு சொல்லை ஆளல்; ஆதலின், சொல்கொண்டு இயங்கும் பாட்டுக் கலையே பிற கலையினும் மக்கள் மனத்தினைக் கவர்கிறது.

அதனை மந்திரமாகவும் கருதி வருகின்றனர். இந்த ஒற்றுமைக் காட்சியை மக்கள் உளங்கொளும் நற்செய்தியாகத் தருவதே பாட்டாம்.

கடவுள் என்ருல் காதினை அடைத்துக்கொள்வோர்க்கும் இந்த நற்செய்தியைக் கொண்டுசெல்கிறது பாட்டு. ஒரு சிறிய புழுவினைப்பற்றிய பாட்டும் புதிய உலகினைத் திறந்துகாட்டுகிறது. 'எலும்பில்லாத புழுவுக்கு வெயில் பிடிக்கவில்லை ; சாகிறது ; அன்பு இல்லாத முரடனுக்கு அறம் பிடிப்பதில்லை ; வாழ அறியாது சாகிருன்' என்கிருர் வள்ளுவர். குயில், மயில், மேகம், வண்டு, தாமரை, தண்ணீரில் அலை—இவை யாவரும் அறிந்தனவே. 'மேகம் முழவு ; வண்டு யாழ் ; அலையே திரைச்சீலை ; தாமரையே விளக்கு ; மயில் ஆடும் பெண் ; குயிலே பாடுமகள்' என அரச ஓலக்கத்தில் நடக்கும் இசையரங்காக, வயல்வெளி, கம்பன் கண் எதிர் காட்சி தருகிறது. இராமன்போன்ற பெருமகனது வரலாறு உலகில் பலவற்றையும் விழுங்கித் தன்னுள் அடக்கிக்கொள்கிறது. கம்பன் கதையில் வாராதது யாது? எவ்வளவுக்கு எவ்வளவு புலவன் உலகினை விழுங்கி ஏப்பமிடுகின்ருனே அவ்வளவுக்கு அவ்வளவு ஒற்றுமைக் காட்சி உயர்ந்து நீண்டு அகன்று விளங்குகிறது ; அவ்வளவுக்கவ்வளவு உலகினைத் துலக்கமாக்கி நம் கண்எதிர் காட்டி நம் கருத்தினை விளக்குகிறது. உலக அழகின் காட்சியினை வெளிப்பொருளாகக் கதையில் வைத்துக் காணமல் தம் உயிர்க்கு உள்ளாகவே தம் வரலாற்று அனுபவமாகக் காட்டும் பெருமக்களுடைய பாடல்கள் மேலும் ஒருபடி சென்று பாட்டுலகின் கதிர்மணியாக விளங்குகின்றன. நம்மாழ்வார்,மாணிக்கவாசகர்,டாண்டே முதலியோருடைய பாடல்கள் கடவுளையும் உலகினையும் ஒன்ருக விழுங்கி ஒன்ருன நிலையில் எழுந்த முழு அனுபவத்தினை நாமும் அறிந்து உணர்ந்து இன்பமுறத் திகழ்கின்றன. இவை

தருவது எல்லாவகையாலும் கடவுட் காட்சியேஆம். கடவுட் காட்சியினும் சிறந்த இன்பம் ஏது?

ஒற்றுமைக் காட்சியின் இன்பமே பாட்டின் நற்செய்தி. எல்லாவற்றையும்-துன்பத்தினையும் அலங்கோலத்தினையும் கும்பகருணனையும் கவந்தனையும் - இன்பமாகக் காணும் காட்சி இஃது. இந்தக் காட்சியில் பழகவேண்டாவா? அரசர் கட்டளை யன்று; நண்பரது இடித்துரையும் அன்று; காதலியின் கொஞ்சுதலே பாட்டென்பர் வட நூலார். முடிவும் இன்பம்; முதலும் இன்பம். அக்காட்சியில் அனைத்தும் அடங்கிக்கிடத்தலினால் அறம்பொருள் இன்பம் வீடு என்ற நான்கின் உண்மைக் காட்சியும் தோன்றும் அன்றோ? வேறு என்ன வேண்டும்? ஆனால், அமைதி இன்பம் அன்றி வேறொரு நற்செய்தியும் பாட்டில் நேர்முகமாக முழங்குவதில்லை; மறைமுகமாக முழங்கலாம்.

'ஆராரோ ஆரரிரே' என்றதாலாட்டோடு எழுகின்ற வெற்றொலிப் பாடலிலிருந்து கடவுட்பாடல் வரையுள்ள பாக்களைக் குழவி முதல் அனுபவித்து இன்பமுற்று வரு



கின்றோம். 'கீச் கீச்' என்ற ஒலிதானே! குரல்வளையில் ... இதழின் துடிதுடிப்புத்தானே! இந்த வெறுஞ் ...ன் துடிதுடிப்பைக் கடவுட்காட்சியாக மாற்றும் ...ப்தியே பாட்டின் நற்செய்தி. துன்பங்களுக்கு அஞ்சி ...ங்கும் நம்மைப் பலவகைத் துன்ப வரலாற்றில் ...த்தெடுத்துத் தூயவர்களாக்கி நெஞ்சினைப் பண்படுத்... ...ன்பத்திற்கு ஈடுகொடுக்கும் நிலையில் ஓர் அமைதியை விளைவித்து இன்ப ஆழத்தில் அழுத்தி உலகினை அழகு கண்கொண்டு காணச் செய்வதே பாட்டின் பொருளாழமாம். இந்த நற்செய்தியைத் தரும் பாட்டு என்றும் வாழ்க!

---

14. சென்னை நாகரிகம்

அன்பு நெறி

மாலையிற் கதிரவன் மேற்கே மஞ்சளாய்ப் பைம் பொன் உருண்டையாய் உருண்டு, செக்கச் சிவந்து, வான முழுதும் செவ்வொளியில் மூழ்கிக் களிக்க, மெல்ல மெல்ல மறைகின்றான். உயிர்களுக்கெல்லாம் ஓய்வு பிறக்கின்றது. இவைகளைக் கண்டு இன்பச் சிரிப்புப் பூப்பதுபோல வான் மீன்கள் ஒவ்வொன்றாக அங்கும் இங்கும் தலை காட்டி வானக முழுதும் நெருங்கி நிற்கின்றன; "ஓம், ஓம், ஓம்" என்ற ஒலி, விட்டுவிட்டுத் தொடர்ந்து இன்ப இசை ஒலி யாகப் பாடுகின்றது. இஃது ஒரு மணி ஒலிதான். ஒலி வரும் வழியே திரும்பிப் பார்த்தால், பெரியதொரு கோபுரம் வானகத்திற்கு ஏறுவதற்கமைந்த படிக்கட்டுப் போல ஓங் கித் தோன்றுகிறது. அந்த எழுநிலை மாடத்தை நோக்கிப் போகின்றோம். கோட்டை போன்றதொரு கோயிலின் வாயிலாக அக்கோபுரம் விளங்குகிறது. மக்களைக் காணோம். துரிஞ்சிலும் வௌவாலும் கோபுரத்தில் குடிபுகுந்து கழுவி விட்டாற்போலத் தொங்குகின்றன. ஒரே இருள்! புறத்தே இருந்த அழகிய இயற்கையும் இருள்கின்ற இந்தக் காட்சி யைப் பொறுக்கமாட்டாமல், வான்மீன்கள், கண்ணை மூடித் திறப்பதுபோல் மின்னுகின்றன.

முன்னொரு காலத்தில் மக்கள் வாழ்ந்த இடமே இன்று பாழாகிக் கிடக்கின்றது எனத் தெரிகிறது. கோபுரத்தின் மேல் ஏறினால், எழுநிலை மாடத்தில் ஒவ்வோர் அடுக்கிலும் தூண்களே இல்லாத பெரிய மண்டபத்தில் நான்கு புறத் திலும் காற்றுக் கலந்து வீசுகின்ற அழகினையும் இனிமை யினையும் என்னென்பது! உலகத் துன்பங்களை எல்லாம் மறந்து வானுலகத்திற் புகுந்தது போன்ற மகிழ்ச்சி மனத் தில் பொங்கி வழிகின்றது. இத்தகைய கோபுரத்திலிருந்து தான் 'இராமாநுஜர்', "எனக்கு நரகம் வந்தாலும் இந்தி

உலக மக்கள் எல்லாம் என்றும் இன்ப வாழ்வு வாழ முயல்வேன் " என்று கூறித் துள்ளி எழுந்த அவர் துணிவு, நினைவிற்கு வருகிறது. அந்தத் துணிவின் வழியே, நாடுகளில் எல்லாம் சென்று தொண்டின் பெருமையே கடவுள் வழிபாட்டின் உண்மை வடிவம் எனப் பேசித் தீண்டாதாரைக் கோயில்களுக்குள் புகவிட்டுத் தமிழ்ப் பாட்டே எங்கும் பாடி அவர் ஆட முயன்ற முயற்சிகள் கண் எதிரே தோன்றுகின்றன. எல்லாம் பழங் கதையாகி மறைந்தனவே என மனம் வாடி வதங்குகிறது. இத்தகைய கோபுரத்திலிருந்து அருணகிரியார் கிளிபோலக் கவலையற்றுத் திருப்புகழ் பாடியதும் நினைவிற்கு வருகிறது. ஆம்! ஒரு காலத்தில் இந்தக் கோபுர மாடங்களில், கற்றவர் வாழ்ந்து கலைகளைப் பயிற்றி வந்தனர். இன்றும், இவற்றில் ஒவ்வொன்றும் ஒரு கல்லூரியாகலாம். மின்சாரத் தூக்கி (Lift) ஒன்று அமைத்தால். மேலே ஏறுவதும் இறங்குவதும் எளியவாகும் எனக் கனவு காணும்போது, அங்குப் புதிய திட்டப்படி மின்சார விளக்குக்கள் மின்னிப் பொலிவதனையும் மனக்கண்ணால் காண்கின்றோம்.

கோபுரத்திலிருந்து கீழிறங்கிக் கோயிலுக்குள் சென்றால், பெரிய பெரிய மண்டபங்கள்: "நாலுகால் மண்டபம், பதினாறுகால் மண்டபம், நூறுகால் மண்டபம், ஆயிரம் கால் மண்டபம் என எத்தனை எத்தனை தோன்றுகின்றன!" "ஏன் இவற்றினை வீணாகக் கட்டினார்கள்? கட்டினவர்கள் வெறியர்களா?" என்று உள்ளிருந்து உரத்த குரலில் கேள்வி எழுகிறது. " இத்தகைய மண்டபத்தில்தான் சேக்கிழார் பெரிய புராணம் அரங்கேற்றினார்; கம்பர் இராமாயணத்தினை அரங்கேற்றினார்; ஆசிரியன்மார் பலபல விளக்கங்களைக் கூறிவந்தனர் " என என்னுடைய நினைவு விடை கூறுகின்றது. முதியோர் கல்வி, இளையோர் கல்வி, பெண்கள் கல்வி எல்லாம் இந்த மண்டபங்களில் நடந்தேறி வந்தன.

அரசியல், பொருளாதாரம், [illegible], வைத்தியம், கலை
கல்வி, நிர்வாகம்

'எழுத்தறியும் மண்டபம்' என ஒன்று திருவொற்றியூரில் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் வீற்றிருப்பவரே இராமலிங்க அடிகள் பாடும் எழுத்தறியும் பெருமாள். இங்கு இலக்கண வகுப்புக்கள் நிகழ்ந்தன. பலவகைத் துறைகளில் மக்கள் இங்குப் புகுந்து கற்றனர். கடவுளே இல்லை என்கிற பூருவ மீமாஞ்சை நூல்களையும், கடவுள் எதிரேயே கற்று ஆராய்ந்தார்கள். பரந்த நோக்கம் அந்த நாளில் இருந்த நிலைமை அஃது. இசைப் பாடல்கள் பாடினார்கள்.

'சர்வ சங்கீத வாத்ய மண்டபம்' என எல்லா இன்னிசைக் கருவிகளும் முழங்கும் மண்டபம் ஆவுடையார் கோயிலில் இன்றும் இருந்துவருவது நினைவிற்கு வருகிறது. அரையர்கள் இசைப்பாட்டினைப் பொருள் விளங்குமாறு அபிநயம் பிடித்துக் கூத்தாடிக் காட்டுவதற்கு இராமாநுசர் முதலானோர் பெரிதும் முயன்ற பெருங் கதையும் மனத்திற்கு வருகிறது. கோயிலே உண்மையிற் பல்கலைக் கழகமாக அந்த நாளில் விளங்கியது. விளக்கு.

அது மட்டுமா ? இந்த மண்டபங்களில்தாம் ஊரினை ஆளும் ஊராளும் கணத்தாரைத் தேர்ந்தெடுத்தார்கள். குடத்தில், ஊரார் பெயர்களை எல்லாம் தனித்தனியே ஒவ்வொரு பனையோலை நறுக்கில் எழுதியிட்டுச் சிறுவனொருவனை அனைவர் எதிரிலும் குடத்தில் கையிட்டு ஒரு நறுக்கை எடுத்துத் தரச் சொல்லுவார்கள். அந்த நறுக்கில் எழுதியுள்ள பெயர்வழியே ஊராளும் கணத்தவராவார். 'எல்லாரும் ஓர் நிறை' என்பதனை ஒட்டிய தேர்தல் முறை அது. பஞ்சாயத்தார் என்ற வாரியத்தார் கூடி ஊராளும் வேலைகளைப் பார்ப்பதும் அந்த மண்டபங்களில்தாம். பலபல சாதியினரும் பலபல தொழிலினரும் தங்கள்தங்கள் குழுவினைப் பற்றியவற்றினை ஆராய்வதும் அங்குக் கூடித்தான். ஊராளும் கணத்தாரின் பணமிருப்பதும் அங்குத்தான். அரசர்கள் கட்டளையைக் கல்லில் அடித்து வைப்பதும் அங்குத்தான்.

Panchayat Board office, Bank, Record office, inscription
நிர்வாகம் கல்வெட்டு வரலாற்றுநூல்

'ஏழை பங்காளன்' எனக் கடவுளுக்கு ஒரு பெயர் வந்தது இத்தகைய கோயில்களால்தாம். நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கவும், படுகிடையாகக் கிடப்பார்க்கு உணவு முதலியன உதவவும் ஏற்பாடுகள் உண்டு. இவர்களை அன்போடு காப்பாற்ற, இன்று, 'நர்சுகள்' என்று சொல்லுவதுபோன்ற பணிப்பெண்களும் இருந்தனர். வேலை செய்ய முடியாமல் குருடும் முடமுமாய் இருப்பவர்க்கு அந்த நாளில் செய்திருந்த ஏழ்மை ஒழிப்புத் திட்டம் மிக அழகியது. கையில்லா முடவன் தேவாரம் முதலிய பாடல்களைப் பாடக் கண்ணில்லாத குருடன் மத்தளங் கொட்டிக் கோயிலோடு கோயிலாய் வாழ்ந்தினிதே வரக்கூடும். ஊரார் அனைவரும் ஓய்வு காலங்களில் கண்டு களிக்கத் திருவிழாக்கள் நிகழும். அந்தத் திருவிழாக்களில் குறவஞ்சி முதலிய நாடகங்களைக் கண்டு மக்கள் களிப்பார்கள். அன்னாபிஷேகம், பாலாபிஷேகம் என்பன எல்லாம் திக்கற்றோருக்குச் சோறுகொடுக்கவும் ஏழைப்பிள்ளைகளுக்குப் பால் உதவவும் எழுந்த ஏற்பாடுகளேயாம்.

இவை எல்லாம் நாம் காண்கின்ற இன்பக் கனவுகள் அல்ல; அந்தக்கோயிற் சுவர்களில் கல்லெழுத்தால் செதுக்கி வைத்திருக்கும் பழைய வரலாறுகளேயாம். எனவே, கோயில்கள், வழிபடும் இடமாகமட்டும் விளங்கவில்லை. வழிபாடுதான் உயிர்நிலை. ஆனால், அதனைச் சுற்றிச் சமுதாயத் துறைகள் அத்தனைக்கும் உயிர்நிலையாகக் கோயில்கள் தழைத்தோங்கின. இன்று மேனாட்டில் கிளர்ச்சி ஒன்று வளர்கின்றது. பள்ளிக்கூடங்களைச் சமுதாய வாழ்வின் நடுவிடமாக அமைத்துவர முற்படும் கிளர்ச்சியே அஃது. அத்தகைய கிளர்ச்சியின் பயனாகவே சென்ற காலத்தில் நம்தமிழ் நாட்டில் கோயில்கள் எழுந்தன. இந்தக் கோயில், எதிர் காலத்தில் எவ்வாறு திருந்தவேண்டும் என்பதனை இந்தப் பழைய வரலாறே நமக்கு விளக்கிவைக்கவில்லையா?

இந்தப் படமாடும் கோயில்கள் எல்லாம் நடமாடுங் கோயில்களாம் மக்களுக்கென்றே எழுந்தன. இந்த உண்மையைப் பிறர் மறக்கும்போதெல்லாம் அறிஞர்கள் வற்புறுத்தி வந்துள்ளார்கள். இதனை இந்தத் தமிழ்நாட்டில் புகவிட்டவர் யார் ? பழைய நாள்களில் கோயில்கள் இருந்தன. அவற்றிற்கு அம்பலங்கள் என்று பெயர். தில்லையில் கூத்தப் பெருமான் ஆடுகிற உள்ளிடம்போல இருப்பதே அம்பலம். அப்படித்தான் மலையாள நாட்டில் ஊர்தோறும் கோயில்கள் இருப்பதனைக் காணலாம் : அங்கு மக்களும் தங்கலாம். மக்களுக்குப் புகலிடமாவது தமிழ் அம்பலத்தின் சிறப்பியல்பு எனலாம். சைனர்களும் புத்தர்களும் தங்கள் தங்கள் அறப்பள்ளிகளில் சமுதாயத் தொண்டு செய்து வந்தார்கள். இவற்றினை எல்லாம் அறிந்த தொண்டை நாட்டுப் பெருமக்கள், இங்கு ஒரு புரட்சி செய்தனர். அதுதான் மேலே கூறிய பெரிய கோயில்கள்.

உலகினை மறந்து கடவுளை வழிபடுவது கடவுள் வழிபாடாகாது. அச்சத்தால் நடுங்கிச்செய்கின்ற பேய் வழிபாடு கடவுள்வழிபாடாகாது. இன்பப் பெருமானை அன்பினால் அகங்குழைந் துருகி வாழ்த்தி வணங்க வேண்டும். அவனுடைய அன்பின் விளக்க மன்றோ உலக மனைத்தும் ! நாம் வாழ்வதும் அவனுடைய அருளால் அன்றோ ! கடவுளுக்குப் பலபல இயல்புகள் கூறினாலும் எல்லாரும் தம் அனுபவத்தில் உணர்ந்ததாய் இருப்பது எது ? அன்பு அன்றோ ! அதுவே கடவுள். " அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் ; அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே." கடவுள், உலகமாய்ப் பூத்துள்ளான். மண்ணிலும் அவன் கடவுட்டன்மை விளங்குவதால் அன்றோ, வளங்கொழித்து நெல்லையும் பழத்தையும் அது வளர்த்துத் தருகின்றது ! அதனைப் பாழாக்காது பண்படுத்திக் காப்பதும் வழிபாடாம். நீரோ நம் உடலுக்கு உற்ற துணை ; அதனைப் பல வகையிலும் பாய்ச்சி உலகினை வளர்ப்பதோடு,

அதனைக் கெடுக்காமலும் இருப்பதும் கடவுள் வழிபாடாம். காற்றும் தூயதாகக் கடவுட்டன்மை நிரம்பி வழியுமாறு வாழ்வதே கடவுளுக்கு உவப்பான வாழ்க்கை. தீயும் அவன் திறலை விளக்குகிறது. வானும் அவன் புகழ்போலப் பரந்து அனைத்திற்கும் இடம் கொடுக்கிறது. சூரியன் இல்லையானால் உலகில் பயிர் ஏது? சூடேது? வாழ்வேது? இத்தனையும் தந்து உலகத்தை அளந்து செல்லும் சூரியனையும் திங்களையும் இயற்கை அழகெல்லாம் ஒருங்கு திரண்ட இரண்டு கடவுட் குடங்களாகக் கண்டுகளித்து, அவற்றின் ஒளியில் குளித்து மகிழ்ந்து, காலத்தினை வீணாக்காது அவற்றினாலாய பயனை எல்லாம் உலகம் உறிஞ்சிக் குடிக்குமாறு செய்யவேண்டும். இந்த இயற்கைப் பரப்பனைத்தும் உயிர்ப் பொருள்கள் ஓடி யாடும் கூத்து மேடையேயாம். இந்த உயிர்களுள் ஒவ்வொன்றிலும் கடவுள் வீற்றிருக்கின்ற காட்சிக்கு உருகி, இவைகளுக்குத் தொண்டு செய்வதே உண்மையான கடவுள் வழிபாடு. அன்பும் சிவமும் ஒன்றெனக் கூறுவது, இந்த வகையால்மட்டுமே உண்மையாம்.

இவ்வளவும் கூறியது, "இரு நிலனாய்" என்று திரு நாவுக்கரசர் பாடிய திருத் தாண்டகத்தின் கருத்தே யாகும். இஃது அவர் செய்த புரட்சி. அவர், தம் பாடலில் கைத் தொண்டினை வற்புறுத்தக் காண்கிறோம். உழவாரப் படையே அவர் கையில் விளங்கியதாகத் தலைமுறை தலை முறையாகத் தமிழர் நம்பிவந்தனர். காடு திருத்தி நாடாக்கிக் குளங்கள் தொட்டுப் பூந்தோப்புக்கள் வைத்து இருள் எல்லாம் போக விளக்குகள் ஏற்றி இன்னிசை பாடி இன்ப மூட்டுவதே அவருடைய தொண்டு. அவருடைய அடியாரான 'அப்பூதி அடிகள் அவரைப் பின்பற்றித் தண்ணீர்ப் பந்தல் முதலிய அமைத்து மக்கள் தொண்டே செய்து வந்தனர் என்ற வரலாறும் இந்தக் கருத்தினையே வற்புறுத்துகிறது. அரசியலாரையும் எதிர் நோக்காது, மக்களை ஒருங்கு திரட்டி, இத்தகைய பொதுத் தொண்டில் ஈடுபடுத்தியதும் கண்டு, "போட்டி அரசு" நிலை நாட்ட

வந்தார் எனப் பல்லவ அரசர் கருதி, அவருக்கு இடையூறு செய்ய வந்தனர் போலும் ! எனவே, அவர் காலத்திலேயே அவருடைய தொண்டு ஒரு பெரிய புரட்சி எனக் கருதப் பெற்றதோ என ஐயப்பட இடமுண்டு. ஆனால் அன்பு வெல்லும். எத்தனை நாள் அதனை ஐயுற்றுக் கிடக்கலாம் ? அரசரும் அப்பருடைய அடியவர் ஆனார் : ஆனதன் பயன் யாது ? புதுமை ஒன்றனை நிலைநாட்டியதாகத் தம்மைத் தாமே அந்த மகேந்திரவர்ம பல்லவர் பாராட்டிக்கொள்கின்றார் ; புதிய வகையில் கோயில்கள் எடுப்பித்தார். கற்கோயில்கள்—சமுதாயத் தொண்டின் உயர்நிலையாக அமையக் கூடிய கோயில்கள்—எங்கும் பரவின. கல்வெட்டுக்கள் கொண்டு, திருநாவுக்கரசரது தொண்டு நெறி, தென்னாட்டுக் கோயில்களை மாற்றியமைத்ததனை அறியலாம்.

இதுதான் அன்பு நெறி. இதனையே வடமொழியில் பக்தி நெறி என்பர். பக்தி என்பது பின்னாளில் பலபல கோலம் கொண்டு வெறிக் கூத்தும் ஆடியது. ஆனால், அதன் தோற்றுவாய், சமுதாயத் தொண்டேயாம். பக்தி என்கிற நங்கை தமிழ்நாட்டிலிருந்து வடநாடு புகுந்தாள் எனப் புராணங் கூறுகின்றது. இதிலிருந்து இந்த அன்பு நெறி தமிழர் கண்ட உண்மை என்பது விளங்குகிறது. சங்க நூல்களில் வரும் காதலன்பே உலக மக்களிடையே எல்லாம் பாயும் கடவுள் அன்பாக மாறுவது இயல்பன்றோ ? ஆகவே அன்புநெறி தமிழர் நெறியே ஆம் ; தொண்டை நாட்டு நெறியாம் ; சென்னை நாகரிகத்தின் பண்பாடும் ஈதேயாம்.

Wrapper prin*ed a' Shanti Press, Madras-1